படைப்பு
ஊற்று-8 | நதி-3 | ஜூலை 2025 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## படைப்பு இலக்கிய ஆளுமை விருதுகள் 2025














## படைப்பு இலக்கிய விருதுகள் 2025 முடிவுகள்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-8 | நதி-3 | ஜுலை 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**
**தீபிகா நடராஜன்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**தேவம் ஆரோன்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** ........ ப4
- **படைப்பு இலக்கிய விருதுகள் 2025** ........ ப.5
- **படைப்பு இலக்கிய ஆளுமை விருதுகள் 2025** ........ ப.12
- **ஒவ்வொரு தமிழனும் பாரதியையும் பெரியாரையும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும்..**
  கவிஞர் பிருந்தா சாரதியுடனான நேர்காணல் ........ ப.13
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  மு.முருகேஷ் ........ ப30
- **ரோபோவின் பாய்ச்சல்**
  கவிஜி ........ ப.37
- **கவிஞர்களின் கவிஞர் கலாப்ரியா**
  பொன். குமார் ........ ப48
- **மாற்றத்தை விதைக்கும் நாவல்**
  பிரபுசங்கர்_க ........ ப49
- **உள் டப்பியின் பச்சை விளக்கு**
  ஆண்டன் பெனி ........ ப.52
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..**
  கவிஞர் விக்ரமாதித்யன் ........ ப.59
- **நூற்றாண்டில் மீண்டும் சந்திப்பேன்...**
  மு.முருகேஷ் ........ ப.62

## சிறுகதை


- **மரம்???**

  P. சுஜாதா. ........................................ ப40

- **அன்பின் நறுமணம்**

  கு. இலக்கியன். .................................. ப.55


## கவிதை


- **என்.லிங்குசாமி.** .............................. ப.29

- **நிலாகண்ணன்.** .............................. ப.63





## *Facilities*

- *Capacity 90 - 100 (Persons)*
- *AC Hall with Audio system*
- *POP with Profile lights*
- *Tea / Coffee snacks place*
- *Projector*

**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**

+91 73388 97788, 73388 47788

# தலையங்கம்

வணக்கம். படைப்பு 'தகவு' எண்பத்தேழாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

தமிழில் கவனிக்கத்தக்க படைப்புகளை உருவாக்கிய படைப்பாளர்களுக்குப் படைப்புக் குழுமம் ஆண்டுதோறும் இலக்கிய விருது வழங்கிவருகிறது. 2024ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்கான இலக்கிய விருதுகள் இவ்இதழில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, சிறார் இலக்கியம் என்னும் பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. வாழ்நாள் சாதனையாளர் விருது, இலக்கியச் சுடர் விருது, படைப்புச் சுடர் விருது பெற்ற இலக்கியவாதிகளின் பட்டியலும் இதழில் வெளியிடப்பட்டிருக்கின்றது. 2025ஆம் ஆண்டு படைப்பு விருது பெறப்போகும் படைப்பாளர்கள் அனைவருக்கும் தகவு தன் வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறது.

கவிஞர் பிருந்தாசாரதியுடனான நேர்காணல் இவ்இதழிலும் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. தனது கவிதை வடிவங்கள், பாரதி மீதான பெரும்பற்று, ஹைக்கூ எழுதிய தருணங்கள், திரைப்பட வசன உருவாக்கச் சூழல்கள், இயக்குநர் லிங்குசாமியுடனான நட்பு, முகநூல் வாழ்த்துப் பதிவுகள், இருளும் ஒளியும் கவிதைகள் எழுதிய சூழல் போன்று தனது படைப்பு வாழ்க்கையின் முக்கிய தருணங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

கவிஞர் கலாப்ரியாவின் எழுபத்தைந்தாவது பிறந்தநாளை ஒட்டி அவரைப் பற்றிய இருவரின் பகிர்வுகள் இடம்பெற்றுள்ளன. கவிஞர் அம்சப்பிரியாவின் கவித்திறனைக் 'கவிதைக்குள் கலந்திருக்கும் கதை' பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார் மு.முருகேஷ். மனித உணர்வுகளுடன் மனிதனால் ரோபோக்கள் உருவாக்கப்பட்டால் உலகின் நிலை என்னாவது என்பது குறித்து வெளியான சாப்பி திரைப்படம் உலக சினிமா பகுதியில் அலசப்பட்டுள்ளது.

காலங்கள் மாறினாலும் மாறாத சாதிப் பிரச்சனை பற்றி எழுந்த நயினாரின் மாயப்பசி நாவல் குறித்த வாசிப்பனுபவம் இடம்பெற்றுள்ளது. ஆண்டன் பெனி முகநூல் இன்பாக்ஸ் உரையாடல்கள் குறித்த எள்ளல் கட்டுரையை எழுதியுள்ளார். கவிஞர் விக்ரமாதித்யனுக்குச் சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம் எழுதியுள்ள கடிதங்கள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. லிங்குசாமியின் ஹைக்கூக்கள், நிலாகண்ணனின் கவிதை ஆகியன இதழில் இடம்பெற்றுள்ளன.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.


– ஆசிரியர்




# படைப்பு இலக்கிய விருதுகள் 2025

படைப்பு - சமூகத்தின் இணைப்பு என்ற தாரக மந்திரத்துடன் பல்வேறு தளங்களிலும் ஓயாது இயங்கிவரும் படைப்புக் குழுமம் தன் உயிர் தாங்கும் அடித்தளமாகக் கொண்டிருப்பது இலக்கியத்தைத்தான். கலை மனதிற்குக் கைத்தட்டல்களும் பாராட்டுகளும்தான் உற்சாகமும் உத்வேகமும் ஊக்கமும் தரும் என்பதை உணர்ந்து சிறந்த இலக்கியப் படைப்புகளுக்குப் பரிசுகளும் விருதுகளும் அளித்து அங்கீகாரமளிப்பதைத் தன் தலையாய கடமையாகச் செய்துவருகிறது படைப்புக் குழுமம். வருடந்தோறும் மிகத் தகுதியான படைப்பாளர்களுக்கு இலக்கிய விருதுகள் அளித்து மகிழ்ந்துவரும் படைப்புக் குழுமத்தின் ‘படைப்பு இலக்கிய விருதுகள் 2025’ மகிழ்ச்சியுடன் இங்கு அறிவிக்கப்படுகின்றன. 2024ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நூல்களுக்காக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## நாவல்





### விருது பெற்ற நூல் : இரவோடி

படைப்பாளர் : என். ஸ்ரீராம்
வெளியீடு : பரிசல் பதிப்பகம்

தமிழ்க் கதை மரபில் என். ஸ்ரீராமின் இடம் தனித்தன்மைமிக்கது. கிராமிய வாழ்வைக் களமாகக் கொண்ட அவரது கதைகள் மண்ணையும் அதன் மனிதர்களையுமே பேசுகின்றன. அவை வெறுங்கதைகளாக அல்லாமல் பருவகாலம், பொழுதுகள், தாவரங்கள், பூக்கள், உயிர்கள், சத்தங்கள், வாசனைகள் ஆகியன நிறைந்த அனுபவங்களாகவே அமைகின்றன. இயற்கையைச் சொல்லாது வாழ்வும் இல்லை, எழுத்தும் இல்லை என்ற சங்க மரபைச் சேர்ந்தவை அவரது கதைகள் என்றாலும் நவீன கதைக்கான நுட்பங்களையும் உட்கூறுகளையும் கொண்டிருக்கின்றன.

**- எம். கோபாலகிருஷ்ணன்**

## நாவல்




### விருது பெற்ற நூல் : தாயைத்தின்னி

படைப்பாளர் : தில்லை
வெளியீடு : தாயதி / பாரதி புத்தகாலயம்

ஒரே உடலில் வசிக்கும் மூன்று பேரைப் பற்றிய கதையாக இருந்தபோதும், அதில் ஒரேயொரு கதாபாத்திரம் மட்டுமே, அந்த உடலைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தியது. அந்தக் கதாபாத்திரம் யார்? அவள்தான் தாயைத்தின்னி. அவளே தனது கதையையும், அதோடு இணைத்து புனைவையும் கொண்டு இந்த நாவலைக் கதையாடலாக மாற்றியிருக்கிறாள்.

## சிறுகதை




### விருது பெற்ற நூல் : பெருநெஞ்சன்

படைப்பாளர் : ஜார்ஜ் ஜோசப்

வெளியீடு : சீர்மை பதிப்பகம்

இத்தொகுப்பிலுள்ள கதைகள் மானுட மனங்களின் தத்தளிப்புகளை, கீழ்மைகளை, உறவுச் சிக்கல்களை, மதம்சார் போலித்தனங்களை, பிறழ்வுகளை, குழந்தைப்பருவத்தை, அதன் குரூரங்களை என எல்லாவற்றையும் இயல்பாய் அணுகி, தற்காலத்தையும் வரலாற்றையும் கவித்துவமாகவும் நுட்பமாகவும் காலத்திற்கேற்ற புனைவு மொழியால் வாசிப்பவரின் மனத்துள் கடத்திச் செல்லும் வல்லமை கொண்டவை.

## சிறுகதை





### விருது பெற்ற நூல் : அதிகார விநாயகர்

படைப்பாளர் : சீராளன் ஜெயந்தன்

வெளியீடு : நாற்கரம்

சீராளன் ஜெயந்தனின் இந்தச் சிறுகதைத் தொகுப்பின் சிறப்பு, இதன் கதம்பம். பலவிதமான மணம் மற்றும் சுவை. ஒவ்வொரு கதையிலும் கதையின் முக்கிய நிகழ்விடங்களை வாசகர் மனத்தில் ஓவியங்களாக்கிவிடுகிற மாயவித்தையை இவரின் எழுத்து மிக எளிதாக நிகழ்த்திவிடுகிறது. பல கதைகளிலும் ஆடுபவராக அல்லது ஆட்டுவிப்பவராகப் பெண்களே இருக்கிறார்கள். பல கதைகளில் சக்தியின் கூத்து நிகழ்கிறது.

# கவிதை




## விருது பெற்ற நூல் : மாயப்பாறை

படைப்பாளர் : மதார்

வெளியீடு : அழிசி பதிப்பகம்

அன்றாடத்தின் அவசரங்களில் சாதாரணமானது எனக் கவனியாமல் நாம் கடந்து செல்லும் சிறிய தருணங்களில் ஒளிந்திருக்கும் விநோதமான அழகுகளை வியப்புடன் காண நம்மை இழுத்துப் பிடித்து நிறுத்தும் தன்மை கொண்டவை மதாரின் கவிதைகள். தர்க்கங்களின் சுமை அவ்வளவாக ஏற்றப்படாத எளிமையான வரிகளில் குழந்தைகளின் வேடிக்கையும் விளையாட்டும் கலந்ததொரு மனோபாவம் அவ்வப்போது வெளிப்படுகிறது.

**- க.மோகனரங்கன்**

# கவிதை




## விருது பெற்ற நூல் : மாசி வீதியின் கல்சந்துகள்

படைப்பாளர் : சீனு ராமசாமி

வெளியீடு : டிஸ்கவரி

சீனு ராமசாமியின் இந்தத் தொகுப்பில் ஐந்து விதமான கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஒன்று, கடந்தகால நினைவிலிருந்து எழும் காட்சிகளால் உருவாக்கப்பட்டது. இரண்டாவது, நகர வாழ்வு தரும் நெருக்கடிகளால் உருவானது. மூன்றாவது, இயற்கையின் மீதான தீராத விருப்பத்தால் எழுதப்பட்டது. நான்காவது, கவிதை எழுதுதல் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றியது. ஐந்தாவது, தன்னைச் சுற்றிய உலகின் சமகாலப் போக்குகளையும், அபத்தங்களையும் பற்றியது.

**- எஸ்.ராமகிருஷ்ணன்**

## கட்டுரை




### விருது பெற்ற நூல் : இவள் சரித்திரம்

படைப்பாளர் : முகில்

வெளியீடு : சிக்ஸ்த் சென்ஸ்

கல்வி, பேச்சு, எழுத்து, உடை, உணவு, வேலை, அரசியல், அதிகாரம், பதவி, அங்கீகாரம், சமத்துவம் என்று ஒவ்வொன்றுக்குமே போராடி, வாழ்க்கை முழுக்கப் போராடி, சரித்திரத்திலும் போராடி இடம்பெற்ற பெண் ஆளுமைகள் உலகமெங்கும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் இந்தப் புத்தகத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

## கட்டுரை




### விருது பெற்ற நூல் : சித்தாவரம்

படைப்பாளர் : டி. பாஸ்கரன்

வெளியீடு : தேநீர் பதிப்பகம்

சித்த மருத்துவர் டி.பாஸ்கரன் பாரம்பரிய சித்தர்களின் வழித் தோன்றலில் நம்பிக்கை தரும் இளைஞராகத் திகழ்கின்றார். நூற்றுக்கும் அதிகமான எண்ணிக்கையில் சித்த மருத்துவக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரைகள் பல்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளன. அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கட்டுரைகள் இந்நூலாக உருப்பெறுகிறது.

## மொழிபெயர்ப்பு




### விருது பெற்ற நூல் : பசி காதல் பித்து


மொழிபெயர்ப்பாளர் : கே. வி. ஷைலஜா

வெளியீடு : வம்சி

ஓர் இலக்கியப் பிரதியின் அனைத்து அழகுகளையும் தன்வயப்படுத்திய 'பசி காதல் பித்து' என்னும் முதல் படைப்பில் விளிம்புநிலை வாழ்வில் எதிர்கொண்ட பேரனுபவங்களை, சந்தித்த மனிதர்களின் நற்குணங்களை, குணக்கேடுகளைப் புனைவின் வண்ண இழைகளைக் கோர்க்காமல் உயரிய கலைப்படைப்பாக நெய்து காட்டுகிறார். யதார்த்த வாழ்வு, எளிமை, குடும்ப வாழ்க்கையின் சிடுக்குகள் ஆகியவற்றைக் கச்சிதமும் நேர்த்தியும் வனப்பும் கவித்துவமும் கொண்ட மொழியால் கண்ணீர்த் துளிகளுக்குள் வானவில்லின் மாயாஜாலங்களை நிகழ்த்திக் காட்டியுள்ளார் முகம்மது அப்பாஸ். அவரது ஏமாற்றம், துயரம், அவமானம், வடுக்கள் ஆகியவற்றை அச்சுஅசலாக உள்வாங்கி வாசகனுக்குத் தமிழில் வழங்குகிறார் கே.வி.ஷைலஜா.

– நிர்மால்யா

## மொழிபெயர்ப்பு





### விருது பெற்ற நூல் : கருமிளகுக்கொடி

மொழிபெயர்ப்பாளர் : க. மாரியப்பன்

வெளியீடு : காலச்சுவடு

டாக்டர் வி.சந்திரசேகர ராவின் 'கருமிளகுக் கொடி' தலித் வாழ்வை மாறுபட்ட பார்வைக் கோணத்தில், வித்தியாசமான முறையில் கூறும் நாவல். தலித்துக்கள் தமக்கான விடுதலையைப் பெற எதிரிகளுடன் போராடுவதற்கு முன், குடும்ப அமைப்பிலுள்ள அதிகாரத்தையும் இறுக்கத்தையும் உடைத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கவனப்படுத்தும் நாவல் இது. தமிழுக்குப் புதிய குரல்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் முனைப்புடன் செயலாற்றிவரும் க.மாரியப்பன் இதைச் சிறந்த முறையில் தமிழில் தந்துள்ளார்.

## சிறார் இலக்கியம்




### விருது பெற்ற நூல் : அம்மாவின் சேட்டைகள்

படைப்பாளர் : சாலை செல்வம்

வெளியீடு : குட்டி ஆகாயம்

கண்ணுக்குத் தென்படும் அத்தனைப் பொருளோடும் பழகிட விரும்பும் குழந்தையை என்ன செய்வதென்று தெரியாத அம்மாவிற்காக ஒரு கதையும், குழந்தையின் பேச்சை ஒழுங்கு செய்வதே தனது தலையாய கடமையாக நினைத்துக்கொண்டிருக்கும் அப்பாவிற்காக ஒரு கதையும், நகர வீட்டின் பத்தாவது மாடியில் வசித்தபடி வானத்திலும் மிதக்க முடியாமல், மண்ணிலும் உலாவ முடியாமல் தவிக்கும் குழந்தைக்காக ஒரு கதையும்.. கதைகளை எந்தக் காரணமும் இன்றி நேசிக்க விரும்பும் இலக்கியக்காரருக்காகப் பலப்பல கதைகளையும் சேர்த்துக்கொண்டு மிக நல்ல காலத்தில் இந்தப் புத்தகம் வந்திருக்கிறது.

## சிறார் இலக்கியம்




### விருது பெற்ற நூல் : மந்திரத் தொப்பி

படைப்பாளர் : ஸ்ரீயக்ஷா

வெளியீடு : ஸ்ரீ பப்ளிகேஷன்ஸ்

ஸ்ரீயக்ஷாவின் படைப்புலகம் பிரம்மாண்ட கற்பனை ஓடுகள் வேய்ந்த மாபெரும் கூடாரம். இந்த இளம் வயதில் யக்ஷாவின் கதை பின்னும் திறன், நம்மை வியக்கவைக்கிறது. கதைமாந்தர்களை அறிமுகப்படுத்துவதிலும், கதையோட்டத்தை முன்னகர்த்திச் செல்வதிலும் தேர்ந்த எழுத்தாளருக்கான பாணி அவருக்கு வாய்க்கப்பெற்றிருக்கிறது. இத்தொகுப்பில் உள்ள பத்துக் கதைகளும் பிரத்யேகத் தளத்தில் வேறுபட்டு ஜொலிக்கின்றன. தமக்கான உலகத்தை, குழந்தைகளே தேர்ந்தெடுக்கும் அரிய முயற்சியாக இந்நூல் அமைந்துள்ளது.




# படைப்பு இலக்கிய ஆளுமை விருதுகள் 2025

படைப்புக் குழுமம் தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் படைப்பாளர்களுக்கு அவர்களது இலக்கிய ஆளுமையைப் போற்றும் வகையில் வருடந்தோறும் விருது வழங்கிச் சிறப்பித்துவருகிறது. அவ்வாறு இந்த ஆண்டு விருது பெறும் இலக்கிய ஆளுமைகள் :



## வாழ்நாள் சாதனையாளர் விருது

எழுத்தாளர்
**அம்பை**

## படைப்புச் சுடர் விருது



எழுத்தாளர்
சி.எம். முத்து



எழுத்தாளர்
முத்தாலக்குறிச்சி காமராசு

## இலக்கியச் சுடர் விருது



கவிஞர்
இளம்பிறை



மொழிபெயர்ப்பாளர்
ஜில்லேள்ள பாலாஜி

**2025, செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி சென்னை சர்.பிட்டி தியாகராயர் அரங்கில் நடக்கும் படைப்பு சங்கமம் விழாவில் இவ்விருதுகளை அளித்துச் சிறப்பு செய்ய இருக்கிறது படைப்புக் குழுமம்.**



# ஒவ்வொரு தமிழனும் பாரதியையும் பெரியாரையும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும்..

## கவிஞர் பிருந்தா சாரதியுடனான நேர்காணல்

சென்ற இதழ் தொடர்ச்சி

**உங்கள் முதல் கவிதை மற்றும் முதல் நூல் எப்பொழுது வெளியாயின? இப்போது ஹைக்கூவிலும் கொடிகட்டிப் பறக்கிறீர்கள். எது உங்களுக்கு எழுதுவதற்கு வசதியாக இருக்கிறது?**

எனது முதல் கவிதை 1985இல் கல்லூரியில் படிக்கும்போது 'ஜன கண மன' என்ற சைக்ளோஸ்டைல் பத்திரிகையில் வெளிவந்தது. கையால் எழுதி நிறைய காப்பி போடுவாங்க, அதுதான் சைக்ளோஸ்டைல் பத்திரிகை. என்னுடைய கல்லூரியில் என்னுடன் ஒரே வகுப்பில் படித்த நண்பர் ஜமாலன் அதனுடைய ஆசிரியர் குழுவில் இருந்தார்.

அதில் வருவதற்கு முன்னாடியே நான் கவிதை எழுத ஆரம்பித்துவிட்டேன். ஒருவேளை நினைவு சரியாக இருக்குமானால் 1980 ஆக இருக்கும். 1980ஆம் வருடத்திலேயே நான் எழுத ஆரம்பித்துவிட்டேன். 1992இல்தான் நடைவண்டி என்ற முதல் கவிதை நூல் வெளியானது. இப்பொழுது கணக்கிட்டால் முதல் கவிதைப் புத்தகம் வெளிவந்து 33 வருடங்கள் ஆகிவிட்டது. இதுவரை கிட்டத்தட்ட ஒன்பது புத்தகங்கள் போட்டிருக்கிறேன். பத்தாவது புத்தகம் தயாராக எனது கையில் இருக்கிறது. இன்னும் போடவில்லை.

எந்த வகையான கவிதைகள் எழுதுவதற்கு எளிது என்று என்னைக் கேட்டால், எனக்கு நீண்ட கவிதைகளை எழுதுவதுதான் ரொம்ப வசதியாக இருக்கிறது. இப்போதுகூட, குமுதத்தில் 'மணற்கேணி' தொடர் எழுதினேன். நீண்ட கவிதைகள்தான். கண்ணதாசன் அவசரத்திற்கு ஆசிரியப்பா என்று சொல்வாராம். அதுபோல் பத்திரிகைகளில்

குறிப்பிட்ட தேதியில் கவிதை வேண்டும் என்று கேட்டால் இந்த நீண்ட கவிதை வடிவம் உடனே கை கொடுக்கும்.

ஹைக்கூ எப்போதாவது தோன்றினால்தான் எழுத முடியும். இன்றைக்குப் பத்து ஹைக்கூ அனுப்பி வையுங்கள் என்று கேட்டால் அது என்னால் முடியாது.

நீண்ட கவிதை அப்படி இல்லை. ஒரு கவிதை வேண்டுமென்று கேட்டால் ஏதோ ஒரு வரி தோன்றும், அதை வைத்து நான் எழுதிவிடுவேன். அது இரண்டு பக்கம், மூன்று பக்கம், நான்கு பக்கமா என்றெல்லாம் தெரியாது. கட கட கடவென்று எழுதிவிடுவேன். மனதிற்குள் ஏதாவது எழுதாத கவிதைகள் வந்து தங்கிக் கிடக்கும். அது அப்போது நினைவுக்கு வரும்.

'வட்டத்துக்குள்தான் வாழ்க்கை' என்று திடீரென்று தோன்றும். அப்போது அதைப் பிடித்துக்கொண்டே எழுத ஆரம்பித்துவிடலாம். அந்த வரி எனக்குப் பிடித்ததால் அதைப் பற்றி எதை எழுதலாம் என்று யோசித்துப் பார்க்கும்போது வட்டத்துக்குள்தான் வாழ்க்கை, யோசித்தால் மனித வாழ்க்கையை முற்றிலும் கூட எழுதலாம். ஆனால் அப்போது கையைப் பார்க்கிறேன். கடிகாரம் கையில் தெரிகிறது. அதனால் கடிகாரத்தை வைத்து எழுதிவிடலாம் என்று நினைத்து எழுதினேன்.

வட்டத்துக்குள்தான் வாழ்க்கை..

ஆனால் உலக இயக்கத்தையே உணரவைக்கும்
ஞானம்.

கண்ணாடிச் சிறைக்குள் அடைபட்டுக் கிடந்தாலும்

காலத்தின் துடிப்பினை வெளிப்படுத்துவதில் ஒரு
பிடிவாதம்

ஒரே பாதையில்தான் பயணம்

ஆனால் ஒன்றை ஒன்று தொட்டுக் கொள்ளாத
நாகரிகம்.

கற்றுக்கொள்வதற்கு எவ்வளவோ இருக்கிறது
கடிகார முட்களிடம்

நாம் மணி பார்க்கும்போது மட்டுமே கவனிக்கிறோம்

என்று எழுதினேன்.

கடிகாரம் வாழ்க்கையின் சாராம்சத்தையே வெளிப்படுத்துகிறதே. எப்படி மனிதன் வாழ வேண்டும் என்று இந்தக் கடிகாரம் கற்றுக் கொடுக்கிறது. அப்படி இந்தக் கடிகாரத்தைப் பற்றி யோசித்து மிகவும் வியப்பாக எழுதிய கவிதை அது.

கவிக்கோ அப்துல் ரகுமான் கவியரங்கத்துக்குத் தலைப்பு கொடுத்தால் கவியரங்கத் தலைப்பில் எழுதுவார். தனிக் கவிதையும் எழுதுவார். அவருடைய மாணவர்களுக்குத் தலைப்பு கொடுத்து கவிதை எழுதச் சொல்வார்.

அப்படி பழக்கப்படுத்திக்கொண்டால் நிறைய எழுத முடியும். நான் கல்லூரிக் காலத்தில் கவியரங்கக் கவிதைகள் எழுதினேன். பிறகு ஒரு தலைப்பில் எழுதுவதும் ஏதேனும் வரி மனதில் தோன்றியதும் அதைப் பின் தொடர்ந்து எழுதுவதும் பழக்கமானது. நீண்ட புதுக் கவிதைகள் எனக்கு எழுத வசதி.

பாரதியார் பிறந்தநாள் அன்று நீங்கள் காலையில் எழுந்து குளித்துவிட்டுப் புத்தாடை அணிந்துகொண்டு ஒரு திருவிழா அல்லது ஒரு தீபாவளி பொங்கலைக் கொண்டாடுவதைப் போல, உங்கள் அறையில் இருக்கும் நண்பர்களிடம் பாரதியாரின் கவிதைகளிலிருந்து ஒரு கவிதையைப் படித்துக் காட்டிக் கொண்டாடுவீர்களாமே.. எப்படி உங்களுக்கு அந்த எண்ணம் வந்தது? எப்பொழுதிலிருந்து அதைத் தொடர்ந்து செய்கிறீர்கள்?

நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போதுதான் பாரதியார் தன் கவிதைகள் வழியாக எனக்கு முறையாக அறிமுகம் ஆகிறார். அதற்கு முன்பே

சில பாடல்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் உணர்வுப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் பாரதியை உணர்ந்துகொண்டது அப்போதுதான்.

சின்ன வயதில் நான் எல்லாவற்றிற்கும் பயப்படுவேன். எனக்கு மட்டுமே தெரிந்த ஒரு ரகசியம் அது. தெனாலி படத்தில் கமல் சொல்லுவார், எதைப் பார்த்தாலும் பயமென்று, இந்த மாதிரி ஒரு பயம். அப்போது என்னுடைய பயத்தைப் போக்கிக்கொள்வதற்கு நான் என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். பயம் என்னை விட்டு விலகவே இல்லை. வீட்டில் உள்ளவர்கள் எனக்குத் தைரியம் சொல்லுவார்கள். அப்படியும் எனக்கு பயம் போன மாதிரி தெரியவில்லை. பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது ஒரு பேச்சுப் போட்டிக்காகப் பாரதியார் கவிதைகள் புத்தகத்தைப் படித்துக்கொண்டு இருக்கும்போது,

**"பயமெனும் பேய்தனை அடித்தோம்**
**பொய்மைப்**
**பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்**
**வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வைக் கைப் பிடித்தோம்!**
**ஜெய பேரிகை கொட்டடா!**
**கொட்டடா! ஜெய பேரிகை கொட்டடா!"**

என்ற ஒரு கவிதையைப் படித்தேன். மிகவும் பிடித்த கவிதை. ஒவ்வொரு வரியும் எனக்கு எழுதின கவிதை மாதிரியே இருந்தது. நான் பயந்துகொண்டிருக்கிறேன், என் பயத்தைப் போக்குவதற்காக அவர் என்றோ எழுதி வைத்துவிட்டுப் போய் இருக்கிறார் என்று தோன்றியது. ஏன் பாரதியார் இந்த மாதிரியான பயத்தைப் போக்கக்கூடிய கவிதை எழுதினார்? ஒருவேளை பாரதியாருக்கே அது மாதிரி பயம் எல்லாம் இருந்திருக்குமோ? என்று கூட நினைத்து இருக்கிறேன். அந்தக் காலத்தில் ஆங்கிலேயருடைய ஆட்சியில் மக்கள் எல்லாவற்றிற்கும் பயப்படுகிறவர்களாக இருக்கிறார்களே என்ற வருத்தத்தில் கூட எழுதி இருக்கலாம். ஏதோவொரு காரணத்தினால் நமக்குப் பயன்படக்கூடிய ஒரு கவிதையை எழுதியிருக்கிறார்.

உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பயங்கள் இருக்கின்றன. இந்த ஒரு கவிதையைப் படித்தால் மந்திரம் போன்று மனதில் தைரியம் பிறக்கும். இந்தக் கவிதையை நான் விரும்ப ஆரம்பித்தேன். அடிக்கடி படித்துக்கொண்டே இருந்தேன். அவருடைய மற்ற கவிதைகளும் கூட வெற்றுச் சொல்லால் ஆன அலங்காரங்களாய் இருக்காது. அழகாக எழுதவேண்டும் என்பதற்காக அவர் ஒரு கவிதையை எழுத மாட்டார். எல்லாக் கவிதையுமே ஒரு செய்தியை நமக்குச் சொல்லும். ஏற்கனவே இருந்த நிலையிலிருந்து நம்மை ஒரு படியாவது உயர்த்துவதைப் போன்று. இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கு இல்லை. அவரைப் பொறுத்த வரைக்கும் கவிதை என்பது ஒரு சாதகம். ஒரு ஆயுதம். அவர் தன்னுடைய வாழ்க்கையை, கனவுகளை, லட்சியங்களை ஒரு பொறுப்புணர்ச்சியுடன் பதிவு பண்ணவேண்டுமென்று எழுதினார். படிக்கிறவன் படித்து முடித்த பிறகு அவனுடைய தன்மையிலிருந்து ஒரு படி முன்னேற்றமாவது நடந்திருக்கும்.

இப்படி ஒரு மந்திரம் போல் சொல் வேண்டும் என்று சொல்வதைப் போல பாரதியாருடைய எல்லாக் கவிதைகளுமே அர்த்தபூர்வமானவை. ஏதேனும் முக்கியமான செய்தி நமக்குச் சொல்லும். அதனால் பாரதியாரை ஒரு தெய்வீகக் கவிஞர்

என்றும் சொல்லலாம். மற்றவர்களும் கவிஞர்கள்தான். ஆனால், இவர் மட்டும் மனித மட்டத்திலிருந்து உயர்ந்தவர் என்றே எனக்குத் தோன்றும். ஒரு குருவைப் போல என் நெஞ்சில் வைத்து வழிபடத் தொடங்கினேன்.

இன்று இதை வெளியே சொல்லும்போது, இவை போன்றவை, லட்சியவாதக் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் காலம் தாண்டி வந்து நடமாடுவது போலக் கிண்டலுக்குரிய விஷயங்களாக ஆகிவிட்டன. ஆனால் நம்மை உருவாக்கிய ஒன்றை நாம் மறைக்கத் தேவையில்லை என்றே நினைக்கிறேன். பின் ஜெயகாந்தனைப் படிக்கும்போது அவரும் பாரதியாரை எனக்குள் ஊற்றி நிரப்பினார்.

உதவி இயக்குனராகச் சென்னை வந்தபோதே பாரதியார் கவிதைகளோடுதான் வந்தேன். என்னுடைய அறைத் தோழர்களாக லிங்குசாமி, வசந்தபாலன் எல்லாம் இருப்பார்கள். யார் யாரோட பிறந்தநாளோ வருது, போகுது. ஆனால் பாரதியாரோட பிறந்தநாள் மட்டும் எனக்கு ரொம்ப முக்கியம். அப்படி ஒரு டிசம்பர் 11. பாரதியார் பிறந்தநாளுன்னு என்னோட அறை நண்பர்களுக்குத் தெரியாது. காலையில் எழுந்து குளித்தேன். அப்போது புதுத்துணி இல்லை. அதனால் சலவை செய்த உடைகளைப் போட்டுக்கொண்டேன். ‘தோழர்களே... இங்கே வந்து அமருங்கள்’ என்றேன். ‘இன்று பாரதியாரோட பிறந்தநாள். பாரதியாரோட ஒரு கவிதையைப் படிக்கிறேன். நீங்க எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். ஆனால் இந்தக் கவிதையை மட்டும் கேட்டுவிட்டுச் செல்லுங்கள்’ என்று சொல்லிவிட்டு,

**“தேடிச் சோறு நிதம் தின்று**

**பல சின்னஞ்சிறு கதைகள் பேசி மனம்**

**வாடித் துன்பம் மிக உழன்று பிறர்**

**வாடப் பல செயல்கள் செய்து நரை**

**கூடிக் கிழப்பருவம் எய்திக் கொடும்**

**கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் பல**

**வேடிக்கை மனிதரைப் போலே நான்**

**வீழ்வேன் என்று நினைத்தாயோ?”**

என்கிற கவிதையைப் படித்துக் காண்பித்தேன். அவர்களெல்லாம் ‘என்னடா உதவி இயக்குனராகச் சேர வந்தான். ஏதோ வேலை தேடிப் போவானென்று பார்த்தால் பாரதியார் கவிதையைப் படித்துக்கொண்டிருக்கிறான்’ என்று நினைத்துவிடுவார்களோ என்று பயந்தேன். ஆனால் அவர்களுக்கும் இந்தக் கவிதை பிடித்துவிட்டது. அவர்களுக்கும் அது உற்சாகத்தை ஊட்டுகிற கவிதையாக மாறிப்போய் விட்டது. பாரதியார் பிறந்த நாளுக்கு மட்டுமில்லை, நினைவு நாளுக்கும் அதே மாதிரி செய்வேன். என்னைப் பொறுத்தவரைக்கும் என்னை உருவாக்கிய ஒரு ஆசான் என்று பாரதியைச் சொல்லுவேன்.

எனக்கு மட்டும் இல்லை. புதிய உலகைப் படைப்பதிலும், நவீன இந்தியாவை உருவாக்குவதிலும், உலகத்துக்குத் தன்னுடைய சிந்தனையின் மூலம் ஒரு முன்னோடிச் சிந்தனையாளராக இருந்திருக்கிறார். இந்தியாவின் தத்துவம், தமிழ்நாட்டின் வரலாறு, நாளைய உலகம் என்று தனித்தனியாகப் படித்துப் பல வருடங்களில் அறிந்துகொள்ள வேண்டியதைப் பாரதியாரின் சில கவிதைகளை உணர்ந்து படித்தாலே கற்றுக்கொள்ளலாம். பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி, முரசு ஆகிய மூன்றை மட்டும் படித்தால் கூடப் போதும், பாரதியாரின் விஸ்வரூப தரிசனத்தைக் காண முடியும்.

அதே மாதிரி எனக்குப் பிடித்தமான எழுத்தாளர்கள் பிறந்தநாள், நினைவு நாள் வரும்போது அவர்களுடைய ஒரு

கதையை அல்லது கவிதையாவது நான் எடுத்துப் படிப்பேன். அதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். உதாரணமாக ஜெயகாந்தன், பிரபஞ்சன் இவர்களுடைய பிறந்தநாள் வரும்போதெல்லாம் அவர்களுக்கு நம்மளால் என்ன செய்ய முடியுமென்று நினைக்கும்போது ஒரு கதை எடுத்துப் படிப்பேன்.

ஒவ்வொரு எழுத்தாளனும் நமக்கு ஒரு பார்வையைக் கொடுக்கிறார்கள். அவர்களைப் பற்றி ஆயிரம் பேர் ஆயிரம் சொல்வார்கள். ஆனால் அவர்களைப் பற்றிய புரிதலுக்கும், அவர்களுடைய பார்வையைப் பெறுவதற்கும், அவர்கள் பார்வையை நீங்கள் உள்வாங்குவதற்கும் நேரடியாக அவங்களுடைய படைப்புகளுக்குள் போய்விட வேண்டும். பாரதியாரின் ஒவ்வொரு கவிதையைப் படிக்கும்போதும் ஒவ்வொரு பார்வை கிடைக்கும். புதுவித அனுபவமாக இருக்கும். ஒவ்வொரு திரையாக விலகும். அதன் மூலமாகத்தான் நாம் உருவாகிறோம்.

அதேபோல, தந்தை பெரியார் பிறந்த நாள் நினைவு நாளில் அவருடைய நூல்களை வாசிப்பது என்னுடைய வழக்கம். தமிழர்கள் இன்று அடைந்திருக்கிற உயரங்களுக்கு அவருடைய பகுத்தறிவுச் சிந்தனையும் தன்னலமற்ற உழைப்பும் முக்கியக் காரணமாக அமைகின்றன.

ஒவ்வொரு தமிழனும் பாரதியையும் பெரியாரையும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும்.

வாழ்வின் ஆழ்ந்த சுவாசம் ஹைக்கூ என்பார்கள். சமகாலத்தில் காலம் கடந்தும் வாழும் ஹைக்கூ கவிஞர் எனப் பாராட்டப்படுகிறீர்கள்... பாஷோவின் சாயலில் இருப்பதாக உங்கள் கவிதைகள் பேசப்படுகின்றன. இப்படி எழுத உங்களுக்கு உத்வேகமாக இருந்தது எது?

உங்கள் பாராட்டுக்கு நன்றி. மிகச் சிறந்த ஒரு ஹைக்கூ எழுதிவிட்டோம் என்றால் வாழ்க்கையின் மிகப்பெரிய ஒரு தருணத்தைக் கைப்பற்றிவிட்டோம் என்று சொல்கிறார்கள். நம்முடைய ஹைக்கூவில் என்ன இருக்கிறது என்பது கண்டிப்பாக நமக்குத் தெரியாது. நாம் ஒரு காட்சியைப் பதிவு செய்கிறோம். கவிதையைப் படிக்கிறவருக்கு அவருடைய வாழ்க்கை இந்தக் கவிதையில் வந்துவிட்டதே என்று நினைத்தால் அதுதான் கவிதையின் வெற்றி. அந்த அளவுக்கு ஒரு ஹைக்கூ சென்றடைய வேண்டும்.

**“மீன்கள் உறங்கும் குளம்**
**விண்மீன்களை ரசிக்கிறான்**
**தூண்டில்காரன்”**

**“அலையோசையில் கலக்கிறது**
**மணியோசை**
**கடற்கரை ஓர ஆலயம்”**

**“நதியில் மிதந்து செல்லுகிறது**
**பழுத்த இலை**
**நிறைவான பயணம்”**

போன்ற என்னுடைய ஹைக்கூ கவிதைகள் பலராலும் பாராட்டப்பட்டன. ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளுக்கு நிகராக இருக்கின்றன என்ற விமர்சனத்தையும் பெற்றுத் தந்தவை இவை. கவிக்கோ அப்துல் ரகுமான் மூலமாக ஹைக்கூ கவிதையைக் கற்றுக்கொண்டேன். அவரிடம் இருந்துதான் பாஷோ முதலான கவிஞர்களின் கவிதைகளையும் படித்தேன்.

இங்கு இருக்கிற பத்திரிகைகள் மூலமாக, நம்முடைய கவிதைப் புத்தகங்கள் மூலமாக நமது ஹைக்கூக்கள் எத்தனை பேருக்குச் சென்றடைந்து இருக்குமென்று தெரியவில்லை. ஆனால் பாஷாவோட கவிதை உலகம் முழுக்கச் சென்றடைந்து உள்ளது. அவர் எழுதும்போது உலகம் முழுக்க நமது கவிதை சென்றடையுமென்று

தெரிந்திருக்காது. நம்மைப் போன்றுதான் அவரும் எழுதியிருப்பார். அதை ஒரு ஏழு எட்டு பேருக்குப் படிக்கக் கொடுத்திருப்பார். பிறகு காலம் இவ்வளவு பேரிடம் உலகம் முழுவதும் கொண்டு போய் அவர் கவிதையைச் சேர்த்து இருக்கிறது. அச்சடிக்கப்பட்ட பிறகு, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பிறகு பல நாடுகளுக்கும் சென்றடைந்தது. மிகச்சிறந்த கவிதையாக, வாழ்க்கையின் பார்வையாகப் பதிவு செய்துள்ளார் என்று கொண்டாடுகிறார்கள். இந்த அளவுக்கு நம்முடைய ஹைக்கூவும் சென்றால் மகிழ்ச்சிதான். அந்த அளவுக்கு என் ஹைக்கூல என்ன இருக்கிறது என்பதை நீங்கள்தான் சொல்லவேண்டும்.

ஒரு கவிதையின் மீது வெளிச்சம் விழ வேண்டும் என்றால் அதற்குக் கவிஞன் மட்டுமே போதாது, அதை எடுத்துச் சொல்லும் விமர்சனம் வேண்டும். என்னுடைய ஹைக்கூவைப் பற்றி லீலா அவர்கள் எழுதிய ஹைக்கூ தூண்டிலில் ஜென் என்ற நூல் மூலமாக அது மேலும் கவனம் பெற்றுவருகிறது என்று நினைக்கிறேன்.

நாம் தொடர்ந்து விடாமல் ஹைக்கூ புத்தகங்களை வெளியிடுகிறோம். இந்த வருஷம் ஒரு ஹைக்கூ புத்தகம் போடலாமா என்று என்னிடம் எல்லோரும் சாதாரணமாகக் கேட்பார்கள். குறைந்தபட்சம் ஒரு *50, 60* கவிதைகள் இருந்தால்தானே புத்தகம் போட முடியும்.

ஹைக்கூ புத்தகம் போட்டு நான்கு ஐந்து வருடம் ஆகிவிட்டது. இப்போது என்னிடம் பத்து பன்னிரண்டு கவிதைதான் இருக்கிறது. இது எப்போது கவிதை ஆகுமென்று எனக்கே தெரியாது. கொஞ்சம் கவனமாக ஹைக்கூ எழுதி வெளியிட வேண்டுமென்று நினைக்கிறேன்.

**உங்கள் இலக்கிய ஆதர்சம் என்று யாரைச் சொல்வீர்கள்?**

சந்தேகமே இல்லை, மகாகவி பாரதியார்தான் எனது ஆதர்சம்.

பாரதியார் கவிதை எழுதியிருக்கிறார், கட்டுரை எழுதியிருக்கிறார், சிறுகதை எழுதியிருக்கிறார், வசனக் கவிதை எழுதியிருக்கிறார். *39* வயசுக்குள் இவ்வளவு வேலை செய்திட முடியுமா என்று நமக்கே மிகப் பெரிய ஆச்சரியமாக உள்ளது. புதுக்கவிதை எங்கோ ஒருவன் வெளிநாட்டில் எழுதிக்கொண்டு இருக்கிறான், அதைக் கொண்டுவந்து இங்கு அவனைத் தமிழில் அறிமுகப்படுத்துகிறார். எங்கோ ஒருவன் ஹைக்கூ எழுதிக்கொண்டு இருக்கிறான். அதை மொழிமாற்றம் செய்து இங்கே இது போன்று ஒருவர் எழுதுகிறாரென்று அறிமுகப்படுத்துகிறார். அதெல்லாம் எங்கே போய்ப் படித்திருப்பார் என்று கேள்விக்குறியாக இருக்கிறது. இப்போது நமக்கு google தேடல் இருக்கிறது. அதில் நாம் எதை வேண்டுமானாலும் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அப்போது அப்படி இல்லையே.. எவ்வளவு அலைந்து திரிந்து எல்லாவற்றையும் படித்திருக்கிறார். ஒரு கடலையே குடித்துவிடுகிற தாகம் பாரதியாருக்கு இருந்திருக்கிறது. அதனால்தான் இவ்வளவு அவரால் எழுத முடிந்திருக்கிறது. அதனால்தான் இன்று வரைக்கும் நிற்கிறார். அதே சமயத்தில் நமக்கு இப்போது கடலே பக்கத்தில் இருக்கும்போது ஏன் எழுதக் கூடாது? ஒரு நாவலை எழுதணும், ஒரு சிறுகதை தொகுப்பு எழுதணும், ஒரு கவிதை புத்தகம் போடணும் என்று நமக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் எதையோ

ஒரு வகைமை மேல் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது.

சோதி மிகு நவ கவிதை என்று பாரதி சொன்னதைப் போல சோதி மிகு கவிதைகளைப் படைக்க வேண்டும் பாரதியைப் போலவே.

**நீங்கள் பணியாற்றிய திரைப்படங்களில் உங்களுடைய வசனங்கள் மிகவும் கூர்மையாகவும், மக்களிடம் அதிகமாகச் சென்றடைந்து மக்கள் திரும்பத் திரும்ப விரும்பிக் கேட்கிற வசனங்களாகவும் மாறி இருக்கின்றன. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் அதைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு அமைந்திருக்கிறது. பரவலாகப் பயன்படுத்துகிற வசனங்களில் உங்களுடைய பஞ்ச் டயலாக் நிறைய இடம்பெற்றுள்ளன. அந்த வசனங்களை நீங்கள் எப்படி உருவாக்குகிறீர்கள் என்பது பற்றிச் சொல்லுங்கள்.**

திரைத்துறையைப் பொறுத்தவரைக்கும் என்னைப் பொதுவாக அடையாளப்படுத்துவது உரையாடல் ஆசிரியர் அதாவது வசனகர்த்தா என்றுதான்.

நான் லிங்குசாமி இயக்கிய ‘ஆனந்தம்’ திரைப்படத்தின் மூலம் வசனகர்த்தாவாக அறிமுகமானேன். அந்தப் படம் சில்வர் ஜூப்ளி. 25 வாரங்கள் (அதாவது 175 நாட்கள்) ஓடி மிகப்பெரிய வெற்றி அடைந்தது. இப்போதெல்லாம் ஒரு வாரத்திலேயே படத்தினுடைய வாழ்க்கை முடிந்துவிடுகிறது. அப்போது நல்ல திரைப்படங்களை வாரக்கணக்கில் திரும்பத் திரும்பப் பார்த்து மக்கள் கொண்டாடினார்கள்.

‘ஆனந்தம்’, படம் ஒரு கூட்டுக் குடும்ப வாழ்க்கை குறித்த படம். குடும்ப மதிப்பீடுகளை உணர்த்திய படம். ‘ஆனந்தம்‘ படம் லிங்குசாமியோட சொந்த வாழ்க்கையிலிருந்து எழுதப்பட்ட கதை. அந்தப் படத்துக்கு வசனம் எழுதிய நானும் அவரைப் போன்று ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். அவருடைய குடும்பமும் சிறிய மளிகைக் கடை வைத்திருந்தது. என்னுடைய தந்தையாரும் ஒரு சிறிய பேன்சி ஸ்டோர் நடத்திவந்தார். இரண்டு பேருடைய கடைகளும் கோவிலை ஒட்டி அமைந்திருந்தன. அதனால் அந்தப் படத்திற்கு வசனம் எழுத சொந்த அனுபவங்களே எனக்கு மிகப்பெரிய கை கொடுத்தன. படத்துக்கு வசனம் எழுதும்போது செயற்கையாக வசனம் இல்லாமல் எதார்த்த வாழ்க்கையில் என்னவெல்லாம் பேசுவோமோ அந்த மாதிரிதான் அதை எழுத வேண்டும் என்று இருவரும் தீர்மானித்தோம். செயற்கைத்தனம் சிறிதும் இல்லாமல் எழுத வேண்டும் என்று தோன்றியது. அன்றாட வாழ்க்கையில நடக்கிற அந்த நிகழ்வுகளுக்கு அந்த மனிதர்கள் எப்படி பேசுவாங்க, ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பம், அந்த வியாபாரம் சார்ந்த மக்கள் என்ன பேசுவாங்க என்பதை எதார்த்தமாகப் பதிவு பண்ணியதுதான் ‘ஆனந்தம்’.

திரைப்படத்துறையில் என்னுடைய முதல் பட வசனம் அதுதான். அந்தப் படத்தைத் திரும்பத் திரும்பத் தொலைக்காட்சிகளில் போட்டாலும் பார்த்தவர்களே திரும்பத் திரும்பப் பார்த்துப் பாராட்டுகிற படமாக அது மாறி இருக்கிறது. முக்கியமாக அதில் சொல்லவேண்டுமென்றால் தொழில் குறித்து ஏதாவது ஒரு இடத்திலாவது எழுதிவிடவேண்டுமென்று எனக்கு ஒரு உந்துதல் இருந்துகொண்டே இருந்தது.

மளிகைக்கடைத் தொழில் செய்கிற இடத்தில் கதாநாயகனாக நடித்திருக்கிற மம்முட்டி கதாபாத்திரத்திற்கும் ஒரு முக்கியமான கதாபாத்திரத்திற்கும் முரண்பாடு வாக்குவாதம் வருகிற மாதிரி காட்சி வரும். அதற்கு எழுதிய வசனம், “தொழில்னா என்னான்னு தெரியுமா? நாணயம். ஜனங்க நம்ம கையில கொடுக்கிற நாணயத்துக்கு நாம நாணயமா நடந்துக்கணும். ஜனங்க ரெண்டு

பேரு கையிலதான் தராசு கொடுத்திருக்காங்க. ஒன்னு நீதி தேவதை கையில... இன்னொன்னு வியாபாரி கையில. அந்தக் கௌரவத்தை நாம காப்பாத்தணும். கல்லாப்பெட்டியில் காசு பணம் சேர்க்கறது மட்டும் இல்லை... கொஞ்சம் புண்ணியத்தையும் சேர்க்கணும். அரிசியில கல்லைக் கலப்படம் பண்றியே... கட்டின பொண்டாட்டிகிட்ட கலப்படம் இருந்தா ஒத்துக்குவியா? உங்கப்பா நல்ல பேரைச் சேர்த்து வச்சிருக்காரு. அதைக் கெடுத்துறாத..” அப்படிங்கிற மாதிரி எழுதி இருப்பேன்.

நீங்க எந்தக் கதை எழுதினாலும் அதில் சில உலக உண்மைகளை அறம் சார்ந்த கருத்துக்களை, வாழ்வியல் கேள்விகளுக்கான விடைகளை எங்கேயாவது எழுதிவிட்டீர்கள் என்றால் அது மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்துவிடும். அவர்களுடன் அது கனெக்ட் ஆகிவிடும். மக்கள் விடை தேடிக்கொண்டு இருக்கிற கேள்விக்கான விடைகளைச் சொன்னா காலத்துக்கும் அழியாது.

கவிதை எல்லாம் படித்தால் இரண்டு அர்த்தம் வருகிற மாதிரி எழுதுகிறோம். ஒன்று நாணயம் காசு பணத்தைப் பற்றிச் சொல்வது, அதாவது மதிப்பு. இன்னொன்று நேர்மையைச் சொல்வது, மக்கள் கொடுக்கிற பொருளுக்கு நாம் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும். இதில் ஒரு சிலேடை இருக்கிறது. இந்த மாதிரி கவித்துவமான யுக்திகளைப் பயன்படுத்தியது ஒரு கவிஞனாக இருப்பதால் நடந்தது.

அடுத்தது அந்தத் தராசு. நீதி தேவதை கையில் தராசு என்பதை வேற ஒரு இடத்தில் எழுதி இருந்தால் சரியாக இருக்காது. இங்கு வியாபாரி கையில் இருக்கும் தராசு கூட ஒப்பிடுகிறோம்.

கல்லாப்பெட்டியில் காசு பணத்தைத் தவிர வேற என்ன சேர்க்க முடியும்? கொஞ்சம் புண்ணியத்தையும் சேர்த்துவை என்று சொல்கிறோம். கல்லாப்பெட்டியில் நேர்மையாக இருப்பது மூலமாகப் புண்ணியத்தைச் சேமிக்கலாம். தர்ம காரியம் செய்வது மூலமாகப் புண்ணியம் சேர்க்கலாம். காசு பணம் சில சமயத்தில் உங்களைக் கைவிட்டுப் போனாலும் போயிடலாம்... ஆனால், புண்ணியம் கூடவே இருக்கும்.

இன்னொரு இடத்தில் குடும்பத்தில் அண்ணனுக்கும் தம்பிக்கும் முரண்பாடு ஏற்படுகிற மாதிரியான ஒரு காட்சி வரும். குழந்தைக்குப் பாலை எடுத்து வைக்காமல் பெரிய அண்ணி விட்டுவிடுவார்கள். சின்ன மருமகள் அவர்களிடம் சண்டை போடுவார்கள். பாலை எடுத்து வைப்பது அந்த வீட்டில் வேலைக்காரன் தினமும் செய்கிற ஒரு வேலை.

அப்போது மூத்த அண்ணனாக நடித்த மம்முட்டி சொல்லுவார், “ஏன்டா மாடு எவ்வளவு பால் கறக்குது... எவ்வளவு சாணி போடுதுன்னு நாங்களா பாத்துட்டு இருக்க முடியும்?” னு. எஸ்.ஏ. ராஜ்குமார் ரீரெக்கார்டிங் போடுவதற்காகப் படம் போயிருந்தபோது இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, ‘என்னங்க, இவ்வளவு அற்புதமா யதார்த்தமா எழுதி இருக்கீங்க...’னு சொல்றாரு. அந்த வசனம் நிச்சயமாகப் பேசப்படும் என்று நமக்குத் தெரிந்தது.

இது மாதிரி எதார்த்தமான வசனங்களை யார் எழுதுவார்கள்? கிராமத்துப் பின்னணியில் இருந்து வந்து எழுத்தாளர்களால்தான் எழுத முடியும். யதார்த்த வாழ்க்கையில் என்ன பேசுவார்களோ, அப்படியே ஒரு புள்ளி கூட மிகாமல் இருக்கும். தமிழ் இலக்கியத்தில் தொடர்புடையவனாக இருப்பதால் இது போன்ற வசனங்கள் எல்லாம் நமக்கு இயல்பாக வருகிறது.

அதே போன்று பையா படம். ஒரு

காதல் கதை. என்னுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான படம். அதில் படம் முழுவதும் காதலர்கள் காரில் பயணம் செல்கிறார்கள். காதல் செய்யும் ஒருவன் பெங்களூரிலிருந்து அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் பம்பாயில் விடவேண்டும். பயணத்தில் அந்தப் பெண்ணைப் பார்த்து ரசிக்கிறான். அந்தப் பெண்ணிடம் தனியாகப் பேசுவது போன்று அழகான சூழ்நிலை. கற்பனையில் இருந்தது நிஜமாகவே கிடைக்க நண்பர்களிடம் பேசுகிறான். இந்தக் காட்சிகள் தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்கும். இந்தப் படத்தில் உரையாடல் மூலமாகத் திரைக்கதை செல்லும். டைரக்டர் லிங்குசாமி அவர்களின் சிறந்த திரைக்கதைகளில் பையாவை மறக்க முடியாது.

புதுக்கவிதைகளை நம்மால் முடிந்த அளவு இடையில் சேர்த்தோம். அந்தக் கதையே அப்படித்தான் இருக்கும். கதாநாயகியை அவளுடைய வீட்டில் விட்டுவிட்டுத் திரும்பும் கதாநாயகனிடம் அவனுடைய நண்பர்கள் பேசுவார்கள். அப்போது கதாநாயகன், “பெங்களூர்ல இருந்து பாம்பே வரைக்கும் அவளைக் கூட்டி வந்து விட்டேன். அது ஒரு தூரமாகத் தெரியவில்லை. இப்போது வீட்டில் விட்டுவிட்டு வாசல் வரைக்கும்தான் வந்து இருக்கிறேன். இந்தத் தூரத்தை என்னால் தாங்க முடியல,” என்று கலங்குவான். தமன்னாவுக்கு மிகவும் பிடித்த வசனம் என்று ஒரு பேட்டியில் சொல்லி இருந்தாங்க.

அதேபோல கதாநாயகி தற்கொலை செய்துகொள்வதாகச் சொல்லும் இடத்தில் கதாநாயகன் அவருக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக ஒரு உயரமான இடத்தில் இருந்து பேசுவான். “அங்க பாருங்க... நாம வந்த ஊரு... இவ்வளவு சின்னதா தெரியுது ... அந்த மாதிரிதான் பிரச்சனையும். பக்கத்துல வச்சுப் பார்த்தா பெருசா தெரியும், தூரத்தில் வச்சுப் பார்த்தால் சின்னதா தெரியும். அதுக்காக செத்துருவேன் குத்துறேன்னு சொன்னால் எப்படிங்க?” என்று பேசும் இடம். தற்கொலை செய்துகொள்வதைப் பற்றிக் கவுன்சிலிங் கொடுத்தால் கேட்பார்களோ இல்லையோ, இப்படி பொழுதுபோக்கு சினிமா பார்க்க வரும் இடங்களில் அங்கங்கு நல்ல விஷயம் நான்கு சொன்னால் மனதில் நிச்சயமாகப் பதிந்துவிடும்.

அதே மாதிரி வேட்டை படத்துல நகைச்சுவை கலந்த ஒரு கதாநாயகன் கதாபாத்திரம். அவன் பயந்தாங்கொள்ளி. ஆனால் போலீஸ் வேலை கிடைத்துவிடும். போலீஸாக இருக்கும்போது வீர தீர சாகசங்களை அவன் செய்தாக வேண்டும். அதைச் செய்வது எல்லாம் அவன் தம்பி. இவனுக்கு நல்ல பேரு கிடைக்கும். இன்னும் பெரிய வேலை செய்யச் சொல்லிக் கொடுப்பார்கள். அவனால் சமாளிக்க முடியாது. நகைச்சுவையாக எழுதுவதற்கான ஒரு வாய்ப்பு அந்தப் படத்தில் கிடைத்தது. சென்டிமென்ட், லவ், இப்போது நகைச்சுவை.

நமக்குக் கிடைக்கிற வாய்ப்புகளில் அந்தக் கதைக்குத் தகுந்த மாதிரி பொறுப்பாகச் செய்தால் மக்கள் மனதில் என்றைக்கும் நீடித்து இருக்கும். அந்தப் படத்திற்கும் புகழ் வருகிறது. நமக்கும் புகழ் வருகிறது. லிங்குசாமியும், நானும் உரையாடல் எழுதும்போது பேசிப் பேசித்தான் எழுதுவோம். அது மாதிரி பேசிப் பேசி எழுதுவதில் கிடைக்கும் நன்மை, எழுதப்பட்ட வசனமாக அது இல்லாமல் யதார்த்தமாக அமையும்.

அஞ்சான் படத்தில் “நீ நிதானமாக இல்ல... உன் கால் தரையில பட்ல... முதல்ல நில்லு... அப்புறம் சொல்லு” என்ற வசனம் ஒரு பாடலுக்கு இடையே வந்ததினால் அது இன்னும் மக்களிடம்

போய்ச் சேர்ந்தது. அந்த வசனத்தில் ஒரு ரிதம் இருக்கும். வசனம் எழுதுவது ஒரு சுகமான வேலை. அதை ரசனையோடு செய்யும்போது நமக்கும் மகிழ்ச்சி, படம் பார்ப்பவர்களுக்கும் மகிழ்ச்சி. தொடர்ந்து அந்தப் பணியில் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

**திரைப்பட வசனம் ஒரு இலக்கிய வகைமை என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டு இருந்தீர்கள். அது பற்றி?**

ஆம். நீண்ட நாட்களாக இதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். சிறுகதை நாவல் போலவே திரைக்கதையும் ஒரு இலக்கிய வகைமையே. இப்போது திரைக்கதைகளும் நிறைய எழுதப்படுகின்றன. மேலும், மக்கள் படிப்பதை விட திரைப்படங்களை அதிகமாகவே பார்க்கிறார்கள். ஆகவே அந்த ஊடகத்தைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். எழுத்தாளர்கள் திரைக்கதை வழியாக மக்கள் மனதுக்குள் எளிதாக நுழைந்துவிடக் கூடியவர்கள். ஆகவே, திரைக்கதையைப் பற்றி முன் எப்போதையும் விட இப்போது அதிகமாக விவாதிக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

திரைக்கதைகளே இன்றைய பெரும்பாலான மக்களால் நுகரப்படும் இலக்கிய வடிவம் என்றும் சொல்லலாம். இலக்கிய வரலாறு எழுதுபவர்கள் திரைப்படப் பாடல்கள், திரைக்கதை, வசனங்கள் ஆகியவற்றைத் தனித்தனி இலக்கிய வகைகளாகக் கொண்டு உரிய இடம் கொடுத்துத் தங்கள் நூல்களில் இடம்பெறச் செய்ய வேண்டும். திரைக்கதை எழுத்தாளர்கள் குறித்த அறிமுகம் அதில் அவசியம் இருக்க வேண்டும்.

**இயக்குனர் லிங்குசாமிக்கும் உங்களுக்குமான நட்பு, இலக்கியம் மற்றும் சினிமா சார்ந்த உறவு ஆகிய விஷயங்களைப் பகிருங்கள்..**

லிங்குசாமியின் முதல் படமான ஆனந்தம் தொடங்கி அவருடைய பல படங்களுக்கு நான் வசனம் எழுதியிருக்கிறேன். உதவி இயக்குனராக இருக்கிறபோது இரண்டு பேரும் ஒரே அறையில் தங்கி கஷ்டநஷ்டங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கெல்லாம் பல வருடங்களுக்கு முன்பே, லிங்குசாமிக்கும் எனக்குமான தொடர்பு கல்லூரி காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. நான் பல நேர்காணல்களில் சொல்லியிருக்கிறேன். நான் கல்லூரிப் படிப்பை முடித்ததும் என்னுடைய பேராசிரியர் ஞானசேகரனைச் சந்திப்பதற்காகத் தமிழ்த்துறைக்குப் போவேன். அப்படி, அவரது அறையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, கல்லூரி ஆண்டு மலருக்குக் கவிதை கொடுப்பதற்காக லிங்குசாமி அங்கு வந்தார். அப்போது, அவர் யாரென்று எனக்குத் தெரியாது. நான் பேராசிரியரைப் பார்த்து நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறேன். ஒரு மாணவர் எனக்குப் பின்னால் இருந்து கையை நீட்டி ஒரு பேப்பரைக் கொடுக்கிறார். அந்த மேசை மீது வைங்க என்று பேராசிரியர் சொல்கிறார். அவர் வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

அந்தக் காகிதத்தில் "கணவனுக்குத் தெரியுமா கற்பூர வாசனை" என்று ஒரு தலைப்பு. இந்த வரியைப் பார்த்த உடனே அது என்னைச் சுண்டி இழுத்தது. பார்த்தவுடனே சிரித்துவிட்டு அருமையாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்குப் பேராசிரியர், "நீங்கள் கல்லூரியில் படிக்கும்போது எந்த இடத்தில் இருந்தீர்களோ அந்த இடத்தில் இப்போது அவர் இருக்கிறார்," என்றார். நான் திரும்பிப் பார்ப்பதற்குள் அவர் ரொம்ப தூரம் போய்விட்டார். அவரோட முதுகுப் பக்கத்தைத்தான் நான் பார்க்கிறேன். அவர் முகத்தை அப்போது நான் பார்க்கவே

இல்லை. ஆனால் இப்போது இவ்வளவு நெருங்கிவருவார் என்று எனக்கு அப்போது தெரியாது.

மறுவாரம் கலை விமர்சகர் தேனுகாவைப் பார்ப்பதற்காக அவர் பணியாற்றிய கும்பகோணம் ஸ்டேட் பேங்க் போய்விட்டு வெளியே வருகிறேன். லிங்குசாமி ஸ்டேட் பேங்க் உள்ளே போய்க்கொண்டு இருக்கிறார். சென்னை புஷ்கின் இலக்கிய வட்டம் நடத்திய கவிதைப் போட்டிக்கு 20 ரூபாய் டிமாண்ட் டிராப்ட் எடுத்து அனுப்பவேண்டும். அந்த ட்ராப்ட் எடுப்பதற்காக ஸ்டேட் பேங்க் வந்து இருக்கிறார் லிங்குசாமி.

பார்த்த உடனேயே அவர் என்னைப் பார்த்துக் கேட்கிறார், “சார் இந்த புஷ்கின் இலக்கியப் பேரவை ஹைக்கூ கவிதைப் போட்டிக்கு நான் கவிதை அனுப்புகிறேன். நீங்கள் போன வருடம் அனுப்பிவைத்தீர்கள் அல்லவா, அதை எப்படி அனுப்பவேண்டும்?” என்று கேட்கிறார். அதற்கு முந்தைய வருடம் புஷ்கின் இலக்கியப் பேரவையில் நான் பரிசு வாங்கி இருக்கிறேன். அதனால் அந்த விவரத்தை அவரிடம் சொன்னேன்.

சென்னைக்கு வந்த பிறகு, அறை எடுத்து விருகம்பாக்கம் சாய் நகரில் சில நண்பர்களோடு தங்கி இருந்தேன். லிங்குசாமி உதவி இயக்குனராக வேலை தேடுவதற்கு ரெட் ஹில்ஸ்ல் தங்கியிருந்து இங்கு வந்து போவார். இந்தப் பயணத்திற்கு நீண்ட நேரம் செலவாகும். அப்போது அவர் நானும் இந்த அறையில் தங்கிக்கொள்ளவா என்று கேட்டார். தங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். எங்களோடு அவரும் வந்து தங்கிக்கொண்டார்.

அப்படித்தான் எங்களது நட்பு சினிமாவிலும் தொடர ஆரம்பித்தது. அதற்குப்பின் எங்களுடன் அறைக்குப் பலர் வருவதும் போவதுமாக இருந்தார்கள். ஆனால் நானும் லிங்குசாமியும் மட்டும் தொடர்ந்து அறை நண்பர்களாக நீடித்தோம். பிறகு எங்களுடன் வசந்தபாலன் வந்தார். நான் உதவி இயக்குனராகப் பணியாற்றிக்கொண்டே பத்திரிகையிலும் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். சில சினிமா பத்திரிகைகளுக்காக நடிகர் நடிகைகளை இயக்குனர்களைப் பேட்டி எடுத்து எழுதுவேன். மாதந்தோறும் சாப்பாட்டுக்கு, ரூம் வாடகைக்கு எல்லாம் காசு தர வேண்டுமே, அதற்காகப் பத்திரிகைகளில் வேலை பார்த்தேன். அவரும் கூட சில பேட்டிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். திரைப்படத்திற்கான கதைகளை இரவில் பேசுவோம்.

ஒருமுறை லிங்குசாமி வீட்டுக்கு, திருச்சேறைக்கு வந்தபோது நானும் கும்பகோணம் வந்திருந்தேன். ஒருநாள் காவேரிக் கரையில் உட்கார்ந்து பேசும்போது அவர் வீட்டில் நடக்கும் சம்பவங்களைத் தொகுத்து ஒரு கதை போலக் கூறினார். அதற்கு முன்பு அவர் கூறிய கதைகளை விட இதில் உயிர்ப்பு இருப்பதாகச் சொல்லி இதையே உன்னுடைய முதல் படமாக எடுவென்று அவருக்கு ஆலோசனை கூறினேன். அதை அவரும் பல பேட்டிகளில் சொல்லியிருக்கிறார். வெவ்வேறு காலகட்டங்களில் அந்தக் கதையை இருவருமாக வளர்த்தோம். கதை தயாரான பிறகும் மேலும் சில படங்களில் உதவியாளராக வேலை பார்த்தார். நானும் வேறு சில படங்களில் வேலை பார்த்தேன்.

ஒருநாள் அறையில் கையில் பேப்பரை வைத்துக்கொண்டு அவர் உட்கார்ந்திருந்தார். நான் வெளியே போய்விட்டு வந்திருந்தேன். என்னிடம் அதைக் காண்பித்தார். அப்போது அந்தப் படத்துக்கு ‘ஆனந்தம்’ என்று

பெயரில்லை. திருப்பதிசாமி குடும்பம் என்று பெயர். ஒரு வெள்ளைக் காகிதத்தில் அழகாக எழுதியிருந்தார். படத்தோட டைட்டில் எழுதி அதற்குக் கீழே என்.லிங்குசாமி, பி.சி.ஸ்ரீராம், இளையராஜா, பாலகுமாரன் என அப்போ உள்ள டாப் டெக்னீசியன் பெயரெல்லாம் அந்தப் பேப்பரில் எழுதி அழகு பார்த்துக்கொண்டிருந்தார்.

அதைப் பார்த்தவுடனே சூப்பராக இருக்கு என்று நான் சொன்னேன். அப்படியே பார்த்துகொண்டே இருந்தார். திடீர்னு பாலகுமாரன் என்கிற பெயரை அடித்தார். அந்த இடத்தில் பிருந்தா சாரதி என்று என் பெயரை எழுதுகிறார். 'ஏன்யா அதை அடிச்சிட்ட... அது நல்லாத்தானே இருக்குது, அப்படியே வச்சுக்கோ' அப்படின்னு சொன்னேன். 'இல்ல... இல்ல... அது வேண்டாம். நான் எப்போது படம் பண்ணாலும் நீதான் வசனம் எழுதுற,' என்று சொல்லிவிட்டார். இது நடந்து ரொம்ப வருஷத்துக்குப் பிறகுதான் படம் இயக்கும் வாய்ப்பு வந்தது. படம் ஆரம்பிக்க நான்கைந்து வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அவர் சொன்ன மாதிரியே படம் எடுக்கிற காலகட்டம் வரும்போது 'நீதான் வசனம் எழுதுற' என்று சொன்ன அந்த வாக்குறுதியை நிறைவேற்றினார். அதன் பிறகு தொடர்ந்து அவருடைய பல படங்களுக்கு எழுதியிருக்கிறேன். தொழில் ரீதியான நண்பர்களாக மட்டுமல்லாமல் குடும்ப நண்பர்களாகவும் தொடர்கிறது இந்த நட்பு.

**நீங்கள் புதுக்கவிதை எழுதுகிறீர்கள். அதே சமயத்தில் ஹைக்கூ கவிதையும் எழுதுகிறீர்கள். ஆனால் உங்களுடைய 'இருளும் ஒளியும்' நூல் இரண்டு வகையிலும் சிக்காத அழகான ஒரு நூல்...**

வேற ஒரு உலகத்திற்கு அழைத்துச் செல்கிற நூல் அது. அது ஒரு ஜென் நூல் என்று சொல்லலாம் அல்லது ஒரு கஸல்னு சொல்லலாம். அதையும் தாண்டி ஆன்ம தரிசனம் தருகிற ஒரு நூல் என்றும் சொல்லலாம். ஆன்ம தரிசனம் என்பது நாம் நினைப்பது எதுவோ, அதுவாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். படிக்கின்ற வரையில்தான் நீங்கள். படித்து முடிக்கும்போது நூல் உங்களை ஆக்கிரமித்துவிடும்.

ஒவ்வொரு ஆண்டும் திருவண்ணாமலை தீபம் அன்று ஏதோ ஒரு குரூப்பிலிருந்து 'நீங்கள் எழுதிய 'நீ விளக்கென்றால் இன்னொரு விளக்கை ஏற்றி வை' என்று நீங்கள் எதை நினைத்து எழுதினீர்களென்று எனக்குத் தெரியவில்லை. கார்த்திகை தீபம் அன்று அழகாக அந்தக் கவிதையைப் போட்டு அலங்காரம் செய்து விளக்கு படமெல்லாம் வைத்து உங்கள் பெயரோடு சோசியல் மீடியாவில் வலம் வருகிறது,' என்று செய்தி வரும்.

காலையில் வாட்ஸ் ஆப்பில் பேராசிரியர் அப்துல் சமது ஒரு புகைப்படம் அனுப்பியிருந்தார். திறந்து பார்த்தால் 'இருளும் ஒளியும் கவிதைப் புத்தகத்தில் இருந்து ஒரு வரியை சவுதி அரேபியாவில் இருக்கிற தமிழ்ச் சங்கத்தில் போட்டு இருக்காங்க... அது எனக்கு வந்தது. உங்களுக்காக அனுப்பிவைக்கிறேன்' என்று சொல்லி அனுப்பிவைத்துள்ளார். அது, "வெளியே எத்தனை விளக்குகள் எரிந்தாலும் உன்னைப் பிரகாசமாக்குவது உனக்குள் எரியும் சுடர்தான்" என்ற வரி.

நான் தினமும் காலையில் எழுந்ததும் ஏதாவது எழுத வேண்டுமென்று தோன்றும். உலகத்தில் வெளிச்சம் இருக்கிறது, இருட்டு இருக்கிறது, இந்த இரண்டு பற்றியும் நம்முடைய

சிந்தனையைச் செலுத்துவோமென்று, வெளிச்சம் என்றால் என்ன? இருட்டு என்றால் என்ன? கவிதை மூலமாகப் பார்ப்போமென்று முடிவு செய்தேன்.

வெளிச்சத்தைப் பற்றித் தினமும் ஒரு வரியாவது எழுதவேண்டுமென்று நினைத்து ஆரம்பித்து, ஒளியைப் பற்றி நூறு கவிதைகள், இருளைப் பற்றி நூறு கவிதைகள் எழுதலாமென முடிவு செய்தேன். காலையில் எழுந்து வெளிச்சத்தைத் தியானம் பண்ணுவது போன்று நினைத்துக்கொள்வேன். வெளிச்சத்தைப் பற்றி ஏதாவது தோன்றும். வெளிச்சத்தைக் கூட எழுதிவிடலாம்.. ஆனால் இருளைப் பற்றி என்ன எழுதுவதென்று கேள்வி வந்தது. இருளைப் பற்றி இப்போது நிறைய எழுதியிருக்கிறேன்.

வெளிச்சத்தைப் பற்றிக் கார்த்திகை தீபம் மாதிரியான திருவிழாக்கள் இருப்பதால், நான் எழுதிய கவிதைகள் பரவுகின்றன. இருட்டுக்கு எந்தத் திருவிழாவும் இல்லை. ஆனால் இருட்டும் கொண்டாடப்பட வேண்டிய முக்கியமான ஒன்று. அதுதான் இருளைப் பற்றி எழுதிய முதல் கவிதையே. ‘ஆயிரம் விளக்குகள் ஏற்றித் திருமணம் செய்யலாம். ஆனால் விளக்குகளை அணைத்துத்தான் தாம்பத்தியம் தொடங்க வேண்டும்’ என்று முதலிரவைப் பற்றி எழுதினேன். ஆகவேதான் சொல்கிறேன், இருளில் உங்களுடைய உடல் திறக்கிறது, மனம் திறக்கிறது, ஆன்மா திறக்கிறது.

கண்ணை மூடினால்தான் தியானம். கண்ணை மூடாமல் திறந்துகொண்டு வெளிச்சத்தை மட்டும் பார்த்தால் போதாது. வெளிச்சம் ஒரு பார்வையைத் தருகிறது என்றால் இருட்டும் ஒரு கதவைத் திறக்கிறது. இருட்டுக்குள்தான் உங்களுடைய புதிய முகங்கள் நிறைய இருக்கின்றன. தொடக்கத்தில் உலகம் இருட்டாகத்தானே இருந்திருக்கும்? ஒன்றுமே இல்லாமல்தான் இந்த உலகம் இருந்திருக்கும். அதன் பிறகு உருவானதுதானே எல்லாம். சூரியனாக இருந்தாலும், சந்திரனாக இருந்தாலும், நட்சத்திரங்களாக இருந்தாலும், மற்ற கிரகங்களாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் முதலில் இருட்டில் இருந்துதான் எல்லாமே ஆரம்பிக்கிறது.

இப்போது வெட்டவெளியென்ற ஒன்று இருக்கிறது. அது ஒரு காலத்துல ஒன்னுமே இல்லாமல்தான் இருந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால் ஆதி இருட்டு, கர்ப்பப்பை இருட்டு, கர்ப்பகிரகம் இருட்டு. இருட்டுக்குள் ஆரம்பித்த உன் உயிர் முடியும்போது அதே இருட்டுக்குள்தானே போகப்போகிறது. ஆக நடுவில்தான் கொஞ்சம் வெளிச்சம். ஆரம்பமும் இருட்டு... முடிவும் இருட்டுதான். இப்படி எல்லாம் தோன்றும்.

இந்தக் கவிதை என்கிற வாளை வைத்துக்கொண்டு எதை வெட்டுவது என்று தோன்றியபோது வாலையும் வெட்ட முடியாது, தலையையும் வெட்ட முடியாது, அதனால் அந்த வாளை வைத்துக்கொண்டு அறுவடை செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.

ஒரு நாளைக்கு ஒன்று. இப்படி எழுதியதுதான் இருளும் ஒளியும். அதில் அரசியல், ஆன்மீகம், காதல், தத்துவம் பற்றிய கருத்துக்களைக் கொடுக்க பல வகைகளில் முயற்சி செய்து பார்த்திருக்கிறேன். அதேபோல மரபு, புதுமை, ஹைக்கூ என்று பல சோதனைகளிலும் ஈடுபட்டேன். பணம் வந்து பாராட்டையும் பெற்றுக் கொடுத்த புத்தகம்.

சமகால எழுத்தாளர்கள் படைப்பாளிகளின் பிறந்த நாளின் பொழுதோ அல்லது திடீரென்று பழகிய மிகப்பெரிய ஆளுமைகள் யாரும் இறந்து

**விட்டால் அவர்களுக்கான அஞ்சலியின் பொழுதோ அவர்களுடைய நினைவுகளை மிகக் காத்திரமாக மிக ஆழமாக உங்கள் முகநூல் பக்கத்தில் எழுதுகிறீர்கள். தாங்கள் செய்யும் அந்தப் பணி போற்றுதலுக்குரியது.**

முகநூல் மற்றும் சமூக ஊடகங்கள் என்று எடுத்துக்கொண்டால் எதிர்மறை எண்ணங்கள்தான் பெரும்பாலும் உலவுகின்றன. வெறுப்புணர்ச்சியைத் தூண்டுவது போல அங்கு பதிவேற்றம் செய்யப்படுகிறது. சமூக ஊடகத்தில் நிமிடத்திற்கு நிமிடம் ஆயிரக்கணக்கில் பதிவுகள் வந்துகொண்டேதான் இருக்கின்றன. வெறுப்புக்கு மறுப்பு போடுவதை விட பாசிட்டிவா நேர்மறைச் சிந்தனைகளை விதைப்போம் என்கிற எண்ணம் எப்போதும் எனக்கு உண்டு. அதற்காக முகநூலை நான் பயன்படுத்துகிறேன்.


அவனை எனக்குப் பிடிக்காது, இவனை எனக்குப் புடிக்காது என்ற வெறுப்புணர்ச்சிதான் முகநூலில் சிலரை இயங்கவே வைக்கிறதோ என்றும் நினைக்கிற அளவுக்கு அது வளர்ந்து கிடக்கிறது. அதனால்தான் எனக்குத் தெரிந்த என்னோடு பழகிய எழுத்தாளர்களுக்கு அவர்களுடைய பிறந்தநாளுக்கு சும்மா வாழ்த்துக்கள் சொல்லாமல் அவர்களுக்கும் எனக்குமான நட்பை, உறவை எழுத்து மூலமாக நான் பகிர்ந்துகொள்கிறேன். எழுத்து மூலமாக அவர்களிடமிருந்து என்ன பயன் அடைந்தேன் என்பதையெல்லாம் விரிவாக எழுதுவேன்.

வெறுமனே பிறந்தநாள் வாழ்த்து சொல்வதில் என்ன இருக்கிறது? அதில் ஒன்றும் இல்லை. அதனால் அவரைப் பற்றித் தெரியாதவர்களும், தெரிந்துகொள்ளட்டுமே என்ற எண்ணத்தில் நேர்மறை எண்ணங்களை எல்லாருக்கும் ஊட்டுவோம் என்கிற நோக்கத்தில்தான் அதை எழுதிக்கொண்டு இருக்கிறேன். என்னிடம் சில பேர் நீங்கள் பதிவு செய்யும் பிறந்தநாள் வாழ்த்துக்களில் பிரபலமானவர்கள் மட்டும் இன்றிப் பிரபலமாகாதவர்கள் பற்றியும் எழுதுகிறீர்களே என்று கேட்கிறார்கள். உண்மை அதுதான். நல்ல பண்புகள் எங்கிருந்தாலும் அதைக் கொண்டாட வேண்டும். அதை ஒரு தொகுப்பு நூலாகக் கூட கொண்டு வரலாம் என்று சொல்கிறார்கள். நீண்ட காலத்திற்கு முன் அறிஞர் அண்ணா பொங்கல் விழாக்களில் பேசிய உரைகள், அவர் எழுதிய கட்டுரைகள் இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டார்கள்.

அதே மாதிரி எழுத்தாளர்களைப் பற்றி, ஓவியர்களைப் பற்றி, மற்ற திரைத்துறையில் இயங்குகின்ற தொழில்நுட்பக் கலைஞர்களைப் பற்றி, நடிகர்களைப் பற்றி, இயக்குனர்களைப் பற்றி, தயாரிப்பாளர்களைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறேன். பிறந்த நாளிற்காகவே நான் நிறைய நேரத்தைச் செலவிட்டு அதனைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறேன்.

**கல்லூரிப் பாடங்களிலும் உங்களுடைய கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன. உங்கள் படைப்புகள் இளைய சமுதாயத்தினரைக் கவர்ந்திருக்கின்றன. இதைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நன்றி. என்னுடைய ‘ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்’ என்கின்ற புத்தகத்திலிருக்கும் கவிதைகளைக் கல்லூரிகளில் பாடத்திட்டத்தில் வைத்திருக்கிறார்கள். அது ஒரு அழகியலான கவிதை. விடுமுறை நாளின்போது ஒரு பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது என்று பதிவு செய்த கவிதை. பாடத்திட்டத்தைத் தாண்டி நாம் பார்ப்பதற்கும் கற்பதற்கும் எத்தனையோ நிகழ்வுகள் நம்மைச் சுற்றி நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அவை நடத்தும் பாடத்தைப் போல பாடப் புத்தகங்களால் பாடம் நடத்திவிட முடியாது.



இயற்கை வாழ்க்கைக் கல்வியை மரங்களின் மூலமாகவும் சிற்றுயிர்கள் மூலமாகவும் பருவ காலங்களின் மூலமாகவும் அழகாக நடத்திக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் தாகூர் தன்னுடைய கல்விக்கூடமான சாந்தி நிகேதனில் இயற்கைச் சூழலில் மரத்தடிகளில் வகுப்புகளை நடத்தினார். அது ஒருவகையில் குழந்தைகளின் மன அழுத்தத்தைக் குறைப்பதோடு விடுதலை உணர்வையும் அளிக்கும். எதிர்காலத்தில் வாழ்க்கையைத் தன்னம்பிக்கையோடு எதிர்கொள்வதற்கும் பிற உயிர்கள் மீது நேசம் கொள்வதற்கும் சிறு வயதில் கற்பித்தால்தான் உண்டு. அதன் பிறகு தொழிற்கல்விக்குப் போகிறபோது அடிப்படைப் பாடங்களை நடத்திக்கொண்டிருக்க முடியாது.

அடிப்படை ஒழுக்கம் இல்லாமல் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனால் எந்த பயனும் இல்லை. இவற்றையே கவிதை போன்ற இலக்கிய வடிவங்கள் மாணவர்களுக்குச் சொல்லித் தருகின்றன. பிற மனிதர்களோடு எப்படி உறவு கொள்வது மற்றும் உயிரினங்களோடு எப்படி சகோதரத்துவம் பாராட்டுவது என்பதை எல்லாம் ஒரு கவிஞன்தான் சொல்லித் தர முடியும் என்று நினைக்கிறேன். 'ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்' கவிதையில் வரும் எறும்புகளும், தவளையும், மரங்கொத்தியும், அணிலும் நம்மோடு சக உயிர்களாகத் தாமும் வாழ்ந்துகொண்டு இருப்பதைக் கவனிக்கச் சொல்கின்றன.

அதேபோல சில ஹைக்கூ கவிதைகளை 'மீன்கள் உறங்கும் குளம்' புத்தகத்திலிருந்து பாடத்திட்டத்தில் வைத்துள்ளார்கள். அவை இயற்கையை மட்டுமல்லாமல் அவற்றின் பின்னால் இருக்கிற உலக இயக்கம், வாழ்வின் ரகசியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல விஷயங்களைப் பேசுபவை. இப்படிப் பல கவிதைகளை நானும் எழுதியிருக்கிறேன், பிறரும் எழுதியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பள்ளிக்கூடங்களிலேயே பாடமாக வைக்கிறார்கள். இது ஒரு வரவேற்கத்தக்க சூழ்நிலை. அதுபோல என்னுடைய கவிதைகளை எம்ஃபில் ஆய்வுக்கும் பிஹெச்டி ஆய்வுக்கும் எடுத்து ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றி.

**உங்கள் கவிதைகளில் ஒரு வாழ்க்கை இருக்கிறது. நீங்கள் அனுபவித்த, பார்த்த விஷயங்களை வைத்து நீங்கள் சிறுகதையோ நாவலோ ஏன் எழுதக்கூடாது?**

என் கவிதைகளில் வாழ்க்கை இருக்கிறது என்று சொல்லியதற்கு மிக்க மகிழ்ச்சி. நன்றி. என்னுடைய சில கவிதைகளைக் கதை போலத்தான் சொல்லியிருக்கிறேன். சிறுகதையும் நாவலும் எழுதவேண்டுமென்று இப்போது நினைக்கிறேன். அவ்வப்போது சில சிறுகதைகள் எழுதியிருக்கிறேன் என்றாலும் நிறைய நாட்களாக அதை நான் நினைக்கவே இல்லை. திரைக்கதை, வசனம் என்பன என்னுடைய தொழில் சார்ந்து இருப்பதால் அவற்றை எழுதி

வருகிறேன்.

கடந்த பத்தாண்டுகளாகக் கவிதைகளை மட்டுமே இலக்கியப் படைப்புகளாக எழுதிக்கொண்டிருக்கிறேன். சிறுகதை, நாவல் ஆகிய வடிவங்களிலும் எழுதவேண்டுமென்று இப்போது நினைக்கிறேன். ஏனென்றால், ஒரு கவிஞன் கவிதை மட்டும் எழுதினால் போதாது. மிகச்சிறந்த கவிஞர்களான மகாகவி பாரதி, மகாகவி ரவீந்திரநாத் தாகூர் என அனைவருமே கவிதையோடு சிறுகதை, நாவல், கட்டுரை என எல்லா வடிவங்களிலும் எழுதியிருக்கிறார்கள். கவியரசர் கண்ணதாசனும் அப்படித்தான். அவர் திரைப்படப் பாடல்கள் அல்லது மரபுக் கவிதைகளை மட்டும் எழுதவில்லை. திரைக்கதை, வசனம், நாவல், சிறுகதைகள், கட்டுரைகள் தலையங்கங்கள் என்று பல விதங்களிலும் செய்திருக்கிறார். நீங்கள் கூறியது போன்று சிறுகதையும் நாவலும் எழுதுவேன்.

**இன்றைய இளைய சமுதாயத்திற்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பொதுவாக இளைஞர்களுக்கு நல்ல வாசிப்பு இருக்க வேண்டும். உலகப் பிரச்சினைகளை, நம்மைச் சுற்றி நடக்கிற அரசியல், சமூக, பண்பாட்டு நிகழ்வுகளை உற்று நோக்குகின்ற மனப்பான்மையும் தினசரி செய்தித்தாள்களைப் படிக்கின்ற பழக்கமும் இருந்தால் நல்லது. சில நிமிடங்கள் தொலைக்காட்சி பார்த்து, அன்றாட செய்திகளை உள்வாங்குவதன் மூலம் உலக நிகழ்வுகளை அறியலாம். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற பெரும்பான்மையான இளைஞர்கள் சமூகப் பிரச்சனைகளுக்கும் நமக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லாதது போல் நடந்துகொள்கிறார்கள். வெறுமனே பாடத்திட்டத்தோடு நின்றுவிடுகிறார்கள்.

நாங்கள் அரசுக் கல்லூரியில் படிக்கும்போது எங்களுக்கு வெளி உலகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள நிறைய வாய்ப்புகள் இருந்தன. இப்போது தனியார் கல்லூரிகள் பெருகிவிட்டன. பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகள் வளர்ந்திருக்கின்றன. தொழில் சார்ந்த படிப்பு மனம் இருப்பது பெரும் மகிழ்ச்சிதான். ஆனால் வெறும் மதிப்பெண் வாங்குகின்ற இயந்திரங்களாக மாணவர்களை மாற்றிவிட்டது. வேறு மாதிரி சொல்வதென்றால், பிராய்லர் மாணவர்களாக இந்தக் கல்வித் திட்டம் மாற்றிவிட்டது. எப்போது பார்த்தாலும் மனப்பாடம். டார்கெட், மார்க் இவற்றைத் தவிர வேறு ஒன்றும் அவர்கள் தெரிந்துகொள்வதில்லை. அரசியலில் ஈடுபடாவிட்டாலும் நம்மைச் சுற்றி நடப்பவற்றையாவது கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும். உலகப் பிரச்சனைகளையும், நாட்டு மக்கள் நலன்களையும், நடப்புகளையும், சமூகப் பிரச்சினைகளையும் கவனித்தால்தான் நல்ல அரசியல் தலைவர்களை உருவாக்க முடியும்.

நல்ல அரசியல் திடீரென உருவாகிவிடாது. அதை உருவாக்கும் மக்களும் தெளிவான பார்வை உடையவர்களாக இருப்பது அவசியம். அதற்கு இளைஞர்கள் முக்கியமான அடித்தளம். படித்து முன்னேறி தங்கள் குடும்பம், தங்கள் வாழ்க்கை இவற்றை அமைத்துக்கொள்வதோடு நம்மைச் சுற்றி இருக்கிற மக்களும் நம்மைப் போலவே நலமாகவும் வளமாகவும் வாழ்வதற்கு நாம்தான் பொறுப்பு என்ற உணர்வோடு பணியாற்றுவோர்களாக இருப்பதற்குச் சமூகப் பார்வை அவசியம். அதையும் கூடவே தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

யார் யாரை ஆட்டுவிப்பது
நடராசர் முன்
சுடர்

•

முள்ளை
சம அளவில் நிறுத்தவிடாமல்
தராசில் துள்ளுகிறது மீன்

•

பெயரிடப்படாத ஆறுகள்
கண்ணாடியில்
மழை

••

பூக்காரர்
குப்பையில் கொட்டுவதும்
பூக்கள்தாம்

•



தொடர்-45

மு.முருகேஷ்




# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

எண்பதுகளில் என் பொழுதுகள் முழுவதும் கவிதைகளாலேயே கழிந்தன. நண்பர்களிடமிருந்து பெற்றவை, நூலகத்தில் எடுத்தவை, பழைய புத்தகக் கடையில் வாங்கியவை என நாளொன்றுக்குக் குறைந்தது ஒரு கவிதை நூலையாவது வாசித்துவிடுவது என் வழக்கமாக இருந்தது.

மூத்த கவிஞர், பிரபலமான கவிஞர், புதிய இளைய கவிஞர்.. என்கிற பாகுபாடு ஏதுமின்றி, கண்ணில் பட்ட / கையில் கிடைத்த கவிதை நூல்கள் எதுவானாலும் என் வாசிப்புக்குத் தீனி போட்டன.

அன்றைய என் வாசிப்பில் எனக்குப் பிடித்த கவிஞர்களின் பெரிய பட்டியலில் சில ப்ரியா எனும் பெயருடைய கவிஞர்களின் பெயர்களும் இருந்தன. ப்ரியா எனும் பெயரில் எழுதுவது ஆண் கவிஞர் என்பது அப்போதெனக்குத் தெரியாது. அந்தக் கவிஞர்கள் ஆணென்று தெரிந்த பின்னரும், அவர்களது கவிதைகளின் இரசிகனாகவே நான் தொடர்ந்தேன் என்பதே உண்மை.

அதில் முதலாமானவர் கவிஞர் கலாப்ரியா. தி.க.சோமசுந்தரம் எனும் இயற்பெயரையுடைய கலாப்ரியாவின் 1985ஆம் ஆண்டில் வெளியான ‘சுயம்வரம்’ கவிதை நூல், எனக்கு மிகவும் பிடித்தமான நூலாகும்.

1970களில் வானம்பாடி கவிதை இயக்கம் பெரும்வீச்சோடு செயலாற்றியது. அச்சூழலில் புதிய பாய்ச்சலோடு புதுக்கவிதைகளை எழுதியவர் கவிஞர் பாப்ரியா. கவிஞர் பாப்ரியாவின் பல கவிதை நூல்களை நூலகத்தில் படித்தேன். நர்மதா பதிப்பக வெளியீடாக வந்த அந்த நூல்களின் அழகான அட்டையும் நேர்த்தியான அச்சாக்கமும் இன்னமும் என் கண்களில் அப்படியே பதிந்துள்ளன.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில்

சிற்றிதழ்களின் வழி எனக்கு அறிமுகமான பெயர் க.அம்சப்ரியா. மிகையான வார்த்தை ஜோடனைகள் இல்லாமல், பூத்த மலரின் நறுமணமும் உழைப்பில் கனிந்த வியர்வை வாசமும் கலந்த அம்சப்ரியாவின் கவிதைகள் எனக்கு ரொம்பவே பிடித்திருந்தன. பல இதழ்களில் எனது கவிதையும் அம்சப்ரியாவின் கவிதையும் பிரசுரமாகின. சில இதழ்களில் ஒரே பக்கத்தில் இருவரது கவிதைகளும் இடம்பெற்றிருக்கும். அப்போதெல்லாம் எனக்கும் அம்சப்ரியாவுக்குமான நெருக்கம் அதிகமாகிக்கொண்டே வருவதாக நினைத்துக்கொள்வேன்.

'பாதத்தில் பட வேண்டிய முட்களெல்லாம் நெஞ்சிலே கீறலிடச் சிதறிய இரத்தத் துளிகளே எனது கவிதைகளாய்..' என்று தன் கவிதைகள் பற்றி முன்மொழியும் க.அம்சப்ரியாவின் கவிதைகளைப் படித்துவிட்டு, கவிஞருக்கு நானொரு கடிதமெழுதினேன். உடனே அவரும் பதிலெழுதினார். அன்று தொடங்கிய எங்களுக்குள்ளான தோழமை, இதோ.. ஒரு தலைமுறையைக் கடந்தோடிவிட்ட நிலையிலும் முன்னிலும் நெருக்கமாகவும் இணக்கமாகவும் இன்றளவும் தொடர்கிறது என்பதில் மனநிறைவடைகிறேன்.

கோயமுத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்திலுள்ள பில்சின்னாம்பாளையம் எனும் கிராமத்தில் 1967ஆம் ஆண்டு மே 21 அன்று கருப்புச்சாமி வள்ளியம்மாளின் மகனாகப் பிறந்தவர் க.அம்சகோபால் முருகன். பள்ளியில் படிக்கையில் புத்தக வாசிப்பில் ஆர்வம் உண்டானது. பன்னிரண்டாம் வகுப்பில் படிக்கும்போதே கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

கவிஞர்கள் பாப்ரியா, கலாப்ரியா, விக்ரமாதித்தன், கல்யாண்ஜி, ஆத்மநாம், பிரமிள், இன்குலாப்.. என விரிந்த வாசிப்புப் பழக்கத்தை இளைய வயதிலேயே கொண்டிருந்தார் அம்சகோபால் முருகன். தனது 17ஆவது வயதில் எழுதிய முதல் கவிதை 'கண்கள் தமிழ் மலர்' எனும் இதழில் பிரசுரமானது. அப்போதிருந்தே க.அம்சப்ரியா எனும் புனைபெயரில் கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

'உன்னைப் பிரிந்த
என் மனசு
வெறிச்சோடிப் போனது
ஒரு கிராமத்தின்
மத்தியான தெரு போல..!'

ஒரு கிராமத்தின் மத்தியான தெருவை, வெறிச்சோடிப்போன மனதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பார்வை எல்லோர்க்கும் வாய்த்து விடுவதில்லை. ஆனால், கவிஞர் க.அம்சப்ரியாவுக்கு அத்தகைய கவிப்பார்வை இயல்பிலேயே வாய்த்துள்ளது.

கவிஞர் பத்தாம் வகுப்பு படிக்கும்போது தந்தையார் இறந்துபோகிறார். தந்தையின் மறைவுக்குப் பிறகு வீட்டில் பொருளாதார நெருக்கடி வரவே, படிக்கிற காலத்திலேயே விடுமுறைகளில் அம்மாவோடு சேர்ந்து காட்டு வேலைக்குச் சென்று வந்தார் அம்சப்ரியா. பன்னிரண்டாம் வகுப்பை முடித்த கையோடு, உரக் கடை, மளிகைக் கடை, எண்ணெய்க் கடை எனப் பல கடைகளில் வேலைகளுக்குச் சென்றாலும், படிப்பின் மீதான ஆர்வத்தினால் கந்துவட்டிக்குக் கடன் வாங்கி, இளங்கலை, முதுகலை பொருளாதாரம் படித்தார். மக்கள் நலப் பணியாளராகவும் சில காலம் பணியாற்றினார்.

க.அம்சப்ரியா எழுதிய கவிதைகளில் சில என் நினைவடுக்கில் இன்னமும் பத்திரமாகவே இருக்கின்றன. என்றாலும், 'எத்தனை நாளைக்கு?' என்றொரு கவிதை. ஒருபோதும் மறக்கவே முடியாத வலியைச் சுமந்த வரிகளையுடைய கவிதையது.

'எங்கள் தெரு
சீதை
ஒருநாள்
இராவணனுடன்
ஓடிப்போனாள்.
பாவம்!
எத்தனை நாட்கள் தான்
அவள் இராமனின் வருகைக்காகக்
காத்திருக்க முடியும்?'

எந்தவொரு காத்திருப்புக்கும் ஏதாவது ஓர் அவசியமோ, அர்த்தமோ உள்ளிருக்க வேண்டும். எதுவுமேயில்லாத காத்திருப்பினால் என்ன பயன் விளைந்துவிடப் போகிறது..? சீதையை மிகச் சரியானதொரு முடிவினைக் காலத்தே எடுக்க வைத்த கவிஞராக க.அம்சப்ரியா என் மனதில் உயரிய இடமொன்றைப் பிடித்துக்கொண்டார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸும் இணைந்து அப்போதெல்லாம் எட்டயபுரம் பாரதி விழாவையொட்டி, கவிதை நூல் போட்டியொன்றினை நடத்தும். அவ்வாறு 1990ஆம் ஆண்டு நடத்திய போட்டியில் க.அம்சப்ரியா எழுதிய கையெழுத்துப் பிரதியான 'சூரியப் பிரசவங்கள்' முதல் பரிசை வென்று, 1994இல் அது நூலாகவும் வெளிவந்தது.



1992 முதல் 1995 வரை கோவை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், பின்னர் எழுத்தறிவு ஒருங்கிணைப்பாளராகவும் திறம்பட பணியாற்றினார்.

1999 முதல் பொள்ளாச்சியிலுள்ள தனியார் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். இடைக்காலத்தில் வேள்வி, சூரிய வீதி எனும் இரு சிற்றிதழ்களைத் தொடங்கி, சில இதழ்களை வெளிக்கொண்டு வந்தார். தொடர்ந்து கவிதைகளை எழுதி வந்தாலும், சரியாய்ப் பத்தாண்டுகளுக்குப் பிறகு 2004இல் க.அம்சப்ரியாவின் இரண்டாவது கவிதை நூலான 'யாராவது வருகிறார்கள்' வெளிவந்தது. பின்னர் தேக்கமின்றி ஓடும் ஓடையெனத் தன்போக்கில் கவிதைகளை எழுதி வந்த கவிஞர் க.அம்சப்ரியாவின் கவிதைகள் நூல்களாகவும் மலர்ந்தன.

உங்களிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை, இரவுக் காகங்களின் பகல், வழிப்போக்கன் சொல்லாத குறிப்புகள், அம்சப்ரியா கவிதைகள், என் இரவு தேநீர்க் கோப்பையாகிறது, கனவின் இலைகள் ஆகிய கவிதை நூல்களையும், பறத்தலை விரும்பும் பறவைகள், சொற்களில் ஒளிந்திருக்கும் மௌனம், கல்வி நூறு சிந்தனைகள், வகுப்பறையே ஒரு வரம்தான், வாழ்க்கை ஒரு திருவிழா ஆகிய கட்டுரை நூல்களையும், அன்புள்ள ப்ரியமே..., பயணம்

எனும் இரு குறுநாவல் நூல்களையும், கவிதைக்குள் அலையும் மனச்சிறகு, பூனையின் கடவுளும் கவிதைப் பறவையும் எனும் இரு சிறு நூல்களையும், உதிரும் வேர்கள் எனும் சிறுகதை நூலொன்றையும் எழுதியுள்ளார்.

கல்வி சார்ந்த சிந்தனைகளோடு, குழந்தைகளின் மனவுலகையும் சேர்ந்தே கவிதைகளைப் படைப்பதில் க.அம்சப்ரியா தனித்துவமானவராக ஒளிர்கிறார். கவிஞரது 'குழந்தைகளின் கனவில் மிதக்கும் பயணம்' என்றொரு கவிதையில்,

'கடந்து போகிற
மரங்களின் கிளைகளில்
ஊஞ்சல் கட்டி
விளையாடக்கூடும்


தூரத்தில் தெரிகிற
மலைகளின் உச்சியிலிருந்து
வானத்தைத் தொட்டு
மகிழ்வின் உச்சத்திற்குச்
செல்லக்கூடும்

அருகில் வந்து
கண்ணாமூச்சி காட்டிப்போகிற
வண்ணத்துப்பூச்சியின்
சிறகிலமர்ந்து
உலகத்தைச் சுற்றவும் கூடும்

எதிர்கொள்கிற
ஆற்றுக்குள் மூழ்கி
பிடித்தமான மீன்களுக்கு
முத்தமிட்டும் வரலாம்

நின்றபடி
நெரிசலில் பயணிக்கும்
அச்சிறுவர்களுக்குப்
பிரியமாய் பரிசாக்குங்கள்
நீங்கள் அமர்ந்திருக்கிற
அந்த ஓரத்து இருக்கையை!'

என்றெழுதியிருப்பார். இதுதான் கவிஞரது குழந்தைமை மனதிற்குச் சான்றாகும் வரிகளாக நம்மை ஈர்க்கின்றன.



பொள்ளாச்சியின் ஆனைமலையிலிருந்து வெளிவரும் 'புன்னகை' எனும் இதழினை நண்பரும் கவிஞருமான செ.ரமேஷ்குமாருடன் இணைந்து, இதுவரை 85 இதழ்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறார் என்பதும் சாதனையான ஒரு செயல்பாடுதான்.

கல்வி மீதான தேடலில் தொடர்ச்சியாக பி.லிட்., பி.எட்., எம்ஃபில்., ஆகிய பட்டப் படிப்புகளையும் நிறைவு செய்துள்ள கவிஞர் க.அம்சப்ரியா, 'இனிய ஹைக்கூ இதழின் ஹைக்கூ பங்களிப்பு' எனும் தலைப்பில் இளமுனைவர் பட்டத்திற்கான தனது ஆய்வினையும் முடித்துள்ளார்.

*2006*இல் இருவாட்சி வெளியீடாக வந்த 'உங்களிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை' கவிதை நூலெங்கும் மறைந்து கிடக்கும் மனித மனதின் ஈரப்பக்கங்களை மயிலிறகு கொண்டு தொட்டுக்காட்டியிருப்பார். அதிலும் அந்த 'மனம்' கவிதை ரொம்பவும் விசேசமானது.



'இன்றைக்கும் அவர்களிடம்
அடிபட்டு காயத்தோடு
அழுதபடி வந்தமர்ந்தது
அக்கிளி
ஆயிரம் ஆறுதல் கூறி
ஓய்வெடுக்கக் கூறிய மறுகணம்
புறப்பட்டுப் போயிற்று
மறுபடியும் வேடர்களிடம்.'

(பக்கம்: 46)

இக்கவிதையில் கிளியென்பது ஒரு குறியீடே; மனித மனம் போல் பறந்துகொண்டேயிருக்கும் கிளியைச் சொல்லி, மீண்டும் மீண்டும் ஏமாற்றுப் பேர்வழிகளிடமே தஞ்சமடையும் நிலையைச் சுட்டிக்காட்டியுள்ள விதம், இக்கவிதையை இன்னும் கனமுடையதாக்குகிறது.

'அம்சப்ரியா கவிதைகள்' (2017) நூலெங்கும் நிறைந்திருக்கும் தலைப்பில்லாக் குறுங்கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனுபவத் துளிகளின் கவித்துவமான சேகரம் எனலாம். எதை இழந்தாலும் அன்பு மட்டுமே நமக்கான நம்பிக்கையாக நம்மை என்றும் வழிநடத்துமென்பதை நேர்த்தியாகச் சொல்லியிருக்கும் கவிதையொன்று;

'உனக்கு மட்டுமே புரிந்த
ஓர் அன்பும்
உனக்கு மட்டுமே உணர்த்தப்பட்ட
ஒரு துரோகமும்
உனக்கு மட்டுமே
நினைவுபடுத்தப்பட்ட
ஒரு வஞ்சகமும்
உலாவும் இவ்வரிகளில்
நமக்கு மட்டுமேயான
ஒரு கவிதை
ஒரு பூங்கொத்தோடு
வரவேற்கிறது நம்மை!'

(பக்கம்: 58)

2018 ஆகஸ்ட்டில் வெளியான 'வழிப்போக்கன் சொல்லாத குறிப்புகள்' நூலில், அதிஸ்யா எனும் சிறுமியைத் தன் கவிதைப் பாத்திரமாகவே அடையாளப்படுத்துகிறார் க.அம்சப்ரியா. வாசிக்க வாசிக்க நம் குழந்தைகளுள் ஒருவரைப்போல நம்மோடு ஒன்றிப்போகும் அதிஸ்யா, பல கவிதைகளில் ஆடுகிறாள்; பாடுகிறாள்; ஓடுகிறாள்.

'நடுவழியில் தடுமாறி நிற்பதாக
வழி சொல்லத் துவங்கியவர்களின்
பாதையெங்கும் ஓடிச் சலித்த
சிறுமி அதிஸ்யா
தன் உலகம் ஒரு பஞ்சுமிட்டாயில்
இருப்பதை நினைவூட்டிக்கொண்டவள்
சோன்பப்டியைத் துணைக்கு
அழைத்துக்கொண்டு
வழக்கமான பாதைக்குத் திரும்புகிறாள்
ஒரு நாம்பல் நகப்பழத்தையும்
தோழமையாக்கி
நடக்கத் துவங்குகிறாள்
நீண்டிருக்கிறது தூரமற்ற பயணம்.'

(பக்கம்:61)

'சூரியப் பிரசவங்கள்' நூலில் 'ஹைக்கூ ஊர்வலம்' எனும் தலைப்பில் க.அம்சப்ரியா, சில ஹைக்கூ கவிதைகளை எழுதியிருப்பார்.

'தெருவில் தினம்வரும் சூரியன்
ஜன்னலில் மலரக் காத்திருக்கும்
நான்.'

கவிஞரது தெறிப்பும் ஆழமுமான ஹைக்கூ கவிதைகளைப் படித்துவிட்டு, 'ஹைக்கூ நூலொன்றை வெளியிடுங்கள்' எனும் கோரிக்கையைப் பலமுறை நான் வைத்திருக்கிறேன். என் பல்லாண்டுக்கால கோரிக்கை 2020இல் நிறைவேறியது. 'வீடெங்கும் வேப்பம் பூ வாசனை' எனும் ஹைக்கூ நூலினை க.அம்சப்ரியா வெளியிட்டார். அந்நூலில் எனக்கு மிகவும் பிடித்த பல கவிதைகளில் இவ்விரு கவிதைகளுக்கும் இடமுண்டு.

'கடவுளை வரைந்தாள் சிறுமி
தரிசனம் பார்த்து
திரும்புகிறார் கடவுள்.'

'திடுக்கிட்டு விழிக்கிறான்
கனவில் அறுவடை
நிலமிழந்தவனின் இரவு.'

தனது கவிதை நூல்களுக்காகத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம், சிவகாசி பாரதி இலக்கிய சங்கம், நொய்யல் இலக்கிய விருது, சிற்பி இலக்கியப் பரிசு, கவிக்கோ அப்துல்ரகுமான் நினைவு ஹைக்கூ போட்டியில் முதல் பரிசு உள்ளிட்ட பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ள கவிஞர் க.அம்சப்ரியாவின் கவிதைகள், பொள்ளாச்சி என்.ஜி.எம் கல்லூரி, உடுமலை விசாலாட்சி கல்லூரி, சித்தூர் பாலக்காடு கேரளா பல்கலைக்கழகம் மற்றும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.





தமிழக அரசின் சமச்சீர்ப் பாடத்திட்டக் குழுவில் இடம்பெற்று, பாட நூல்கள் உருவாக்கத்திலும் பங்களிப்பை ஆற்றியுள்ள கவிஞர் க.அம்சப்ரியா, பொள்ளாச்சி இலக்கிய வட்டம் எனும் அமைப்பின் தலைவராகச் செயலாற்றி, ஜூலை 2025 வரை 134 கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தியுள்ளார். மேலும், தான் பிறந்த ஊரான பில்சின்னாம்பாளையத்தில் அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு மையத்தைத் தொடங்கி, அதன் வழியாக குழந்தைகளுக்கான கல்வி மற்றும் புத்தக வாசிப்புக்கான முன்னெடுப்புகளையும் செய்து வருகிறார்.

'ஆநிரைக் கள்வன்
தன் பூவொன்றினை
வழியில் தவறவிடுகிறான்
மீட்பனின் கையில்
அடிமைப்பட்ட பூவிற்குச்
சொல்ல ஆயிரம் கதைகள்...'

என்றெழுதியிருக்கும் கவிஞர் க.அம்சப்ரியாவின் கவிதைகளெங்கும் ஒரு சிறுகதைக்கான சின்னச்சின்ன வெளிச்சப்புள்ளிகள் தென்படுவதைக் காணலாம். இன்றைக்குச் சிறுகதை, குறுநாவல்களை எழுதி, அதற்கான பரிசுகளையும் பெற்றுவரும் கவிஞர் எழுதியிருக்கும் ஒவ்வொரு கவிதை நூலிலும் சில கதைக்கவிதைகள் உண்டு.

'உங்களிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை' எனும் நூலில் இடம்பெற்றுள்ள 'மதுரை மீனாட்சி' எனும் கவிதைக்குள் ஓர் அழகான கதையும் இருப்பதைக் காணலாம்.

'மீனாட்சியின் கிளி
நகருக்குள் தானியம் பொறுக்கச்
சென்றுவிட்ட பின்
வேறு பொழுதுபோக்கிற்காக
சற்றே நகரை உற்றுப் பார்க்கத்
துவங்கினாள் மீனாட்சி.
ஞானப்பால் ஊற்ற ஆளற்ற
குழந்தைகள் நகரெங்கும்
எச்சில் துடைத்தபடியிருந்தார்கள்.

ஒரு வாளி வியர்வைக்கு
ஒரு துளி தங்கக்காசு கனவில்
காலம் கழிய
அல்லாடியிருக்கிறார்கள்
ஒருவேளை உணவுக்கே
இழுத்துக்கோ பிடிச்சிக்கோவென்று.

மூத்த பிள்ளையான கணேசன்
கம்பீரத்தின் சின்னம்
நாலணாவுக்கு கையேந்தும் காட்சி பார்த்து
கோயிலுக்கு வெளியே அல்லாடத் துவங்கி
மீண்டும் கரும்பு தின்னும்
கல்யானை பார்க்க
விருப்பமற்ற கூட்டம்
பிரசாதக் கடையில் வாங்கிய
புளியோதரை தின்று ஏப்பமிட்டு
அன்றைய பக்திக் கோட்டாவிற்கு
முற்றுப்புள்ளி வைக்கலானது
மீனட்சியோ வேறு வழியற்று
நகர்வலம் முடித்து
கோயிலுக்குள் ஜோதியாகிறாள்.'

(பக்கம்: 48)

மதுரை மீனாட்சி மட்டுமா, தன் கவிதைகளையே ஜோதியாக்கி, வாசக மனப்பரப்பில் ஒளியினைப் பாய்ச்சிவரும் கவிஞர் கவிஞர் க.அம்சப்ரியாவின் தொடர் கவிதைப் பயணத்தில் இன்னும் பல சிகரங்களை எட்டிப்பிடிப்பார் என்பது விடியலைப்போலவே நிச்சயமான ஒன்றே.

*




# ரோபோவின் பாய்ச்சல்

**திரைப்படம்**

**CHAPPIE**

கவிஜி

ஒரு ரோபோ... குழந்தையாக இருந்து ஒவ்வொன்றாகக் கற்றுக்கொண்டு பெரிய மனிதன் ஆகி... இந்த உலகை எதிர்கொண்டால் அதுதான் சாப்பி.

ரோபோ படங்கள் நிறைய பார்த்திருந்தாலும்... இந்த Chappie கொஞ்சம் ஒல்லி பெல்லி Chubby.

அதே நல்லது கெட்டது. அதே நன்மை தீமை. அதே வினை எதிர்வினை. அதே சரி தவறு. அதே தோற்றம் மறைவு. மொத்தத்தில் அதே உலகம். ஆனால் சாப்பி அதை உள்வாங்கும் முறை அதற்கு வினையாற்றும் செயல் எனத் தொழில்நுட்பத்தை விளைய வைத்திருக்கிறார்கள். காட்டும் உடல் மொழி ஆகட்டும். பேசும் வாய்மொழி ஆகட்டும். நடையில் இருக்கும் மானுட சாயலாகட்டும். எல்லாமே கண்கள் விரியச் செய்யும் ஆச்சரிய அனுபவம்.

நேராக மரக்கட்டை போல நடக்கும் ரோபோவைத்தானே நாம் அறிவோம். இது மனிதன் போலவே நெளிந்து வளைந்து அழுது புலம்பி மகிழ்ந்து சிரிக்கும் ரோபோ. இரும்பு உடையே உடலாக இருக்க.. தலையில் ஹெல்மெட் மூஞ்சி ரசனை.

காணக் காண கண் முன்னால் அசத்தும் அத்தனை பெரிய குழந்தையை அள்ளி எடுக்கத் தோன்றும் மனநிலை படம் பார்த்து முடிகிற வரையிலும் ஒவ்வொரு காட்சியிலும் நமக்கு வரவே செய்கிறது. அது சிரித்தால் சிரிக்கிறோம். பிரச்சனையில் மாட்டிக்கொண்டால் பயப்படுகிறோம். நமக்குள் இருக்கும் ரோபோவுக்கும் உயிர் வந்தது போல உணர்கையில்.... எல்லாம் சாப்பி எனும் நடமாடும் சித்திரத்தின் பிரம்மாண்டம் என்றும் புரிகிறோம்.

ரோபோக்களுக்கு உயிரூட்டும் மானுட மூளை அசாத்தியமானது.

மானுடம் எங்கிருந்து எங்கு வந்திருக்கிறது என்று யோசித்தால்.. அத்தனையும் மூளையின் மகத்துவம். அதை ரோபோவுக்கு மடை மாற்றினால் அது அதுவாகவே சிந்திக்க உணரத் தொடங்கினால்.. அப்படி ஒரு கற்பனைக்கு உயிரூட்டி மனித உணர்வுகளைக் கொண்ட ரோபோவை உருவாக்க நினைக்கிறான் மேக்கர். இப்படி ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்த மேக்கருக்கு அரசு வழக்கம் போல உதவுவதில்லை. வேறு வழியில்லாமல் உடைந்து கிடந்த போர்ப்படை ரோபோக்களில் ஒன்றை எடுத்துச் சரி செய்து... தான் செய்ய நினைத்த ஆராய்ச்சியை மேற்கொள்கிறான். ஆனால் செய்து முடித்த அதே நேரம் அது வில்லன் கையில் சிக்கிக்கொள்கிறது.

சாப்பிக்குத் துப்பாக்கிப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மானுட நிழல் ஆன பிறகு அதன் வழியும் அவ்வழியேதானே. அன்புக்கு ஏங்கி மனிதர்களைச் சார்ந்து இருப்பது மகத்தானதாக மாறுவதை அதன் நுண்ணசைவுகள் உணர்வதை நாம் உணர்கிறோம். அதே நேரம் மனிதர்களின் குரூரம் கண்டு ஓடி ஒளிவதும் நடக்கிறது.

சிறுபிள்ளையின் பதற்றம் அதன் உடல்மொழியில். மானுடத்தின் மறுபக்கம் அதை மிரட்டுகிறது. அதன் பயங்கரம் அதை முடக்குகிறது. சாப்பியை வைத்து ஆதாயம் தேடும் வில்லன் கூட்டம் எப்போதும் அதைக் கையகப்படுத்துவதையே வேலையாகச் செய்கிறார்கள்.

நல்லவை இருக்கும் அதே இருத்தலில் கெட்டதும் இருப்பது தெரிய வருகையில் ஒரு குழந்தைக்கு இருக்கும் அதே பதைபதைப்பு சாப்பிக்கும்.

எல்லாரையும் நம்புவது, பொய் சொல்லிய அப்பாவிடம் கர்ஜிப்பது, அம்மா மேல் அன்பாய் இருப்பது, அப்பாவை முன் மாதிரியாக நினைப்பது, அம்மாவின் அரவணைப்பில் பாதுகாப்பாக உணர்வது... இப்படி ஒவ்வொரு காட்சியிலும் உள்ளம் வருடும் அற்புதம். ஒரு ரோபோவின் வாழ்வில் மனித ஆன்மா கலந்துவிட்டால் என்ன நடக்கும் என்பதுதான் கதை. அதை யார் உபயோகப்படுத்துகிறார்கள் என்பதுதான் திரைக்கதை. மனமெனும் ஆயுதமே மானுடத்தின் அடிப்படை. அது பெற்றுவிட்ட ரோபோ வெறும் இரும்பாக இருக்குமா. இதயம் முளைக்க விரும்பும்தானே. தானாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றுவிடுகிறது. குழந்தைப் பருவ ஆழத்தின் வழியே நிகழும் காலத்தின் கைப்பிடியில் தவழ்ந்தபடி அது இந்த உலகைத் தன் உலகமாகக் காண்கிறது. அப்படி அது காணும் நொடிகள் அத்தனையும் அனுமானிக்கப்பட்டவை. தீர்மானங்கள் திசை மாறும்போது முடிவுகள் யாருக்குச் சொந்தம்..

பல சமயங்களில் தந்தையைப் போலவே நடந்துகொள்கிறது. குழந்தைகள் அப்படித்தானே. முதல் ஹீராவாக அப்பாவைத்தானே நம்புகிறார்கள். அப்படியே இதுவும் நம்புகிறது. அவரைப் போலவே நடந்து பார்க்கிறது. ஒப்பனை செய்துகொள்கிறது. அவரைப் போலவே அதன் ஸ்டைலும் பளிச்சிடுகிறது. வாழ்வதற்காகப் பரிதவிக்கும் இடங்களில் மிரட்சியும்... வாழ்ந்துகொண்டிருப்பதை உணர்கையில் கிடைக்கும் உணர்ச்சியும் என அது மெல்ல மெல்ல வளர்கிறது.

நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையே மாட்டிக்கொண்டு தடுமாறும் காட்சிகளில் வாழ்வின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கிறது சாப்பி.

ஆரம்பம் முதல் கடைசி வரை மனித ரோபோவாக அசத்தும் சாப்பி... மனித உணர்வுகளை ரோபோவுக்குள் வைக்கத் தெரிந்துகொள்கிறது. அப்படி ஒரு சூழலில் இறுதிக் காட்சியில் தன் மேக்கரை ரோபோவாக மாற்ற வேண்டிய கட்டாயம். இறுதியில் மேக்கர் என்ன ஆனார். இறந்து பூமியில் புதைபடப் போகும் அந்தப் பெண்ணின் நினைவலைகள் எங்கே கண் திறக்கின்றன என்பதோடு முடியும் படம் நம்மை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கத் தவறவில்லை. ஒன் மேன் ஷோ போல.. படத்தில் அத்தனை பாத்திரங்கள் இருந்தும் கதை நாயகன் இந்த சாப்பியேதான். மேக்கரை மிஞ்சும் செயல்பாடுகளில் ரோபோட்டின் புது பாடம்.

வில்லன்களிடமும் அரசாங்கத்திடமும் மாட்டிக்கொண்டு சாப்பி படும் பாடு அசல் ஹீரோவுக்கானது. யார் கையில் மாட்டினாலும்.. அவர்களின் குணத்துக்கு அதை மாற்றிவிடுகிறார்கள். குழந்தை அப்படித்தானே. தகாத கைகளில் சிக்கிக்கொள்ளும் போதெல்லாம் அதன் தவிப்பும் படபடப்பும்.. பரிதாபம். போகப்

போக நடந்துகொண்டிருப்பவைகளைப் புரிந்துகொண்டு மேக்கரின் வழிநடந்து ஒரு கட்டத்தில் மேக்கரையே காப்பாற்றும் நிலைக்கு வருகையில்... ஹீரோ இஸ் ஆல்வேஸ் ஹீரோ.

நல்லதுக்காக நாட்டைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட சாப்பி வில்லன் கையில் கிடைத்துவிட பிறகு நடக்கும் சம்பவங்கள் இரும்புத் திரைக்குள் இதயம் தடதடப்பவை. யாரைப் பார்த்தாலும் பயந்து ஒதுங்குவதும் பிறகு ஒரு வழியாக நம்பி அவர்களோடு பயணிப்பதும் கதையின் ஓட்டத்தில் கலகல. துப்பாக்கியால் சுடுவது தப்பு என்று என் மேக்கர் சொல்லி இருக்கார் என்று சொல்லும் ரோபோவை வில்லன் கூட்டம், ‘துப்பாக்கிதான் தப்பு. கத்தி தப்பு இல்லை. இதை வெச்சுக் கழுத்தில் இழுத்தால் அவர்கள் தூங்கிவிடுவார்கள்’ என்று ஏமாற்ற, அது நம்பி அந்தச் செயலில் ஈடுபடுகிறது. விதவிதமான கத்திகள் கொடுக்கப்படுகின்றன. ஒரு கட்டத்தில் வெட்டுப்பட்ட ஒருவன் ரத்த வெள்ளத்தில் கழுத்தைப் பிடித்துக்கொண்டு சரிந்து விழுந்து வலியால் துடிக்கையில் சாப்பிக்கு மெல்லப் புரிந்துவிடுகிறது. இது தூக்கம் இல்லை. மரணம். அதன் பிறகு அது தவறென்று உணர்ந்து கத்தியை எடுக்க மறுக்கிறது.

மானுடக் கண்டுபிடிப்புகளிலெல்லாம் இந்தப் பக்கம் வெளிச்சம். அந்தப் பக்கம் இருள். நாம் எந்தப் பக்கம் பயன்படுத்துகிறோம் பயன்படுகிறோம் என்பதில் இருக்கிறது கண்டுபிடிக்கப்பட்டது மனிதனுக்கானதா என்பது.

மின்சாரத்தைப் பயன்படுத்தும் எச்சரிக்கை உணர்வோடு ரோபோக்களைப் பயன்படுத்தத் தவறினால் விளைவு நம்மை என்ன செய்தி என்று கேட்கும். எந்திரன், ஆன்றாயிட் குஞ்சப்பன் போன்ற படங்கள் பார்த்திருப்போம். கற்பனை என்றாலும் மானுடக் கற்பனைகள்தானே விமானம் படைத்தது, விண்மீன் பிடித்தது, நிலவுக்கு ராக்கெட் விட்டது, செவ்வாய்க்குக் காற்று வழி ரோடு போட்டது.

அப்படி நம்மைப் போலவே ஏன் நாமாகவே இருக்கும் ரோபோக்கள் சாத்தியம். அப்படி ஒரு முன்னோடி இந்த சாப்பி.

எதிரிகளை அழிக்க உருவாக்கப்பட்ட ரோபோ எதிரியாகவே மாற்றப்பட வில்லன் கூட்டம் எப்போதும் வலை விரித்தே காத்திருக்கிறது. அப்படியான திரைக்கதை ஓட்டத்தில் கதையை இழுத்துக்கொண்டு ஓடியபடியே இருக்கிறது சாப்பி. அதனால் படத்தின் சுவாரஸ்யம் நமக்குக் கூடிக்கொண்டே இருக்கிறது.

பொம்மைக்கு உயிர் தரும் குழந்தைகள் நம் எல்லார் வீட்டிலும் இருக்கிறார்கள். அவைகள் குழந்தைகளைக் கொள்ளை அடிக்க விட்டுவிடக் கூடாது. ரோபோக்கள் மனிதனின் படைப்புகள். அவையே மனிதனை ஆளுபவையாக மாறிவிடக் கூடாது.

ரோபோக்கள் மனிதனின் ஆக்கங்கள். அவை நல்லவையாவதும் தீயவையாவதும் மனிதர்கள் வளர்ப்பினில். இயற்கையோடு இருந்த மனிதன் அதற்கு சவால் விட்டதுதான் பரிணாமம். அது ரோபோக்களுக்கும் பொருந்தும்.

எல்லா இடத்திலும் சர்ப்ப நாக்கு ஒளிந்தே இருக்கும் என்று சொல்ல இயலாது. மானுடப் பாய்ச்சலைப் போல ரோபோக்களின் பாய்ச்சலும் யாருக்குத் தெரியும்..

மொழி : ஆங்கிலம்
இயக்கம் : Neill Blomkamp
ஆண்டு : *2015*

*

P. சுஜாதா



# மரம்???

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

அன்றைய பொழுது அழகாக விடிந்தது. காக்கைகள் கரைந்துகொண்டிருந்தன. பறவைகள் அங்குமிங்குமாகப் பறந்து ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன. எங்கோ தொலைவில் இரயில் சத்தம் தெளிவாகக் கேட்டது. தெருவில் ஒரு கீரைக்காரம்மா கீரைகளின் பெயரைச் சொல்லிக்கொண்டே போய்க்கொண்டிருந்தாள். சீக்கிரம் எழுந்துவிட்ட சரளா ஒருவிதப் படபடப்புடன் காணப்பட்டாள்.

அவளது கணவன் செந்தில் ஞாயிற்றுக்கிழமை என்பதால் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான். இன்று தாமதமாக எழுந்திரிக்க வேண்டுமென்று நேற்று இரவே முடிவு செய்திருந்தான். ஆனால் அவன் ஆசையில் மண் விழுந்தது. சரளா வந்து அவனை எழுப்பினாள்.

"சீக்கிரம் எழுந்து குளிச்சிட்டுக் கிளம்புங்க" என்று அவசரப்படுத்தினாள்.

செந்தில் அரைத் தூக்கத்தில் குழப்பத்தோடு கண்விழித்தான், இன்னைக்குத்தான் ஆபிஸ் இல்லையே கொஞ்ச நேரம் தூங்கினால் என்னவாம்? ஏன் இப்படி அவசர அவசரமாக எழுப்புகிறாள்? என்று ஒன்றும் புரியாமல் மெல்ல கண்களைத் திறந்தான்.

அவள் வந்து எழுப்பி, அவன் எழும்பவில்லை என்றால் சரளா பத்ரகாளியாக மாறிவிடுவாள். அதனால் பேசாமல் எழுந்து பல் துலக்கிவிட்டு பால்கனி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து நின்றான். வீட்டின் முன்னாலிருந்த புங்கை மரம் அசைந்து சில்லென்ற காற்று முகத்தில் பட்டது. "குட்மார்னிங்" என்று சொல்வது போல் கிளைகள் அசைந்தன. அது அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். பதிலுக்கு அவனும் தலையாட்டிவிட்டு முகத்தைத் துடைத்துக்கொண்டு உடற்பயிற்சி செய்யலாம் என முடிவு செய்தான்.

உடனே சரளா "என்னங்க ஏதாவது வாக்கிங், எக்ஸர்சைஸ்னு வெளியே கிளம்பிடாதீங்க" என்றாள்.

"மணி எட்டுதானே ஆகுது. இப்ப என்ன உயிர் போற அவசரம்? கொஞ்ச நேரம் எக்ஸர்சைஸ் பண்ணா உனக்கென்ன? அப்படி என்ன தலைப் போற காரியம்", என்று கேட்டான்.

வேகமா காபி டம்ளரைக் கொண்டு வந்து கையில் கொடுத்துவிட்டு, முந்தானையால் கையில் இருந்த ஈரத்தைத் துடைத்தபடியே போனில் உள்ள ஒரு குறுஞ்செய்தியை எடுத்துக் காண்பித்தாள்.

"மறந்துட்டீங்களா? இன்னைக்கு நம்ம அப்பார்ட்மெண்ட்ல அஸோசியேஷன் மீட்டிங். ஞாபகம் இல்லையா? அதுக்கு ரெடியாக வேண்டாமா? அதுக்குத்தான் சீக்கிரமா எழுப்பினேன்," என்றாள்.

"ஆமா, அதுக்கென்ன இப்போ? பதினோரு மணிக்குத்தான மீட்டிங்? இப்பவே எதுக்கு ஆர்ப்பாட்டம் பண்ற?" என்று எரிச்சலோடு கேட்டான்.

"சீக்கிரமா குளிச்சிக் கிளம்பிட்டீங்கன்னா மீட்டிங்ல என்ன பேசணும்னு ஒருவாட்டி பேசிப் பார்த்துக்கலாமேன்னுதான் எழுப்பினேன்," என்றாள்.

கடுப்பாகிய செந்தில் காபியை வேண்டா வெறுப்புடன் குடித்துவிட்டு, டவலை எடுத்துக்கொண்டு, குளிக்கச் சென்றான். குளியலறை ஜன்னலுக்கு வெளியே அழகாய் இரண்டு புறாக்கள் அமர்ந்துகொண்டு அவர்கள் பாஷையில் பேசிக்கொண்டிருந்தன. எதிர்ப்புறத்தில் உள்ள ஒரு கோவிலிலிருந்து அவை தவறாமல் தினமும் காலையில் இங்கு வந்துவிடும். காலையில் இந்தப் பறவைகளைப் பார்ப்பதே ஒரு தனி அழகுதான் என்று நினைத்துக்கொண்டே ஒரு மக் தண்ணீரைத் தலையில் ஊற்றினான். சில்லென்று தண்ணீர் உச்சந்தலையில் பட்டதும் உடல் முழுக்கச் சிலிர்த்தது. ஆனால் சுகமாகத்தான் இருந்தது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் நிதானமாகக் குளித்தான். அதற்குள் "என்னங்க எவ்வளவு நேரமா குளிப்பீங்க? சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க" என்றாள் சரளா.

இவகிட்ட வாய குடுத்து மாட்டிக்கொள்ள வேண்டாம்னு முடிவு பண்ணியவன், தலையைத் துவட்டிக்கொண்டே பால்கனியில் வந்து நின்றான். மரத்திலிருந்து காக்கைகள் இங்குமங்குமாகப் பறந்துகொண்டிருந்தன. ஒரு காக்கை மட்டும் இவர்கள் வீட்டு பால்கனியில் வந்து உட்காருவதும் திரும்பச் செல்வதுமாக இருந்தது. ஏனோ தெரியவில்லை, திடீரென்று

இறந்துபோன அவன் அப்பா ஞாபகத்தில் வந்து போனார்.

"என்னங்க இட்லி ரெடி, சூடா இருக்கும்போதே வந்து சாப்பிடுங்க" என்று பறந்து வந்த சரளாவின் ஆர்டர், அவன் நினைவலைகளைக் கலைத்தது.

டைனிங் டேபிளில் வந்து அமர்ந்தான். இரண்டு இட்லியை நிம்மதியாகச் சாப்பிட்டிருப்பான். மூன்றாவது இட்லியைத் தொடுவதற்குள் சட்னி கொஞ்சம் வைத்துவிட்டு மீண்டும் ஆரம்பித்தாள்.

"என்னங்க இன்னைக்கு மீட்டிங்ல எப்படியாவது பேசி ஒரு முடிவு எடுங்க" என்றாள். அவன் மௌனமாகவே சாப்பிடுவது அவளுக்கு எரிச்சலூட்டியது.

"என்னங்க பேசுவீங்கல்ல?" என்று இழுத்தாள்.

சாப்பிடறத நிறுத்திவிட்டு அவளை முறைத்தான்.

"இப்போ சாப்பிடவா? இல்ல பேசவா?" என்று கோபமாகக் கேட்டான்.

கொஞ்சம் அதிர்ந்தவள் "சரி சரி சாப்பிடுங்க. அப்புறம் பேசிக்கலாம்," என்று கூறிவிட்டுக் கிச்சனுக்குப் போய்விட்டாள்.

சாப்பிட்டுவிட்டு அன்றைய செய்தித்தாளையும் மொபைலையும் எடுத்துக்கொண்டு சோபாவில் போய் அமர்ந்தான்.

ஒரு இருபது நிமிடம் கழித்து சரளா மெல்ல அருகில் வந்து அமர்ந்தாள்.

அவன் "என்ன?" என்பது போல் நிமிர்ந்து பார்த்தான்.

"கோவிச்சுக்காம நான் சொல்றத கொஞ்சம் பொறுமையா கேளுங்க," என்றாள்.

"சரி சொல்லு," என்றான். இல்லையென்றாலும் இன்று அவனை அவள் விடப் போவதில்லை.

"எப்படியாவது இன்னைக்கு மீட்டிங்ல பேசி வீட்டுக்கு முன்னாடி இருக்கிற மரத்தை வெட்டறதுக்கு முடிவு பண்ணிடுங்க. கிளை பால்கனி வரை வந்துடுச்சு. விட்டா வீட்டுக்குள்ளேயே வந்திடும் போல. கீழ கார், டூவீலர்னு எதுவுமே நிறுத்த முடியல. காக்கா ஒரே அசிங்கம் பண்ணிடறது. பகல்ல மர நிழல்ல பிச்சைக்காரன், குப்பை அள்ளறவங்க, கீரைக்காரம்மா, மீன்காரம்மா எல்லாம் வந்து உட்கார்றாங்க இத்தன லட்சம் போட்டு வாங்கின அப்பார்ட்மண்ட் அழகே போயிடுச்சு," என்றாள்.

ஒன்றும் சொல்லாமல் அவளைப் பார்த்தான். இவளுக்கு மரம் பிரச்சனையா? அல்லது எல்லாரும் மரநிழல்ல வந்து உட்காருவது பிரச்சனையா? அவனுக்குப் புரியவில்லை. இதைப் பற்றி மீட்டிங்ல பேசினால் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ? அப்படியே மீட்டிங்ல பேசாம வந்துட்டா இவ பேய் மாதிரி ஆடுவாளே என்ன பண்றதுன்னு யோசித்துக்கொண்டிருந்தான்.

அவன் தயங்குவதைப் பார்த்து மீண்டும் ஆரம்பித்தாள்.

"வேணா இப்படி சொல்லுங்களேன். மரத்தின் கிளை எங்க பால்கனி வரை வந்துடுச்சி. பூச்சி, குளவின்னு அதிகமாக இன்செக்ட்ஸ் வீட்டுக்குள்ள வருது. அணில், காக்கா தொல்லை தாங்க முடியலைன்னு சொல்லுங்க" என்றாள்.

இப்படி போய் மீட்டிங்ல சொன்னா தன்னை எவ்வளவு கேவலமா பார்ப்பாங்கன்னு நினைத்தான், செந்தில்.

அவன் புருவங்கள் உயர்வதைக் கண்டு கடுப்புடன் கத்த ஆரம்பித்தாள்.

"நீங்களா கஷ்டப்படறீங்க? சுத்தம் பண்றது நான். நீங்க எல்லோரும் வெளியே போயிடறீங்க. நான்தான் இங்க கிடந்து அல்லாடறேன். நாள் பூரா வீட்டைச் சுத்தம் பண்ணி, சுத்தம் பண்ணி டயர்டா ஆகுது. உங்களுக்கென்ன? வாய்தொறந்து பேசக்கூட கஷ்டப்படறீங்க" என்று அனத்தினாள்.

அவன் பதிலேதும் சொல்லாமல் சன்னல் வழியே தெரியும் மரத்தை வெறித்துப் பார்த்தான். "வேண்டாம், என்னை விட்டுவிடு" என்று அது அவனிடம் கெஞ்சுவது போல் உணர்ந்தான்.

மீண்டும் ஆரம்பித்தாள்.

"மீட்டிங்குக்கு நானும் வர்றேன். நீங்க

ஏதாவது மறந்துட்டா நான் எடுத்துக் கொடுக்கிறேன்," என்றாள்.

இவளுக்கு வேற வேலையே இல்லை. எப்ப பாரு ஏதாவது ஒரு ஏழரையை இழுத்துக்கொண்டு வர்றதே வேலையாப் போச்சு, என்று எரிச்சலுடன் பேப்பர் படிப்பது போல் முகத்தை மறைத்துக்கொண்டான்.

பத்து நிமிடம் கூட ஆயிருக்காது. "இந்தாங்க இந்த ஷர்ட்டைப் போட்டுக்கோங்க. அந்த சுடுமூஞ்சி பிரசிடெண்ட் உங்ககிட்ட மட்டும்தான் நல்லாப் பேசுவாரு. அவரை எப்படியாவது கன்வின்ஸ் பண்ணிடுங்க" என்று கூறினாள்.

ஆபிஸ்ல அவன் எத்தனையோ மீட்டிங்ஸ் சக்ஸஸ்ஃபுல்லா நடத்தியிருக்கிறான். ஆனா இன்னைக்கு மீட்டிங்ல எப்படி பேசறதுன்னே தெரியாம முழிச்சிக்கிட்டிருந்தான். மரம் வெட்றத பத்திப் பேசினா மற்றவர்கள் எப்படி ரியாக்ட் பண்ணுவாங்கன்னே தெரியல! முக்கியமா பிரசிடெண்ட் ஜேக்கப் கடுப்பாகிவிடுவார். கோபம் சட்டென்று வந்துவிடும். சுருக்குன்னு மூஞ்சியில அடிச்சா மாதிரி ஏதாவது சொல்லிடுவார்.

உண்மையில் ஜேக்கப் ரொம்ப நல்ல மனிதர்தான். மிகவும் நேர்மையானவர். ஒரு சாப்ட்வேர் கம்பெனியில் வைஸ் பிரசிடெண்ட்டா இருக்கார். அப்பார்ட்மெண்ட்ல யாருக்கு என்ன உதவி வேண்டுமானாலும் உடனே முன்வந்து செய்வார். ஆனா ரொம்ப சிரிக்கமாட்டார். ஸ்டிரிக்ட்டா இருப்பார். அப்பார்ட்மெண்ட் சம்மந்தமான எந்த நியாயமான கோரிக்கையையும் உடனே நிறைவேற்றிவிடுவார். தவறென்று தோன்றினால் நறுக்கென்று ஏதாவது சொல்லிவிடுவார்.

இந்தக் கட்டிடத்தில் ஒன்பது பெரிய அப்பார்ட்மெண்ட்கள் இருக்கின்றன. ஜேக்கப்தான் முதன்முதலாகக் குடிவந்தவர். அவர்தான் நான்கு மரங்களை நட்டு வைத்தார். இரண்டு, செடியிலே பட்டுப்போய்விட்டது. வளர்ந்த இரண்டு மரங்களில் ஒன்று வர்தா புயலில் விழுந்துவிட்டது. மீதம் இருக்கின்ற ஒரு மரத்திற்குத்தான் இந்த அக்கப்போர்.

ஜேக்கப்பை, சரளாவுக்குச் சுத்தமா பிடிக்காது. ஒருமுறை எதற்கோ சட்டென்று அவளிடம் முகத்தைக் காட்டிவிட்டார். அன்றிலிருந்து இவளுக்கும் அவருக்கும் ஆகாது. அதிலிருந்து அவரைக் கண்டால் எரிச்சலடைவாள். அவர் வச்ச அந்த மரத்தை எப்படியாவது வெட்டிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தாள் என்பதுதான் உண்மை.

செந்தில் பதிலேதும் சொல்லாமல் இருப்பது அவளுக்கு சந்தேகத்தை உண்டு பண்ணியது. அவசர அவசரமாகச் சமைத்துக்கொண்டே கிச்சன்ல இருந்து "நான் எதிர்வீட்டு சுதா அக்காகிட்டயும், மேல் வீட்ல கமலா அக்காகிட்டயும், கீழ்வீட்டு மூர்த்தி சார்கிட்டயும் சொல்லிட்டேன். அவர்களும் மரத்தை வெட்டிடலாம்னு சொல்லிட்டாங்க. ஒண்ணாம் நம்பர் ஓனர் சிங்கப்பூர்ல இருக்கிறதனால் அவர் அப்ஜெக்ட் பண்ணமாட்டார். மூணாம் நம்பர் புருஷோத்தமன் உங்க பிரண்டு. மெஜாரிட்டியா எல்லோருக்கும் ஓகேதான். அந்த சிடுமூஞ்சி ஜேக்கப்பையும், செக்ரட்டரியையும் ஒத்துக்க வைக்க வேண்டியது உங்க பொறுப்பு. இன்னைக்கு எப்படியாவது மரத்தை வெட்டறது பற்றி முடிவு எடுக்காம வீட்டுக்குள் வராதீங்க" என்று படபடன்னு கடுகு மாதிரி பொரிஞ்சிட்டா.

"சரி, எத்தனை முறை சொல்லுவ. தொணத்தொணன்னு உயிர வாங்காத. பேசாம வேலையைப் பாரு" என்றான் செந்தில்.

அவளும் விடாமல், "எனக்கென்ன வந்தது? தினமும் நீங்க காரையும் டுவீலரையும் கழுவித் துடைக்கிறத பார்க்கும்போது எனக்கு மனசு கஷ்டமா இருக்குதுன்னு உங்களுக்கு என்ன தெரியும்" ன்னு ஒரு பிட்ட வேற போட்டாள்.

செந்தில் வீட்டிலிருந்து வெளியே மெதுவா எட்டிப் பார்த்தான். மீட்டிங் நடக்குற மாதிரி எந்த அறிகுறியும் தெரியல.

கூடவே வந்த சரளாவும் "என்னங்க இவங்க யாரையும் காணோம்? மீட்டிங் நடக்குமா? நடக்காதா?" என்று கவலையோடு

கேட்டாள்.

"கொஞ்சம் நேரம் வெயிட் பண்ணு, பார்க்கலாம்" என்றான். பதினோரு மணிக்கு மேல் ஒவ்வொரு தலையாகத் தென்பட்டது. ஒருவழியாக பதினொன்றரை மணிக்கு மீட்டிங் ஆரம்பித்தது. சென்ற மாதக் கணக்குகள், செலவீனங்கள், கையிருப்பு அனைத்தையும் பற்றி ஜேக்கப் வாசித்தார்.

உடனே செக்ரட்டரி ராமநாதன் "குட் ஜாப் சார்" ன்னு சொல்லிவிட்டு மேலேயுள்ள வாட்டர் டாங்கைச் சுத்தம் செய்ய வேண்டும் என்றும் மோட்டருக்குப் புதுக் காயில் போடுவது பற்றியும் பேசினார்.

ஜேக்கப் "ஓகே சார். உடனே செய்திடலாம்" என்று ஆமோதித்தார்.

அதற்குள் சரளா கேளுங்க, நீங்க கேளுங்கன்னு கண்களால் செந்திலுக்கு சைகை காட்டினாள்.

அடுத்ததாக புருஷோத்தமன் "மேலே மொட்டை மாடியில் ஒரு லைட் எக்ஸ்ட்ராவா போட்டால், ஈவ்னிங் வாக்கிங் போறவங்களுக்கு வசதியா இருக்கும்" என்றார்.

"சரி சார். அதற்கென்ன போட்டிடலாம்" என்றார் ஜேக்கப்.

மேல் வீட்டு கமலா "எங்க பாத்ரும்ல தண்ணீர் ரொம்ப கொஞ்சமா வருது, வாட்டர் ஃப்ளோ சரியா இல்ல சார்" என்றாள். உடனே இரண்டாவது மாடியில் உள்ள மற்ற இரண்டு வீட்டில் உள்ளவர்களும் "ஆமா சார். சில சமயம் வாஷிங் மெஷின் கூட போட முடியல" என்றார்கள்.

உடனே ராமநாதனைப் பார்த்து ஜேக்கப் சொன்னார். "சார், ப்ளம்பர் நாகராஜனுக்கு போன் பண்ணி நாளைக்கே வந்து செக் பண்ணச் சொல்லுங்க", என்றார். அவரும் "சரி" என்றார்.

சரளா மீண்டும் செந்திலை முறைத்தாள். அவன் மெதுவாகத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு "சார், ஒரு சின்ன பிராப்ளம்" என்றான்.

உடனே "சொல்லுங்க, செந்தில்" என்றார். அவன் மீது ஜேக்கப்புக்கு ஒரு தனி மரியாதை உண்டு.

செந்தில் தயக்கத்துடன் "அந்த முன்னாடி இருக்கிற புங்க மரத்தை வெட்டிடலாம் சார்" என்று மெல்லச் சொன்னான். எல்லோரும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். அது அவனுக்கு ஒரு சங்கடத்தை உருவாக்கியது. ஜேக்கப் முகம் சட்டென்று இறுகியது. அவனுக்கு என்ன செய்யறதுன்னே தெரியல.

உடனே ராமநாதன் ஆபத்தில் உதவுவது போல், "சார், அதான் ஏற்கனவே பலமுறை மீட்டிங்ல பேசிட்டோமே" என்றார்.

"பேசினோம் சார். ஆனா வெட்டலாம்னு முடிவு எடுக்கலையே" என்றான்.

"ஆமா, இவ்வளவு வளர்ந்த மரத்தை எப்படி சார் வெட்டறது? அது பெரிய அஃபன்ஸ். அது சரியா வராது" என்றார் ஜேக்கப் இறுகிய முகத்துடன்.

உடனே சரளா ஆரம்பித்தாள். "சார் உங்க வீட்டு பால்கனி அந்தப் பக்கம் இருக்கு. எங்க வீட்டு பால்கனிதான் ரோட் ஃபேஸிங். எங்களுக்குத்தான் கஷ்டம். உங்களுக்கு அது புரியாது. வீட்ல ஒரு பொருள் வைக்க முடியல. பால்கனியில காக்கா அசிங்கம் பண்ணிடுது. நிறைய பூச்சிகள் குளவின்னு வீட்டுக்குள் வருது" என்றாள்.

இவர்கள் இருவரையும் ஒரு பூச்சியைப் பார்ப்பது போல அனைவரும் பார்த்தனர். மரத்தை வெட்டறதுக்கு ஒத்துக்குவாங்கன்னு சொன்ன எந்த வீட்டு ஆட்களும் வாயைத் திறக்கவேயில்லை. ஏன் என்றால் ஜேக்கப் சாருக்கு ஒரு விஷயம் சரியென்று பட்டால் உடனே அதைச் செயல்படுத்திவிடுவார் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஒரு நிமிட அமைதிக்குப் பின் மீண்டும் சரளா சொன்னாள். "கமலா அக்காகிட்ட கூட கேளுங்க. எவ்வளவு பிரச்சனை ஃபேஸ் பண்றாங்கன்னு" என்றாள்.

கமலா அக்காவும் "ஆமா கஷ்டமாத்தான் இருக்கு"ன்னு சொல்லிவிட்டு உடனே வாயை மூடிக்கொண்டு விட்டாள். சரளா விடவில்லை, "மூர்த்தி சார் நீங்க சொல்லுங்களேன்" என்றாள்.



மூர்த்தி மெதுவாக ஆரம்பித்தார், “பகல்ல ரொம்ப தொந்திரவா இருக்கு சார். போறவங்க வர்றவங்க, குப்பை அள்ளுறவங்க, பத்தாக்குறைக்குத் தள்ளுவண்டியில ஒரு டெய்லர்னு மர நிழல்ல வந்து உட்கார்ந்துக்கிறாங்க. இங்கேயே சாப்பிடறாங்க. நம்ம பார்க்கிங் ஏரியாவில் உள்ள குழாய்ல தண்ணீர் பிடித்துக் குடிக்கிறேன்னு உள்ள வந்துட்டுப் போறாங்க” என்றார்.

இப்போதான் சரளாவிற்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

கோபமான ஜேக்கப் செருமிக்கொண்டே ஆரம்பித்தார். “மூர்த்தி சார். அவங்க ரோட்ல விழற நிழல்லதானே கொஞ்ச நேரம் நிக்கிறாங்க. கொஞ்ச நேரம் நின்றுவிட்டுப் போயிடப் போறாங்க. நாள் பூரா இங்கேயே இருந்தா நாம கேட்கலாம். அது ஒண்ணும் பெரிய கொலைக் குற்றம் இல்லையே? அந்த டெய்லர்கிட்ட வேற எங்கேயாவது போய் உட்காரச் சொல்லிடலாம். இந்தத் தெருவிலேயே நம்ம அப்பார்ட்மெண்ட் முன்னால மட்டும்தான் மரம் இருக்கிறது. அந்த நிழல்ல கொஞ்சநேரம் நிற்பதற்குக்கூட விடலன்னா அது நியாயமா மூர்த்தி சார்? நீங்களே சொல்லுங்க” என்றார்.

சரளா பிடிவாதமாக மீண்டும் ஆரம்பித்தாள். “டூவீலர், கார் கூட நிறுத்த முடியல. ஒவ்வொரு முறையும் வண்டி எடுக்கும்போதும் க்ளீன் பண்ண வேண்டியதா இருக்கு. வேலைக்குக் கிளம்பற நேரத்தில் அவருக்குக் க்ளீன் பண்றது ரொம்ப கஷ்டமா இருக்கு. உங்க பார்க்கிங் முன்னாடி மரம் இல்லாததால் உங்களுக்கு அந்தக் கஷ்டம் புரியாது சார்” என்றாள் கடுகடுப்புடன்.

நானே க்ளீன் பண்றத கஷ்டமா நினைக்கல இவ ஏன் என்னை வம்புக்கிழுக்கிறாள் என்று மனதுக்குள் நினைத்தான் செந்தில்.

அந்த நேரத்தில் “எக்ஸ்க்யூஸ் மீ” என்று சரியான டைமிங்ல என்ட்ரி கொடுத்தார்கள் எட்டாம் நம்பர் வீட்டு சீதா மேடம். அவர் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் பிரான்ச் மேனேஜர். ரொம்ப தைரியமான பெண்மணி.

“செந்தில் சார். மரம் நல்லா வளர்ந்திருக்கு. இப்போ அடிக்கிற வெயில் எவ்வளவு கொடுமையா இருக்குன்னு நமக்கே தெரியும். நமக்கு வசதி இருக்கிறதால நாம் ஏஸி போட்டுக்கிறோம். ஏழை மக்கள் கொஞ்சம் நேரம் மரநிழலில் இளைப்பாறிட்டுப் போயிடப் போறாங்க. இங்கேயே தங்கினாத்தானே நமக்குப் பிரச்சனை. அதுக்காக மரத்தை வெட்டணும்னு அவசியம் இல்லையே. வேண்டுமானால் உங்க பால்கனி வரை வருகிற கிளையைக் கொஞ்சமாக் கழித்து விட்டுக்கோங்க. கார், டூவீலர்க்குக் கவர் போட்டுக்கோங்க. இல்லன்னா வாட்ச்மேன்கிட்ட சொல்லி உங்க வண்டிய கழுவித் துடைச்சி வைக்கச் சொல்லிடலாம் சார்” என்று சிரிச்சிக்கிட்டே கூறினார், சீதா மேடம்.

சரளா சளைக்கவில்லை. “மேடம் 3,5,6,7,8ன்னு எல்லார் வீட்லயும் இரண்டு பேரும் வேலைக்குப் போயிடறீங்க. நானும், கமலா அக்காவும், மூர்த்தி சாரும்தான் இந்தப் பிரச்சனையைச் சந்திக்கிறோம்” என்றாள்.

சீதா மேடம், டென்ஷன் ஆகாம சிரிச்சிக்கிட்டே சொன்னார்கள். “நீங்க சொல்றது சரிதான் சரளா. வேலைக்குப் போற நாங்க ஏற்கனவே வீடு, ஆபிஸ்னு ஆயிரத்தெட்டுப் பிரச்சனைகளை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றோம். அதனால இதை ஒரு பிரச்சனையா பார்க்க எங்களுக்கு நேரமில்லை. நீங்க வீட்லயே இருக்கிறதாலதான் உங்களுக்கு இது பெரிய பிரச்சனயா தெரியுது” என்றார்.

சரளாவுக்கு முகம் சுருங்கிவிட்டது. என்ன சொல்றதுன்னே தெரியாம சிறுபிள்ளைத்தனமா “போனவாரம் கூட என்னைக் குளவி கொட்டிவிட்டது” என்றாள்.

செந்திலுக்கே அவள் சொன்னது அபத்தமாகத் தெரிந்தது. மற்றவர்களைக் கேட்கவே வேண்டாம், கடுப்பாகி இருப்பார்கள்.

உடனே சீதா மேடம் நக்கலாகச் சிரித்துக்கொண்டே “என்ன செந்தில்

சார். ஒரு நெட் டோர் போட்டுக் கொடுத்திட்டீங்கன்னா மேடம்க்கு ஸேப்டியா இருக்கும்ல. வேணும்னா சொல்லுங்க, அஸோஸியேஷன் செலவிலேயே போட்டுக் கொடுத்திடலாம். என்ன சொல்றீங்க ஜேக்கப் சார்," என்றார்.

உடனே "ஓகே மேடம்" என்றார் ஜேக்கப். அவருக்கு மரத்தை வெட்டக் கூடாது அவ்வளவுதான்.

செந்திலுக்கும் நெட் போடற ஐடியா சரி என்று தோன்றியது.

ஆனா சரளா எரிச்சலுடன் மூர்த்தி பக்கம் திரும்பி "சார் நீங்க சொல்லுங்க" என்றாள்.

அவரைப் பேசவே விடாமல் சீதா மேடம் குறுக்கிட்டார். "மூர்த்தி சார், நீங்க எங்க சார் வீட்ல இருக்கீங்க? மகள் வீடு, மகன் வீடுன்னு அமெரிக்கா, ஜெர்மனின்னு சம்மர்ல ஃபாரின் டிரிப் போயிடறீங்க. சென்னை வெயில்ல போய்ப் பாருங்க. அப்போ புரியும் நிழலின் அருமை. எல்லாத்துக்கும் மேலா காக்கா, சிட்டுக்குருவிக்கு எல்லாம் தண்ணீர் வைக்க ஆரம்பிச்சதே நீங்கதான், உங்கள பார்த்துத்தான் நாங்களே கத்துக்கிட்டோம். நீங்க ஊருக்குப் போகும்போதெல்லாம் அதுங்க உங்கள ரொம்ப மிஸ் பண்ணுதுங்க" என்றார் கனிவுடன்.

மூர்த்திக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. மனைவி இறந்ததும் தனிமையைப் போக்க அடிக்கடி இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வெளிநாட்டுக்குப் பயணம் சென்றுவிடுவார். குளிர் காலத்தில் கண்டிப்பா இங்கே வந்திடுவார். அவரால் மறுத்துப் பேச முடியாமல் அமைதியாகிவிட்டார்.

உடனே ராமநாதன், "சரளா மேடம், நீங்க கொஞ்சம் மனசு வச்சீங்கன்னா இந்த விஷயத்தைப் பெரிய பிரச்சனையாக்காம சால்வ் பண்ணிடலாம். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க மேடம்" என்றார்.

ஜேக்கப் சீரியஸான முகத்துடன், "நன்றாக வளர்ந்த மரத்தை அவ்வளவு ஈஸியா வெட்டமுடியாது. மரத்தை வெட்டணும்னா சென்னை கார்ப்பரேஷனுக்கு இன்பார்ம் பண்ணணும். சரியான காரணம் இல்லாம நல்லா வளர்ந்த மரத்தை வெட்ட முடியாது. நாமதான் அட்ஜெஸ்ட் பண்ணணும்" என்றதும் எல்லோரும் 'சரி' என்றார்கள்.

தனக்கும் நியாயமாகப் பட்டதால் செந்திலும் அவனை அறியாமல் "ஓகே சார்" என்று கூறிவிட்டான்.

ஜேக்கப் ஸ்ரிட்க்டா "இதற்கு மேல் இத பற்றி யாரும் பேச வேண்டாம். செந்தில்! நெட் போடணும்னாலும் போட்டுக்கலாம், இல்ல வேற ஐடியா இருந்தாலும் சொல்லுங்க செஞ்சிடலாம்" என்றார்.

"சரி சார்" என்று செந்தில் சொன்னதும் சரளா கோபத்துடன் விருட்டென்று எழுந்து வீட்டுக்குள் போய்விட்டாள்.

உடனே சீதா மேடம் "என்ன செந்தில் சார், மேடம் ரொம்ப சூடாயிட்டாங்க போல. போய்ச் சமாதானப்படுத்துங்க"ன்னு சொன்னதும் எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

கூட்டம் கலைந்ததும் மெல்ல வீட்டுக்குள் நுழைந்தான். சரளா அடுப்பங்கரையில் கோபமாகப் பாத்திரங்களை உருட்டும் சத்தம் கேட்டது.

மெதுவாக டூவீலர் சாவியை மட்டும் எடுத்துக்கொண்டு சத்தம் போடாமல் வெளியே வந்துவிட்டான்.

வண்டியை எடுக்கப் போகும்போது காகம் ஒன்று சீட்டில் அமர்ந்துகொண்டு அவனைப் பார்த்தது. அது அவனிடம் சந்தோஷமாக "எங்கள் இருக்குமிடத்தைக் காப்பாற்றிக் கொடுத்தற்குத் தாங்க்ஸ்" என்று சொல்வது போல் இருந்தது.

சட்டென்று மரத்தில் இருந்து சில பூக்களும், இலைகளும் அவன் மீது உதிர்ந்தன. நிமிர்ந்து பார்த்தான். கிளைகளை அசைத்து மரம் தனக்கு நன்றி சொல்வது போல் உணர்ந்தான்.

இனி என்ன ஆனாலும் மரத்தை வெட்டுவதில்லை என்ற தீர்க்கமான முடிவுடன் நகர்ந்தான். இப்போதுதான் மனசுக்குள் ஏதோ ஒரு பாரம் குறைந்து இலேசானது போல் உணர்ந்தான்.

*

பொன். குமார்



# கவிஞர்களின் கவிஞர் கலாப்ரியா

வானம்பாடி என்னும் இதழும் கசடதபற என்னும் இதழும் தொடங்கப்பட்ட 1970களில் கவிதை எழுதத் தொடங்கியவர் கவிஞர் கலாப்ரியா. புதுக்கவிதையில் ஒரு புது பாணியை உருவாக்கினார். நவீன கவிதையின் போக்கை மாற்றியமைத்தார். வெள்ளம் அவரின் முதல் தொகுப்பு. 1970 முதல் 2025 வரை 75 ஆண்டுகள் கவிதை எழுதி வருகிறார். ஒரு சில காலம் எழுதினாலே ஒரு சிலரின் கவிதைகள் நீர்த்துவிடும். ஒரு சலிப்பு ஏற்பட்டுவிடும். ஆனால் இன்றுவரை புதிதுபுதிதாக எழுதிக்கொண்டுள்ளார். தனக்கான ஒரு வாசகர் வட்டத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது கலாப்ரியாவின் கவியாளுமையைக் காட்டுகிறது.

கவிஞர் கலாப்ரியாவின் கவிதைகளைத் தொடர்ந்து வாசிப்பவர் நிச்சயம் ஒரு கவிஞராகிவிடுவார். கவிதைகள் சித்திரமாகக் கண்முன் விரியும் தன்மை கொண்டவையாக உள்ளன. கலாப்ரியாவின் கவிதைகள் மிகுந்த மொழிநுட்பத்துடனும் சொல்நயத்துடனும் அமைந்தவை. எடுத்துக்காட்டுக்காக..

படித்துக் களைத்துக்

கழற்றி வைத்த கண்ணாடியில்

இரண்டு மின்விசிறிகள்

களைப்பில்லாமல்

சுற்றிக்கொண்டு

கவிஞர் கலாப்ரியா இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். கவிதையில் மட்டுமல்லாமல் உரைநடையிலும் வல்லவர் என்பதை நிரூபிக்கும் வகையில் பதின்மூன்று கட்டுரைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவை தவிர நான்கு நாவல்களும் இரண்டு சிறுகதைத் தொகுப்புகளும் தந்துள்ளார். கவிஞர் கலாப்ரியா கவிஞர்களின் கவிஞர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. நிச்சயம் கொண்டாடப்பட வேண்டியவரே. கவிஞர் கலாப்ரியாவைக் கொண்டாடுவோம்.

*

பிரபுசங்கர்.க

# மாற்றத்தை விதைக்கும் நாவல்

**நூல்** : மாயப்பசி
**ஆசிரியர்** : நயினார்
**வெளியீடு** : நாற்கரம் பதிப்பகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் புதினங்கள் என்றழைக்கப்படும் நாவல்களுக்கு எப்போதுமே தனியிடம் உண்டு. நாவல் தான் எழுதப்படும் காலம் குறித்து விலாவாரியாகச் சொல்லும். மட்டுமல்லாமல், அன்றைய காலகட்டத்தின் சமூக, பொருளாதார, தனிமனித வாழ்க்கை முறையைப் பதிவு செய்ததற்கான ஆவணம் என்றும் நாவலைத் தாராளமாகச் சொல்லலாம். அப்படிப்பட்ட ஒரு எதார்த்த வாழ்வின் ஆவணத்தை மாயப்பசி என்ற பெயரில் எழுத்தாளர் நயினார் நாவலாக்கி இருக்கிறார்.

நாவலுக்குள் செல்வதற்கு முன்பு எழுத்தாளர் நயினாரைப் பற்றிச் சொல்ல வேண்டும். தன் வாழ்வியல் ஓட்டத்திற்காக வாகன சாரதியாக இருப்பவர், எழுத்தின் மீது தீராத தாகம் கொண்டவர். தன்னுடைய அதிகப்படியான வேலைப்பளுவின் போதும் எழுதுவதைத் தவம் போலச் செய்துகொண்டிருப்பவர். கவிதை, சிறுகதைகள், யூடியூப் சேனல், துணை இயக்குனர், திரைப்படப் பாடலாசிரியர் எனப் பல முகங்கள் கொண்டவர். அவரது நாவல் முயற்சியே “மாயப்பசி”.


மாயப்பசி எதைப் பற்றி பேசுகிறது??

நம் சமூகத்தில் தீராத வடுவாக இருக்கும் சாதியையும், அந்தச் சாதியப் பாகுபாடுகளின் காரணமாகக் காலம் காலமாகப் பலியாகிக்கொண்டிருக்கும் காதலையும் மையமாக வைத்து, மனித உறவுகளையும் அதன் சிக்கல்களையும், எத்தனை முன்னேற்றம் வந்தாலும் மாறாத சில அடிப்படை சமூகக் கோட்பாடுகளையும் அற்புதமாகப் பேசுகிறது. இதில் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் துளி பிரச்சாரத்தொனியும் இல்லாமல் இதைக் கூறியிருப்பது சபாஷ் போட வைக்கிறது.

நாவலின் ஆரம்ப வரிகளில் மேலச்செய்யூர், கீழச்செய்யூர் என ஊர்ப் பெயர்கள் வருகிறது, பெயரில்கூட மேல கீழ் என வைக்கும் நிலை எப்போது மாறும்?? சாதாரண உரையாடல் நிமிர்ந்து அமர வைத்தது. அப்போது முதல், கடைசி வரிகள் வரை அந்த ஆர்வம் துளியும் குறையாமல் சீரான நிலையில், ஜெட் வேகத்தில் சென்றுகொண்டே இருந்தது.

65 வயதான நல்லாசிரியர் விருது வாங்கிய ஆசிரியர் ஒருவர் மூன்று மகன்கள், ஒரு மகள் என அனைவருக்கும் நல்ல முறையில் திருமணம் செய்து, தன் கடமைகளை எல்லாம் முடித்துவிட்டுத் தனிமையில் வாழ்ந்துவருகிறார். தன்னுடைய கல்லூரி வயதில் கீழ் ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை அவர் காதலித்திருக்கிறார். அன்றைய நாட்களில் உச்சத்திலிருந்த சாதியப் பாகுபாடு இவர்களின் காதலைச் சேர்த்து வைக்க மறுத்துவிடுகிறது.

பல கொடுமைகளுக்கு உள்ளாகும் காதலி குறைந்தபட்சம் உயிரோடாவது இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவளைப் பிரிந்துவிடுகிறார். தன் சாதியிலேயே இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுக்கும் உண்மையாக வாழ்கிறார்.


நயினார்
புதினப் போட்டி 2024
குறும்பட்டியலில் இடம்பெற்ற நாவல்

அவர் காதலித்த பெண்ணோ, தன் மீது ஏவப்பட்ட அடக்குமுறைகள் மீதான கோபத்தைப் படிப்பில் காட்டி, அரசாங்க வேலையைப் பெற்று ஒரு தாசில்தாராகப் பணியாற்றி ஓய்வு பெறுகிறார். அதே நேரத்தில் இவர் மீதான காதல் காரணமாக, கடைசி வரை திருமணம் செய்துகொள்ளாமலேயே வாழ்ந்துவிடுகிறார். ஆசிரியர் இதைப் பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாமல் தன் வாழ்வைக் கழித்துக்கொண்டிருக்க, இவள் அவரைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் தெரிந்துகொண்டிருக்கிறாள்.

ஒரு திருமணத்தில் 65 வயதான இந்த ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும் (மனைவியையும் தன்னுடைய சிறிய வயதிலேயே அவர் இழந்திருக்கிறார்), 60 வயதான ஓய்வு பெற்ற பெண் தாசில்தாரும் மீண்டும் சந்திக்க நேர்கிறது. நல்லசிவம் என்ற அந்த ஆசிரியருக்கு அவளைப் பற்றிய உண்மைகள் தெரியவர, வயதான காலத்தில் இருவரும் சேர்ந்து வாழ முடிவு செய்கிறார்கள். இருவரும் சேர்ந்தார்களா, 60கள் வரை குறையாமல் இருந்த காதல் கைகூடியதா??

இதனால் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட விளைவுகள்?? அவரது ஆண்ட சாதியில் ஏற்பட்ட சலசலப்புகள்?? விரிவாகத் தெரிந்துகொள்ள நாவலை வாங்கிப் படியுங்கள்.

மேலே விவரித்த மெயின் கதையை மட்டும் சொல்லாமல், இந்தக் கதைக்கு நடுவே வரும் கிளைக் கதைகள் ஒவ்வொன்றும் அத்தனை சிறப்பு. சிறப்பு என்பது விவரணையில் மட்டுமல்ல, அந்தக் கிளைக்கதைகள் பேசும் அரசியலும் மிக மிக முக்கியமானது.

எண்பதுகளில் இருந்த சாதிவெறி இன்றைய காலகட்டத்திலும் அடங்காமல் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்கான ஒரு காதல் கதை. முதலில் சற்று நாடகத்தனமாக இருந்தாலும், ஆசிரியர் எடுத்துக்கொண்ட களத்தையும், ஊரையும் மனதில் ஏற்றிக்கொண்டால் அந்த நிலை இன்னமும் இருக்கிறது என்பதை வாசிக்க வாசிக்க நாம் ஒத்துக்கொள்கிறோம்.

அதைப்போலவே இன்னொரு கிளைக் கதையில் மஞ்சுளா என்ற ஒரு பாத்திரம். மொத்தக் கதையிலும் என்னைக் கவர்ந்த பாத்திரம் என்றால் அது இதுதான். மேல் சாதித் தகப்பனுக்கும் கீழ் சாதித் தாய்க்கும் பிறந்து, மேல் சாதிப் பெண்ணாக வேறு ஒருவர் வீட்டில் வளர்ந்தாலும், அண்ணன்களாக இருக்கும் மேல் சாதி ஆண்களின் மனதில் இருக்கும் குரூரத்தைத் தாங்கிக்கொண்டு வாழ்கிறார். அன்பான கணவன் கிடைத்தபோதிலும் கணவன் வீட்டில் வேறொரு ரூபத்தில் வரும் கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு, வளர்ப்புத் தந்தையின் காதலுக்காகக் கடைசியில் அவர் எடுக்கும் முடிவு நிச்சயம் கண் கலங்க வைக்கிறது. மாறாத இந்தச் சமூகத்தின் மீது இந்தப் பாத்திரம் மூலம் சாட்டையடி சுழற்றி இருக்கிறார் எழுத்தாளர் நயினார்.

நாவலின் இறுதியில் வரும் எதிர்பாராத முடிவு முதலில் வருத்தத்தைத் தந்தாலும் பின்பு யோசித்துப் பார்க்கையில் இதற்கு இந்த முடிவுதான் சரி என்றே தோன்றுகிறது. சாதி மதப் பாகுபாடுகள் யாரும் பார்ப்பதில்லை என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டே இருந்தாலும், இன்னமும் ஒரு ஓரத்தில் இத்தகைய பாகுபாடுகளும் கொடுமைகளும் நடந்துகொண்டிருக்கின்றன என்பதுதான் எதார்த்தம்.

இந்த யதார்த்தம் மறையும் வரை இப்படிப்பட்ட படைப்புகள் தொடர்ந்து, வந்துகொண்டேதான் இருக்கும். அப்படிப்பட்ட படைப்புகளில் முதன்மையான படைப்பாக மாயப்பசி திகழும். மாயப்பசி வாசிக்கும் யாரோ ஒருவரின் மனதில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தினால் அது சமூக மாற்றத்திற்கான ஒரு தொடக்கமாக இருக்கும் என்ற வகையில் அனைவரையும் வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். *

ஆண்டன் பெனி

தொடர் - 7



# உள் டப்பியின் பச்சை விளக்கு

காதலிலும் நல்ல காதல் கெட்ட காதல் என்று எதுவுமில்லை. உயிர்களை நேசித்தல் அல்லது சக மனிதர்களை நேசித்தலில் எதற்குப் பாகுபாடு? காதல் சமூகத்தில் கலங்கரை விளக்கமாக இருப்பது உள்டப்பி என்றழைக்கப்படும் முகநூல் இன்பாக்ஸ். அதை மாற்றுக் காதலின் ஒளி விளக்கு என்று கூறுவதை மென்மையாகக் கண்டிக்கிறேன். மூச்சுத் திணறல், வாதம், பித்தம், கபம் இன்னபிற மேன்ஷன் வியாதிகளைக் குணமாக்கும் வல்லமை இன்பாக்ஸ் பச்சை விளக்கிற்கு உண்டு. 'Have an apple a day, keeps the doctor away' என்றொரு பழமொழி உண்டு, அதே போல் 'Light the fb inbox in a day, keeps the doctor away' என்ற தேவ வாக்கியம் பலருக்குத் தெரியாமல்போனதுதான் வேதனையின் உச்சம். படபடப்பு, மனச் சோர்வு போன்ற உளவியல் பிரச்சனைகளையும் இந்த நள்ளிரவு மருத்துவமனைகள் தீர்க்கின்றன.

என்றாலும் இந்தச் சமூகம் மாற்றுக்காதலுக்கு உரிய அங்கீகாரம் தரவில்லை. துணை மாப்பிள்ளைக்கு அவரது இணையுடன் முதல் பகலைக் கூட தராத சமூகத்திடம் பெரிதாக என்ன எதிர்பார்த்துவிட முடியும். நான் வேண்டுவதெல்லாம் எல்லாவற்றையும் சமமாகப் பாவிக்கும் ஒரு சமூகத்தைத்தான்.

நிற்க. ஒற்றைப் பச்சை விளக்கினை ஓயாது எரியவிட்டுக்கொண்டிருக்கும் அதன் அழகில் மயங்காதவர்களே இல்லை எனலாம். அழகு இருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும் என்பதை இந்த இடத்தில் நினைவுகூரத்தான் வேண்டும். 'ஸ்கிரீன் ஷாட்'தான் அந்த ஆபத்து. அதுமட்டும் இல்லையென்றால் காதலுக்கான முப்போக விளைச்சலை அது கண்டிருக்கும். என்றாலும்கூட சில பெருந்தன்மையான மனிதர்களால் மகசூல் பரவாயில்லைதான்.

உள்டப்பியில் உரையாடுவது எப்படி? என்ற சின்ன சேலம் சித்த வைத்தியசாலை டாக்டரின் பயிற்சி வகுப்பு பயனுள்ளதாக இருக்கிறது என்று உபயோகிப்பாளர் சொல்லக் கேள்வி. ஜியோ அன்லிமிட்டெட் ஆஃபர் அதிகமாகவே உதவியிருக்கிறது. தவிரவும், கொரனா பெருந்தொற்று நோய் என்றே பலரும் நினைத்திருந்த வேளையில், மாற்றுக் காதல் மாந்தர்கள் அதனை அருமருந்தாகக் கொண்டு தங்களின் மாற்றுக் காதலுக்கு அங்கீகாரம் பெற்றது தனிக்கதை.

பூவைப் புஷ்பம் என்றும், பருவை மச்சம் என்றும், இரவை வெளிச்சம் என்றும் கொண்டாடும் ஒரே ஜீவன் இன்பாக்ஸ் மட்டுமே. நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு, உச்சி வெயிலை உணர்த்தும் மகத்துவம் அதற்கு உண்டு. பின்னிரவில் அதுவும் மூன்று மணிக்கு 'சாப்பிட்டியா செல்லம்?' என்கிற ஒற்றை வார்த்தையில் மின்சாரமே தயாரிக்கலாம். இவ்வாறான மின்சாரங்களால் சுற்றுச்சூழலுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. மேலும் இந்த மின்சாரத்தின் மூலம், இரத்த நாளங்கள் புத்துயிர் பெறுவதாகவும், ஆஞ்சியோகிராம் இல்லாமலே இரத்த அடைப்புகள் உடைத்தெறிப்பட்டு, இதயங்களின் ஆயுள் இரட்டிப்பாகுவதாகவும் எகிப்தியப் பிரமிடுகளில் குறிப்புகள் உள்ளன. அந்த நேரத்தில் அந்த 'சாப்டியா' வார்த்தையானது, நாம் உண்ணும் மூன்று வேளைக்கான உணவு இல்லை, அது முப்போதும் அன்பைக் கிளறும் காதலுக்கான வார்த்தை.

'உனக்குத் தூக்கம் வந்தா தூங்கு..ஆனா டபுள் டிக் இருந்தா போதும் நான் விடியும் மட்டும் அதில் வாழ்வேன்' என்கிற கொஞ்சல்கள், குழந்தை தூங்காமல் இருக்க, விடிய விடிய தாலாட்டு பாடுவது போல் இருக்கும். ஆமாம் இன்பாக்ஸ் என்பது தேவதைகள் கட்டிய தொட்டில். முப்பத்து முக்கோடி தேவ தூதர்கள் தவழ்ந்த இடம். ஆயிரம் நிலவை உருக்கிச் செய்த ஒரு துளி வெளிச்சம்.

'குட்டிமா என்ன பண்ணுது?' வார்த்தை பௌர்ணமி வெளிச்சம். இதைத்தான் நம் முன்னோர்கள் நாளெல்லாம் பௌர்ணமி என்றார்கள். முன்பெல்லாம் காதலுக்கு



எதிராக சமூகமே நின்றது, பிறகு ஊர் நின்றது அதன்பிறகு குடும்பம் நின்றது. இந்த இன்பாக்ஸ் வந்த பிறகு கணவன் அல்லது மனைவி அதற்கு எதிராக நிற்கும் நிலை உருவாகியுள்ளது. இதையெல்லாம் பார்க்கும்போது 'புருசன்னா, அந்த வேலையை மட்டும் பாருங்கடா' என்ற பிரபல வாக்கியம்தான் நினைவுக்கு வருகிறது.

'ஹலோ'வில் ஆரம்பித்து 'என்கிட்ட எதும்மா/எதுடா உன்னைய ஹெவியா லைக் பண்ண வச்சது?' வரைக்குமான வார்த்தைகள் தெளிந்த தேசிய நெடுஞ்சாலைப் பயணம், ஆனால் கரணம் தப்பினால் மரணம் கதைதான். 'பர்ப்பிள்'கலர்னு ஒன்னு இருக்கிறதே, உனக்கு அந்தக் கலர் பிடிக்கும்னு நீ சொன்ன பிறகுதான் தெரியும்' என்பது எப்பேர்ப்பட்ட வார்த்தை. தஞ்சாவூர் கல்வெட்டுகளில்கூட காணக் கிடைக்காத ஒன்று.

நள்ளிரவு 12:18 மணிக்கு ராகுவும் கேதுவும் உறங்கப் போய்விடுவதாலும் எமகண்டம் அதிகாலை 5:12 மணிக்கே ஆரம்பிப்பதாலும் பெரிய ஜாதக தோசம் ஏற்படப் போவதில்லை என்பதாலும், அந்த நேரத்தில் கவிதை எழுத நினைக்கிறவர்களுக்குப் பச்சை விளக்குகள் பெரிதும் உதவிபுரிகின்றன.

கல்லீரல் நோய் வராமல் இருக்க மூன்று மண்டலம் மாற்றுக் காதலில் இருப்பது நல்லது என்கிறது உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கை. மேலும், உள்டப்பியின் பரஸ்பரம் உரையாடலின்போது மிதமான வெந்நீரும் கொஞ்சம் காராசேவும் கையில் வைத்துக்கொள்வது.. அதிகப்படியான படபடப்பின்போது குளிர்ந்த நீரால் நுரையீரலை நனைப்பதைவிடவும், மிதமான வெந்நீர் பயன் தரும். காராசேவு எதற்காக என்றால் உரையாடலின் உச்சத்தில், நினைத்தது நிறைவேறாதபோது பற்களைக் கடித்துக்கொள்ளும் நிலை வரும்போது, காராச்சேவு பற்களைப் பாதுகாக்கும். இதுவும் சென்னையின் பிரபல பல் மருத்துவர் ஒருவரின் ஆலோசனைக் குறிப்பில் இருக்கிறது. ஆகவே நண்பர்களே உரையாடலில் உச்சம் என்பதும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்.

'உள்டப்பியின் பச்சை விளக்கு, விடிய விடிய எரிந்தால் போகிறது உனக்கென்ன? நீயா கரண்டுபில் கட்டுற?' என்று நீங்கள் கேட்கலாம். மாற்றுக் காதலுக்கும் தடையில்லா மின்சாரம் மிகவும் ஆபத்தானது. 'அதனாலதான் சொல்றேன்... பேராண்டிகளா.. நேரமே தூங்குங்க.. இந்தத் தாத்தா சொல்றத கேளுங்க, வீட்டுச் சொவருலதான், சித்திரம் வரைய முடியும், பச்சை வெளக்கு பதம் பாத்துரும்.. ஆமா சொல்லிப்புட்டேன்.'

*

சிறுகதை

கு. இலக்கியன்







ஓவியங்கள் : ஜீ.ரஜினிகாந்தன்

# அன்பின் நறுமணம்

உடம்பு ரொம்பவும் சடைத்துவிட்டது. எலும்பு துருத்திக்கொண்டு சதைத் தேகம் உருக்கி, ஊன் தளர்ந்துவிட்டது. யாரும் எதுவும் சொல்லிக்கொள்ளாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மனதிற்குள்ளே தளுதளுத்து நின்றனர். அவள் தலைமாட்டில் மருந்து மாத்திரைகள் அடங்கிய ஒரு டப்பாவும், ஒரு பிளாஸ்க்கும், கூடவே சில்வர் சொம்பு, இரண்டு டம்ளர்களும் எப்போதும் இருந்தன. தலையணைகூட ஒரேவாட்டில் வைத்துப் படுத்திருந்ததில் பள்ளமாகி, அது ஒரு வடிவத்திற்கு மாறிவிட்டிருந்தது. இது எல்லாவற்றையும் தாண்டி, அந்த அறைக்குள் வீசும் ஒருவித நோய்மையின் வாடையை அவ்வளவாக எல்லோராலும் சகித்துக் கொண்டுவிட முடியாது. அந்த வாடை பெருகி இருந்தபோதுதான் என்னை எல்லோரும் வற்புறுத்தி அந்த அறைக்குள் அத்தையைப் பார்க்க அழைத்துப் போனார்கள். அவள் என் அத்தைதான். அப்பாவின் மூத்த தங்கை மங்கைவதி. இளையவள் சித்திரைவதி.

மூத்த அத்தை மங்கைவதி என்றால் அப்பாவுக்கு அவ்வளவு மரியாதை. பள்ளிக்கூடத்திற்குப் போகச் சொல்லி அப்பாவைக் கட்டாயப்படுத்தும் போதெல்லாம், தன் தலைமாட்டில் கருக்கரிவாளை வைத்துக்கொண்டு உறங்கி, ஊர் விழிக்கும் முன்பே அறுவடை வயலில் நின்றவர் அப்பா. பள்ளிக்கூடமென்றால் அவ்வளவு கசப்பு. கணக்கு என்றால் ஆமணக்கு, இங்கிலீஷ் என்றால் காக்கா வலிப்பு என்று எழுதித் திரிந்தவர். வயல் அறுப்புக்குச் சென்றுவிட்ட அப்பாவை, இரவு வீட்டிற்குள் அனுமதிக்க மறுத்து விரட்டும் ஆயாவுக்குப் பயந்து பசியால் கிடக்கும் அப்பாவுக்கு மங்கைமதி அத்தைதான் திருட்டுச் சோறு போட்டுக் கொடுக்கும். அத்தைக்கும் தன் அண்ணன் மேல் அவ்வளவு பிரியம். சித்திரைவதியை அப்பாவுக்கு

அவ்வளவாகப் பிடிக்காது. பிடிக்காததற்குக் காரணமெல்லாம் ஒன்றுமில்லை. பிடிக்காது என்றும் சொல்லிவிடவும் முடியாது. மங்கைவதியிடம் இருக்குமளவுக்கு ஈர்ப்பு சித்திரைவதியிடம் கிடையாது அவ்வளவுதான்.

மங்கைவதி அத்தைக்குக் கல்யாணம் பேசி முடிவெடுத்துவிட்ட நாளிலும்கூட, அப்பா பொறுப்பற்றதனத்தோடுதான் அலைந்து திரிந்தார். சீர்வரிசை, மேள தாளம், விருந்து, சடங்கு சம்பிரதாயங்கள் என்று எதற்கும் அப்பா உதவியாக இருந்ததில்லை. ஆனால் அத்தை மணம் முடித்துப் போகும்போது ஏனோ, தொண்டைக்குழி வறண்டுப் போகுமளவிற்கு கேவலெடுத்து அழுத அப்பாவை எல்லோரும் சமாதானப்படுத்தினார்கள். அதற்குப் பிறகான காலங்களில் அத்தையும் அவள் குடித்தனமும் என்று கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அத்தைக்கும் மூத்தவள், இளையவன் என்று இரண்டு பிள்ளைகளாகிவிட்ட வாழ்க்கைப் போராட்டத்தில் விரும்பியே தொலைந்து கிடந்தாள். இந்தக் காலகட்டத்தில்தான் அத்தை நோய்மைக்குள் விழுந்திருந்தாள்.

அதற்குப் பிறகான நாட்களில் மாமா, அத்தையை அழைத்துக்கொண்டு அலையாத நகரங்கள் இல்லை. ஏறாத மருத்துவமனைகள் இல்லை. யார் எது சொன்னாலும் அங்கு ஒருமுறை போய்ப் பார்க்கலாமென்று அத்தையை அழைத்துக்கொண்டு, யாரையும் தொந்தரவு செய்யாமல் இருவருமே அலைந்து அலைந்து வெறுமையுற்றபோதுதான் அத்தைக்கு நடமாட்டம் குறைந்து பலமற்றுப் போகத்தொடங்கினாள். உணவு தள்ளிவிட்டது. விழித்திரைகளில் ரத்த ஓட்டம் குறைந்து கண்கள் வெள்ளரி விதையைப் போல வெளிறிவிட்டன. அத்தையின் பிள்ளைகள் ஓரளவுக்கு வளர்ந்துவிட்டார்கள். அவர்களும் என் வயதுதொத்தவர்கள்தான். ஒன்றிரண்டு வயது மூத்தவர்கள்.

அத்தையால் முன்பு போல் ஆஸ்பத்திரிக்கு அலைய முடியவில்லை. நடப்பதே சவால் ஆகிவிட்ட பிறகு ஆட்டோ, கார் என்று மாமாவுக்கு முடிந்த அளவு அழைத்துப் போய்ப் பரிசோதித்து மருந்து, மாத்திரைகள் என்று சிகிச்சை அளித்தும் அத்தையைத் தேற்ற முடியவில்லை. அத்தை இப்போது படுத்திருக்கும் இந்த அறைக்குள் சிறைப்பட்டு இரண்டரை வருடங்கள் ஆகிவிட்டது. முழம் கணக்கில் பூச்சூடும் அத்தையின் தலையில் ஈரும் பேனும் மண்டிக் கிடக்க, மொட்டையடித்து விட்டார்கள். அத்தை வீட்டுக் கொடிக்கால் வெற்றிலையோடு, லட்சுமி சீவல் சேர்த்துச் செவக்க செவக்கப் போடும் வாய், இப்போது வெடித்து வறண்டு போய்க் கிடக்கிறது. தெருமுக்கில் குடிதண்ணீர் சுமந்துவரும் அத்தையின் நீர் ஒழுகிய இடை, இப்போது ஒட்டி உருக்குலைந்து விட்டது. அச்சம் கொண்ட மனம் இருண்டு விடுவது மாதிரி, சாவுக்களை வந்துவிட்டவுடன் உடலும் சவத்துப் போய்விட்டது. எல்லாவற்றையும் விட, அவள் பேச்சொலி குறைந்து ஏதாவது சொல்வதற்குப் படுகிற அவதிதான் அத்தனைப் பேரையும் கலங்கடித்தது.

ஒருமுறை அவள் படுக்கையின் அருகில் வைத்திருந்த பால், கீழே ஊற்றிவிட்டதை யாரும் கவனிக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அதில் நெருப்பு எறும்புகள் சூழ்ந்திருப்பது தெரியாமல் அத்தை புரண்டு படுக்க, அவள் முதுகுப்புறம் முழுக்க எறும்புகள் கடித்துத் திட்டுத் திட்டாக வீங்கிக் கிடந்தது. என்னவோ கடிக்கிறது என்று உணர்ந்த அத்தைக்கு அதைச் சொல்ல வார்த்தைகள் வரவில்லை. தன் கைகளை நீட்டி ஜாடையாக ஏதோ சொல்ல முயற்சிப்பதை அருகில் இருந்தவர்களால் புரிந்துகொள்ள முடியாமல் நின்றார்கள். ஒரு கட்டத்தில் அவள் சொல்வது என்னவென்று குழம்பிவிட்டவர்கள் பிறகு அலட்சியமாக விட்டுவிட்டார்கள். அன்று மாலை, வெந்நீரில் துடைத்து விடுவதற்கென்று அத்தையைத் தூக்கி உட்கார வைத்துத் துணிகளை மாற்றி விடும்போதுதான் முதுகு முழுவதும் எறும்புகள் மொய்த்துக் கிடப்பதை அறிந்த

மாமா கதறிக்கிடந்ததை அப்பா சொல்லிச் சொல்லித் தேம்புவார்.

இந்த நிலையிலிருந்த அத்தையைத்தான் பார்க்க என்னை வற்புறுத்தினார்கள். அவர்கள் என்னை வரச்சொல்லி வற்புறுத்தியதற்கு ஒரு காரணம் இருந்தது. அதை அத்தை சொல்லிக்கொண்டே இருந்தது. “அண்ணன் மவனப் பார்க்கணும். வரும்போது கூட்டியாங்க. அவன வரச்சொல்லுங்க” என்று ஊருலிருந்து போகும் எல்லோரிடமும் இதே வார்த்தைகளை மாறாமல் சொல்லிக்கொண்டே இருக்கிறதென்று சொல்வார்கள். நான்தான் தவிர்த்துக்கொண்டேயிருந்தேன்.

காரணம், அத்தையின் உறவுக்காரர் மகள் திருமணத்திற்குப் பத்திரிகை வந்திருந்தது. அப்பாவால் போக முடியாத சூழல். அம்மா காய்ச்சலில் கிடந்தாள். விடுமுறையில் இருந்த என்னை அந்தத் திருமணத்திற்குப் போய் வரும்படி அனுப்பிவைத்தார்கள். நானும் விசேஷம் முடிந்தவுடன் அத்தை வீட்டிற்கும் போய் வரலாமென்ற ஆர்வத்தோடு போனேன். விசேஷத்தில் அப்பா கொடுத்தனுப்பிய மொய் பணத்தைக் கொடுத்துவிட்டு, அத்தையின் பிள்ளைகளோடே அத்தை வீட்டிற்குச் சென்றுவிட்டேன். மாலை முழுவதும் ஒரே கொண்டாட்டம்தான். கடைத்தெருவை ஒட்டிய வீடு என்பதால் அப்பா கொடுத்த காசு பூராவும் காலியாகிவிட்டது. அத்தையும் மாமாவும் வீடு வருவதற்குள் இருட்டிவிட்டது. என்னால் ஊருக்குத் திரும்பி வர முடியவில்லை. கையில் காசு இருந்தாலாவது பஸ் ஏறிவிடலாம். காசும் இல்லை. நாளை பள்ளிக்கூடம் போக வேண்டும். உடனே திரும்பி வந்துவிட வேண்டுமென்று அப்பா சொல்லித்தான் அனுப்பினார். சரி என்னவோ ஆகட்டும் அத்தை வந்த பிறகு காசு வாங்கிக்கொண்டு காலையில் முதல் பஸ்சில் ஏற்றிவிடச்சொல்லிப் போய்விட வேண்டும் என்று காத்திருந்தேன்.

விடிந்தது. அத்தையிடம் “நான் ஊருக்குப் போகிறேன். ஸ்கூல் போகணும். அப்பா திட்டுவார்” என்று சொன்னேன். அத்தை “ஊருக்குப் போகணுனா போ. உன்ன யாரு போக வேண்டாம்னு சொன்னது?” என்று அலட்சியமாகச் சொன்னாள். “பஸ்க்குக் காசு வேணும் அத்த” என்ற என்னைப் பார்த்து “உங்க அப்பன் கொடுத்து விடலையா... கல்யாணத்துக்கு வந்தவங்களுக்கு நாங்க காசு குடுத்துவிட எங்கள்ட்ட காசு இல்ல” என்று கோபமாகச் சொன்னாள்.

அப்பாவுக்குப் பயந்து எப்படியாவது பள்ளிக்கூடம் போய்விட வேண்டுமென அத்தையிடம் கெஞ்சத் தொடங்கினேன். “பத்து ரூபா போதும் அத்த. கொடு அத்த...” என்று பத்து முறைக்கு மேல் கேட்டுவிட்டேன். இல்லை என்று மறுத்துவிட்டு, சட்டென்று ஒரு துண்டை எடுத்துக்கொண்டு வெற்றிலைக் கொடிக்காலுக்குக் கிளம்பிவிட்டது. அத்தை பிள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பிவிட்டார்கள். விடியலில் போன மாமாவும் இன்னும் வீடு வரவில்லை. நேரமாக ஆக எனக்கு அழுகையும் கோபமும் வந்துவிட்டது.

யாருமில்லாத அத்தை வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அதற்குப் பின், நான் ஒரு கணமும் தாமதிக்கவில்லை. நடந்தே ஊருக்குப் போய்விடலாம் என்று புறப்பட்டுக் கிளம்பிவிட்டேன். என்றாலும் மனமுழுவதும் பயமும் பதட்டமுமாகக் காலையில் புறப்பட்டவன், இருபது மைல் தொலைவைக் கடந்து விளக்கு வைக்கும் நேரத்திற்கு வீடு வந்தேன். நான் வந்து சேர்ந்த கோலத்தைப் பார்த்த அம்மா, என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுது தீர்க்கவும் தெருவே திரண்டுவிட்டது.

அத்தையும் அம்மாவும் வருடக்கணக்கில் பேச்சு வார்த்தைகள் இன்றி இருந்தார்கள். இதைச் சொல்லியே அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கூட பல நாள்கள் சண்டை வந்துகொண்டிருந்தது. “எம் ஒத்த புள்ளைக்கு பஸ்சுக்கு பத்து ரூவா கொடுக்க முடியாதவங்ககிட்ட என்ன ஒட்டு ஒறவு?” என்று எடுத்தெறிந்து பேசினாள். “எம் புள்ள வந்த வழியில எத்தன காரு, எத்தன வண்டி வாசி... அந்த ஆத்தாதான் எம் புள்ளைய வீடு கொண்டுவந்து சேர்த்திருக்கா” என்று

மாரில் அடித்து அழுது கிடந்தாள்.

அதற்குப் பிறகான இத்தனை ஆண்டுகளில் ஒரு வார்த்தைகூட அவளிடம் நான் பேசியதில்லை. யாரவது என்னிடம் உங்க அத்தை என்று சொன்னால்கூட நான், அது எங்க அத்தை இல்லையென்று சொல்லியிருக்கேன். அத்தையோ “உன் மவனுக்கு நான் விரோதியாகிட்டேன்” என்று அம்மாவிடம் அடிக்கடி சொல்லிக்காட்டும். ஆனாலும் அப்பாவோ அம்மாவோ இது பற்றி என்னிடம் எதுவும் சொல்லிக்கொள்ளமாட்டார்கள்.

இது நடந்ததற்குப் பிறகு எவ்வளளோ சந்தர்ப்பங்களில் அத்தையைச் சந்திக்க நேர்ந்தது. அப்போதெல்லாம் இருபது மைல் தூரம் நடந்த கால்களின் வலியைவிட, அத்தை பத்து ரூபாய் கொடுக்கலையே என்ற வலி என்னைத் துளைத்தெடுத்து என்னிடமிருந்து அவளைத் தள்ளியே வைத்தது.

இதோ இப்போது எல்லோரும் என்னை வற்புறுத்துகிறார்கள். எனக்கு மட்டும் என்ன? அத்தையைப் பார்க்க வேண்டும்போல்தான் இருக்கிறது. என் அப்பாகூட பிறந்தவள்தானே. என் அத்தைதானே, அத்தை என்று கூப்பிட்டுப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. அவள் எங்கள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் “அத்த உன்ன கூட்டியாரச் சொன்னது” என்று தங்கைகள் அழைக்கும்போதெல்லாம் மனம் கிடந்து தவிக்கும். ஓடிப் போய் அவள் மடியில் ஏறி உட்கார்ந்துகொள்ளலாமா? அவள் கழுத்தைக் கோர்த்துக் கட்டிக்கொண்டு, என் கால்கள் எவ்வளவு வலித்தது தெரியுமா? ஏன் அத்த எனக்குக் காசு கொடுக்கல...? என்று கேட்கலாமா எனத் தோன்றும். ஆனாலும் அவளை நெருங்க என் மனம் ஒப்புக்கொள்ளவே இல்லை. விலகியேதான் இருந்தேன்.


இப்போது, அவள் சாவுப் படுக்கையில் கிடக்கிறாள். அத்தையைப் பார்க்கப்போன அம்மாவும் கண்கலங்கியபடியே, அத்தை அவ்வப்போது நினைவு தப்பிப் போய்விடுவதாகச் சொன்னாள். அதைக் கேட்டு என் மனம் தவித்தாலும், ஏனோ போய்ப் பார்க்க இரங்கவில்லை.

அத்தை ஊருலிருந்து ஆள் அனுப்பியிருந்தார்கள். “ரொம்ப அவதிப்படுது, உங்க முகத்த பார்க்கணுன்னு சொல்லுது, உங்கள கையோட கூட்டி வரச்சொன்னாங்க” என்று வந்தவர் சொன்னதும் எல்லோரும் கிளம்பினார்கள். என்னைக் கிளம்பச் சொல்லி யாரும் சொல்லவில்லை. ஆனாலும் நான் கிளம்பினேன். எல்லோரும் வியப்பு மேலிடப் பார்த்தவர்கள் அவர்களோடு என்னையும் அழைத்துப்போனார்கள். வீடும் வாசலும் முழுவதும் வேறு மாதிரி இருந்தது. தயக்கத்தோடுதான் அத்தையின் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தேன்.

எனக்கு முன்பே வீட்டிற்குள் நுழைந்த அம்மா, அத்தையைப் பார்த்ததும் ஓ... வென்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். நீர் பொங்கும் தனது கண்களைத் துண்டால் துடைத்து நின்றார் அப்பா. செய்வதறியாது நின்ற மாமா என்னைப் பார்த்து, “மாப்ள உங்க அத்தைய இப்பதான் பார்க்கணுன்னு வந்தியாடா?” என்ற கணம்தான் தாமதம். “அத்த....” என்று ஓடி, அத்தையின் கால்களைப் பிடித்துக்கொண்டு “அத்த... அத்த... அத்த...” என்று ஒரு நூறு முறையாவது சொல்லியிருப்பேன். அவள் காதுகளில் அது விழுந்ததா என்று எனக்குத் தெரியவில்லை.

ஒரு கணத்தில் என்னோடு சேர்ந்து எல்லோரும் ஓலமிட்டுக் கதறினார்கள். அப்போது அப்பாவும், மாமாவும் என்னைத் தூக்கிக் கட்டிக்கொண்டு அழுதார்கள். கொஞ்ச நேரத்தில் அப்பா, அத்தையின் கண்களை முகத்தோடு வழித்து மூடிவிட்டார். அதற்குப் பிறகான நாள்களில், அத்தை படுத்திருந்த அந்த அறையின் ஒருவித வாடையும், அவள் கால்களில் உறைந்திருந்த சில்லிடலும் இத்தனை காலம் கடந்தும் மறையாமல் எனக்குள் தங்கியிருக்கிறது.

*




# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

கடிதம் – 80

எழுதியவர் : சிற்றிதழாசிரியர்
குன்றம் மு.இராமரத்நம்

உறவு அச்சகம்
புலமைப் பண்ணை
கோயமுத்தூர்–641007
7.8.96

அன்புள்ள கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களுக்கு,

அன்பும் வாழ்த்துக்களும்.

தங்கள் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி.

தாங்கள் தந்துள்ள 27 முகவரியாளர்களில் ஜெயமோகன், பூர்ணச்சந்திரன், மனுஷ்யபுத்திரன், கால.சுப்ரமணியம், கரிகாலன், தேவதேவன், வல்லிக்கண்ணன், திகசி, அழகிய சிங்கர், ஞானி, பழமலய், மு.முருகேஷ், பிர்தௌஸ் ராஜகுமாரன், சுந்தரராமசாமி, சுகன், இலக்குமிகுமாரன் ஞானதிரவியம் ஆகியோர்கள் தாராமதியின் தொடர் வாசகர்கள்தான் – தமிழவன், பாவண்ணன், தஞ்சை பிரகாஷ், பெருமாள் முருகன், வண்ணதாசன், நட்சத்திரன் ஆகியோர் என்னை அறிவர். இன்று பழமலயிடமிருந்து கடிதம் வந்தது. தான் எல்லோரையும் அறிந்திருப்பதாகவும், அனைவரையும் தொடர்ந்து விமர்சிப்பது படிப்பவர்களுக்கு அலுப்பு ஊட்டுமோ என அஞ்சுவதாகவும், இக்காரணத்தால் விக்ரமாதித்யன் பற்றி எழுத அஞ்சுவதாகவும் எழுதியுள்ளார். இதழில் அறிவிப்பு செய்தும், அந்த அறிவிப்பைப் பார்த்தும், மேலே கண்ட நம் அன்பர்கள் எழுதவில்லை என்றால், தனிப்பட எழுதியும் பார்த்துவிட வேண்டியதுதான். ஒரு ஆறு பேராவது எழுத வேண்டும் (குறைந்தபட்சம்) என்பது என் விழைவு. எழுதிப்பார்க்கிறேன்.

தாங்கள் கேட்டுக்கொண்டபடியே தங்களைப் பற்றிய விமர்சனங்களை நவம்பருக்குத் தள்ளிவைப்போம். எனினும் எழுதும் கடிதங்களில் இப்போது அதைக் குறிப்பிட வேண்டாம். குறிப்பிட்டால் நாள் கிடக்கிறது எனத் தூங்கிப்போய்விடுவார்கள். இவ்விதழில் நீங்கள் ஏற்கெனவே எழுதி அனுப்பிய உங்கள் வாழ்க்கைக் குறிப்பை வைத்து உங்களைக் குறித்து விரிவான அறிமுகத்தை மட்டும் வெளியிடுவோம். போட்டோக்கூட வேண்டாம். அதை முகப்பட்டையில் நவம்பரிதழில் – உங்களைப் பற்றிய கட்டுரைகள் வெளியாகும்போது போடலாம். காரணம் – இவ்விதழில் புகைப்படமில்லாமல் (அடுத்த இதழில் வெளியாகும்) ஓவியா பற்றிய குறிப்பையும் வெளியிட வேண்டியுள்ளது. ஒருவருக்குப் புகைப்படம் மற்றவருக்கு வெறுமனே என இருக்க வேண்டாம்.

ஓவியா குறித்து எழுதுமாறு சுமார்

6 பேருக்கு எழுதியுள்ளேன். ஆனால் இன்னும் எதுவும் வரவில்லை. காரணம் – அக்டோபர் இதழுக்குத்தானே.. என்று அவர்கள் இருக்கலாம்.

தேவையில்லாமல் ரிப்ளை Inland letter or postal card அனுப்பிச் செலவு செய்யாதீர்கள். நான் உங்களுக்கு என் செலவில் எழுத மாட்டேனா என்ன? மற்றவர்களுக்கு உங்கள் இஷ்டம்.

பிரமிள் பற்றி எழுதுமாறு கால.சுப்ரமணியம் (லயம்), பொள்ளாச்சி நசன் ஆகியோருக்கு எழுதினேன். பதிலைக் காணோம். நீங்கள் அவசியம் எழுதுங்கள். நேரம் கிடைத்தால் உடனே எழுதுங்கள். இந்த இதழில், என் எதிரிகள், அவளுக்கு, அது ஆகிய மூன்று கவிதைகள் வெளியாகின்றன. அடுத்த இதழிலும் சில வெளியாகட்டும். இந்தக் கவிதைகளை வைத்து நம் வாசகர்கள் எழுதினால் அது மிகச் சிறப்பாக இருக்கும் இல்லையா?

நீங்கள் அனுப்பிய நூல்கள் இரண்டுக்கும் மதிப்புரை இவ்விதழில் வெளியாகும். கலாப்பிரியாவை எனக்குத் தெரியாது. அதனால் என்ன. அவர் நூலையும் விமர்சிக்கலாம்.

மிக்க அன்போடும் வாழ்த்தோடும்.

கு.மு.இராமரத்நம்

..

**கடிதம் – 81**

**எழுதியவர் : சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம்**

கோவை 641007

ஆகஸ்டு – 23, 1996

**அன்புக் கவிஞர் நம்பி அவர்களுக்கு,**

வாழ்த்துக்கள்.

உங்கள் கடிதம் நேற்றுக் கிடைத்தது. செப்டம்பர் சிறப்பிதழ் பாதிக்கு மேல் அச்சாகிவிட்டது. இதழின் வடிவளவு கூட இவ்விதழிலிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. கிரவுன் 1/8லிருந்து டெம்மி 1/8க்கு. உங்களைப் பற்றி மு.முருகேஷ், சோலை இசைக்குயில், 'அமிர்தம்' சூர்யா, புதுவைத் தமிழ்நெஞ்சன் ஆகியோர் கடிதம் எழுதிக் கேளாமலேயே எழுதியிருக்கிறார்கள். முன்னிருவர் மிதமாகவும், பின்னிருவர் கொஞ்சம் காட்டமாகவும் எழுதியிருக்கிறார்கள். பழமலய் உங்கள் உத்திரகோசமங்கை நூலுக்கு அவர் புதிய நம்பிக்கையில் எழுதிய விமர்சன உரையைப் பயன்படுத்துமாறு எழுதியுள்ளார். 'உள்வாங்கும் உலகம்' தொகுப்புக்கு திருமேனி எழுதிய பதிப்புரை மிகச் சிறப்பாக இருப்பதாக எமதுள்ளம் சொல்கிறது. அதில் கூட சில பகுதிகளை எடுத்துக் கொள்ளலாம் போல இருக்கிறது. நானும் என் பங்கிற்கு நீங்கள் எழுதி அனுப்பிய வாழ்க்கைக் குறிப்பைத் துணையாகக் கொண்டு ஒரு சிறு அறிமுகவுரை எழுதியுள்ளேன். எழுதித் 'துளைத்து' வாங்கிப் போடுவதினும் தானாக வந்த இவை சிறப்பு வாய்ந்தவை என்பது என் எண்ணம்.

பெயர்தான் பிறந்தநாள் சிறப்பு மலர் – இதழ் என்பது. அதில் என்னைப் பற்றி எதுவுமிருக்காது. 'வாழ்த்து எல்லாம் வேண்டாம்' என்று சொன்னாலும் சிலர் எழுதிவிடுகிறார்கள். சிலர் முகத்திற்காகவாவது ஒன்றிரண்டைப் போட நேரும் – அது இதழின் இறுதிப் பகுதியில். சில விமர்சனங்கள் இருக்கும். அதைத் தவிர்க்க இயலாது. அவ்வளவுதான். மற்றபடி இதழ் எப்போதும் மாதிரி – முடிந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆகவே, உங்களைப் பற்றிய கட்டுரைகள் சிறப்பு இதழிலேயே 10 பக்கங்களுக்கு மேலாக வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை அச்சாகத் துவங்கியுள்ளன. ஆனதும் அவற்றை அனுப்பிவைக்கிறேன். பதிலுரை எழுதுங்கள். அதை அடுத்த இதழில் வெளியிடுவோம். சரிதானே?

மு.இராமரத்நம்

..

**கடிதம் – 82**

எழுதியவர் : சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம்

புலமைப் பண்ணை

கோவை 641007

29.08.96

அன்புள்ள நம்பிக்கு,


வாழ்த்துக்கள்.


எமது முந்திய மடல் கிடைத்திருக்கலாம். அதில் குறித்தபடி, உங்களைப் பற்றிய கட்டுரைகள் – எமது அறிமுகவுரையோடு – அச்சானதை இத்துடன் அனுப்பியுள்ளேன். படித்து விரைவில் 3.9.96க்குள் உங்கள் பதிலுரை கிடைத்தால் இவ்விதழிலேயே அதையும் வெளியிட்டுவிடலாம்.

இயலாததாயின் பரவாயில்லை – அடுத்த இதழில் அதை வெளியிடுவோம்.

மீண்டும் வாழ்த்துக்களோடு.

மு.இராமரத்நம்





## கடிதம் – 83

எழுதியவர் : சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம்

புலமைப் பண்ணை

சுகர்கேன் அஞ்சல்

கோவை – 641007

14.11.96

அன்புள்ள கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களுக்கு,

அன்பும் வாழ்த்துக்களும்.

தங்கள் கவிதைகள் – கடிதங்கள் வந்து சேர்ந்தன. அவற்றில் தங்கள் உணர்ச்சி வெள்ளத்தையும் காண முடிந்தது.

முதலில் வந்த 'புதுவை தமிழ்நெஞ் சனுக்கான' கவிதையைப் பார்த்தேன். தாராமதியில் அவர் உங்களைக் குறித்து எழுதியுள்ளார் என்பதால், அதிலேயே அக்கவிதை வருவது நல்லது எனத் தர்க்கரீதியில் பார்க்கிறீர்கள். அம்மாதிரி கவிதை இன்னும் பரவலான வினியோகப் பரப்புக் கொண்ட சிற்றிதழ், பேரிதழில் இடம்பெறுவது பயனுடையதாகும்.. முடிந்தவரை கவிதை எழுதுங்கள். அனுப்புங்கள். கவிதை – எழுத்து வாழ்க்கையாகிவிட்ட ஒருவரிடம் ஓசியில் கவிதை பெறுவது சங்கடமாகத்தான் இருக்கிறது.

மு.இராமரத்நம்

*

மு.முருகேஷ்

# நூற்றாண்டில் மீண்டும் சந்திப்பேன்...



எண்பதுகளின் தொடக்கத்தில் கவிதைகள் மீதான காதலோடு, எந்நேரமும் கவிதைப் புத்தகங்களுடனே உறவாடிக்கொண்டிருந்த காலம். அப்போதுதான் கலாப்ரியாவின் கவிதைகளுடன் எனக்கு அறிமுகம் உண்டானது. 1985இல் வெளியான கலாப்ரியாவின் 'சுயம்வரம் மற்றும் கவிதைகள்' நூலைத்தான் முதலில் வாசித்தேன். பிறகு சிற்றிதழ்களின் வழியாகவும், பிற கவிதை நூல்களின் மூலமாகவும் அவரது கவிதைகளைத் தொடர்ந்து வாசித்தேன்.

கவிஞர் கலாப்ரியாவை எனக்கு மிக நெருக்கமான கவிஞராக ஆக்கியது இந்தக் கவிதைதான்;

'கொலு வைக்கும் வீடுகளில்
ஒரு குத்து சுண்டல்
அதிகம் கிடைக்குமென்று
தங்கச்சி பாப்பாக்களைத்
தூக்க முடியாமல்
தூக்கி வரும்
அக்காக் குழந்தைகள்.'

நான்கு அக்காக்கள், மூன்று அண்ணன்களோடு கடைக்குட்டியாய்ப் பிறந்த என்னை, இந்தக் கவிதை அப்படியே அணைத்துக்கொண்டது போலிருந்தது. புரட்டாசி மாதத்தில் நவராத்திரியையொட்டிக் கொலு வைக்கும் வீடுகளுக்கு என்னைத் தூக்கிப்போன என் அக்காக்களை நினைவூட்டியது இக்கவிதை.

தனது வங்கிப் பணி ஓய்வுக்குப் பின்னும், தனக்குப் பிடித்தமான இடைக்கால் கிராமத்தை விட்டுவராமல், தன்னை எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகன் என்றும், தி.மு.க. கட்சிக்காரன் என்றும் பொதுவெளியில் எப்போதும் வெளிப்படையாகச் சொல்லும் கலாப்ரியாவின் அந்த நேர்குணம் எனக்கு ரொம்பவே பிடித்தமானது.

கடந்த 2025 ஜூலை 27 அன்று சங்கரன்கோவிலில் நடைபெற்ற கலாப்ரியாவின் 80ஆவது பிறந்த நாள் மற்றும் நூல் வெளியீட்டு விழாவுக்கு நானும் சென்றிருந்தேன். கவிஞர்கள், எழுத்தாளர்களோடு உள்ளூர் பிரமுகர்களும் அரங்கு நிறைந்து பங்கேற்றிருந்த அந்தக் காட்சி, தமிழ்க் கவிஞரொருவருக்குக் கிடைத்த மக்கள் அங்கீகாரத்தை வெளிப்படுத்துவதாக எண்ணிப் பெருமிதமடைந்தேன்.

கலாப்ரியா நூற்றாண்டு விழாவிற்கு இதைவிட பன்மடங்கு மக்கள் திரள் அவரை வாழ்த்திட வரும். அதில் நானுமொருவனாய்க் கலந்திருப்பேன்.

*

நிலாகண்ணன்



ஆந்தை ஒரு
வெண்நிறக்கோடென
இரவின் குறுக்கே
பறந்து போகிறது.
எண்ணூறுக்குப்பிறகு
எண்ணிக்கையைத்
தவறவிட்ட நான்
மீண்டும்
முதல் நட்சத்திரத்திலிருந்து
ஆரம்பிக்கிறேன்.

•

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறைவாசிகளுக்கு
# புத்தக தானம் செய்வீர்...!



**#ஒரு_நூல்_புரட்சி**

“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரிய எண்ணத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு நூல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறது **இலக்கிய படைப்பு குழுமம்**.”

புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

இலக்கிய படைப்பு குழுமம்
#03, அஜந்தா டவர், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024.
Ph : +91 73388 97788

padaippu www.padaippu.com admin@padaippu.com